
# சோதிடத்திறவுகோல்




"ஆசீர்"

ஆசிர்வாதம் அச்சகம்
யாழ்ப்பாணம்.

161
ஆசீர்
SL-IPR

# சாதிடத் திறவு கோல்

(சோதிடக் குறிப்பை விளக்குவதற்கு உதவி செய்யும்
ஆரம்ப அறிவை வகுத்து விளக்கும் நூல்)

"ஆசிர்"

க. குமரன்

ஆசிர்வாதம் அச்சகம்
யாழ்ப்பாணம்
1986

முதலாவது — பதிப்பு:1974
இரண்டாம் பதிப்பு — 1986

விலை ரூபா 14-00

# முன்னுரை

சூரியன், சந்திரன், முதலிய கிரகங்களுக்கும் பூமிக்கும் உள்ள கவர்ச்சித் தொடர்பினால், பூமியில் உள்ள உயிரினங்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றிக் கணித்துக் கூறுகின்றது சோதிடக்கலை. இஃது அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றாகவும் உள்ளது.

உலகம் முழுவதிலும், இடத்துக்கிடம் ஏற்ற வகையில் மாற்றங்களோடு சோதிடக்கலை வளர்ந்துள்ளது. ஆயிரக்கணக்கான சோதிட நூல்கள் எண்ணற்ற மொழிகளில் எழுதப்பட்டு அச்சேறியுள்ளன. தினசரிச் செய்தித் தாள்களில் சோதிட விடயங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

நம் இலங்கைத் தீவிலும் சோதிடக்கலை வளம்பெற்றுள்ளதென்றே கூறலாம். ஒரு குழந்தை பிறந்தவுடன் சாதகக் குறிப்பு எழுதிவைக்கும் வழக்கம் பலுகிவருகின்றது என்று அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால் எழுதப்படும் சாதகக் குறிப்புகளை விளங்கிக் கொள்வர் மிகச் சிலரே அதற்குரிய காரணம் சோதிடக்கலைபற்றிய அடிப்படை அறிவைத்தானும் மக்கள் பெற்றுக்கொள்ளாமையேயாகும்.

சோதிடம் கணித்துப் பலன் கூறத்தக்க வகையில், உயர்ந்த அறிவு பெறும் நோக்கத்துடன் சோதிடக் கலையைப் பயிலாவிட்டாலும், அதன் ஆரம்ப அறிவைப் பெறுவதினால். சோதிடப் பலன் கூறுபவர்கள் சொல்பவற்றை இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும் என்பதை உணர வேண்டும்.

சித்திரம் வரையத் தெரியாதவர்கள் சித்திரத்தை இரசிப்பதுபோல, சோதிடப்பலன் சொல்லத் தக்க வகையிற் கற்காவிட்டாலும் ஆரம்ப சோதிட அறிவு பெற்றவர்கள் சோதிடப்பலன் கூறுபவர்களின் உண்மை பொய்யை அலசி ஆராய முடியும்.

சோதிட சம்பந்தமான ஆரம்ப அறிவைப் பெற்றுச் சோதிடத்தை விளங்கிக் கொள்வதற்கு உதவியாக இந்தச் ''சோதிடத் திறவு கோல்'' வெளிவருகின்றது.

சோதிடம் என்றவுடன் மலைக்கவேண்டாம். ஆறுதலாக, அமைதியாக பின்வரும் விடயங்களை வாசித்து, விளங்கி, மனதிற் பதித்துக் கொள்ளுங்கள், நீங்களும் 'சாதகம்' கணிக்கலாம். குறிப்பு எழுதலாம், சோதிட நூல்களை வாசித்து விளங்கிக் கொள்ளலாம்.

—''ஆசிரியர்''

# சோதிடத் திறவுகோல்

## பொருளடக்கம்

### I சோதிட வாய்ப்பாடுகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நாள் | 1 |
| 2. | மணி நிமிடம் | 2 |
| 3. | வாரம் | 3 |
| 4. | மாதம் | 3 |
| 5. | அயனம் | 4 |
| 6. | வருடம் | 4 |
| 7. | திதி | 5 |
| 8. | யோகம் | 7 |
| 9. | கரணம் | 7 |
| 10. | நட்சத்திரம் | 8 |
| 11. | இராசி | 10 |
| 12. | நவக்கிரகங்கள் | 13 |
| 13. | திரிகோண இராசிகள் | 15 |
| 14. | கேந்திர இராசிகள் | 15 |
| 15. | இராசிகளின் கிரக நட்பு முதலியன | 16 |
| 16. | கிரக சஞ்சார காலம் | 18 |
| 17. | சூரிய உதய நேரம் | 19 |
| 8. | பன்னிரு இராசிகளில் நட்சத்திரம் | 20 |
| 19. | கிரக மகாதிசைக் காலம் | 20 |
| 20. | மகாதிசையில் புத்தி விபரம் | 21 |
| 21. | பன்னிரு கிரக பாவங்கள் | 23 |
| 22. | கிரக சத்துரு மித்துரு | 24 |
| 23. | கிரக நோக்குப் பலன் | 24 |
| 24. | ஓரை விபரம் | 25 |
| 25. | முக்குண வேளை | 25 |
| 26. | கிரகங்கள் நன்மை தரும் இடங்கள் | 26 |
| 27. | இலக்கின முதல் பன்னிரண்டு வீடுகளின் பலன் | 26 |
| 28. | யோககாரர் | 26 |
| 29. | கோள்களின் தானவலிமை | 27 |
| 30. | மூலத்திரிகோண இராசிகள் | 27 |
| 31. | அதி உச்ச நீச பகைத் தானங்கள் | 27 |


### II சோதிடக் குறிப்பு எழுதுதல்


| | | |
|---|---|---|
| 1. | மாதிரிகைக் குறிப்புக்கு ஆயத்தம் செய்தல் | 28 |
| 2. | கிரக நிலை அமைத்தல் | 33 |
| 3. | நவாம்ச நிலை அமைத்தல் | 35 |
| 4. | சாதகக் குறிப்பு எழுதும் முறை | 37 |


### III சோதிடப் பலன் கூறுதல்


| | | |
|---|---|---|
| 1. | நாட் பலன் | 44 |
| 2. | மாதப் பலன் | 45 |
| 3. | நட்சத்திரப் பலன் | 45 |
| 4. | திதிப் பலன் | 58 |
| 5. | கரணப் பலன் | 59 |
| 6. | யோகப் பலன் | 60 |
| 7. | கால ஓரைப் பலன் | 62 |
| 8. | முக்குணவேளைப் பலன் | 62 |
| 9. | உதய இலக்கினப் பலன் | 62 |
| 10. | சந்திர இலக்கினப் பலன் | 66 |
| 11. | கிரகங்கள் இராசியில் இருக்கும் பலன் | 66 |


# சோதிடத் திறவுகோல்

முதலாவது திறவுகோல்

## சோதிட வாய்ப்பாடுகள்

சோதிட சம்பந்தமான விடயங்கள்பல ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடிய வகையில் வாய்பாடு உருவத்தில் அல்லது அட்டவணை உருவத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் அதி முக்கியமான விடயங்கள் இந்நூலில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மனனம் செய்து கொள்வது மிகவும் நல்லது.

### தலைப்பு 1. நாள் :

நாள்களை நாம் இரண்டு வகையாக நோக்கவேண்டும். அவை : i ஆங்கிலநாள் ii தமிழ்நாள்

i **ஆங்கிலநாள் :** ஒருநடு இரவு 12 மணிதொடக்கம் அடுத்த நடு இரவு 12 மணி வரை உள்ள 24 மணித்தியாலங்கள் ஆங்கில ஒரு நாளாகும்.

உதாரணம் : திங்கட்கிழமை இரவு 12 மணி தொடக்கம் செவ்வாய்க் கிழமை இரவு 12 மணி முடியவுள்ள காலம் செவ்வாய்க் கிழமையாகும். இப்படியே மற்றைய நாள்களும் வரும்.

ii **தமிழ் நாள் :** ஒரு சூரிய உதயம் தொடக்கம் அடுத்த சூரிய உதயம்வரை உள்ள 60 நாழிகை தமிழ் ஒரு நாளாகும்

உதாரணம் : திங்கட்கிழமை சூரிய உதயம் 6–05 மணிக்கு நடந்து அடுத்த சூரிய உதயமும் 6–05 மணிக்கு நடப்பின் இரண்டு

நேரங்களுக்கும் இடைப்பட்ட காலம் திங்கட்கிழமையாகும். இப்படியே மற்றைய நாள்களும் வரும்.

குறிப்பு : நடு இரவு 12 மணி தொடக்கம் மத்தியானம் 12 மணி வரையுள்ள நேரம் A. M. மணி என்றும், பகல் 12 மணி தொடக்கம் இரவு 12 மணி வரையுள்ள நேரம் P. M. மணி என்றும் கொள்ளப்படும். P. M. மணி எப்பொழுதும் தடித்த எழுத்தில் எழுதப்படும்.

உதாரணம் : முற்பகல் ஒன்பது மணி 15 நிமிடம் என்பது 9–15 A. M. என்றும்,

பிற்பகல் ஏழுமணி 40 நிமிடம் என்பது **7–40 P. M.** என்றும் எழுதப்படும்.

## தலைப்பு 2. மணி, நிமிடம் :

ஆங்கில ஒரு நாள் 24 மணி கொண்டது.

ஒரு மணி 60 நிமிடம் கொண்டது.

ஒரு நிமிடம் 60 செக்கன் கொண்டது.

தமிழ் ஒருநாள் 60 நாழிகை கொண்டது

ஒரு நாழிகை 60 விநாடி கொண்டது

ஒரு விநாடி 60 தற்பரை கொண்டது.

எனவே,

24 மணித்தியாலம் = 60 நாழிகை

1 மணித்தியாலம் = $2\frac{1}{2}$ நாழிகை

அல்லது 24 நிமிடம் = 1 நாழிகை

1 நிமிடம் = $2\frac{1}{2}$ விநாடி (2விநா. 30 தற்பரை)

குறிப்பு : 3 மணித்தியாலம் 15 நிமிடம் என்பதை நாழிகை, விநாடி ஆக்கினல்.

(அ) 3 மணி × $2\frac{1}{2}$ = $7\frac{1}{2}$ நாழிகை
15 நிமி ÷ 24 = $\frac{5}{8}$ நாழிகை
∴ $7\frac{1}{2} + \frac{5}{8}$ = $8\frac{1}{8}$ நாழிகை அல்லது
= 8 நாழிகை $7\frac{1}{2}$ விநாடி



(ஆ) 3 மணி × 60 = 180 நிமிடம்
15 நிமிடத்தைக் கூட்டினல் 180 + 15 = 195 நிமி.
195 ÷ 24 = $8\frac{1}{8}$ நாழிகை அல்லது
= 8 நாழிகை $7\frac{1}{2}$ விநாடி

(இ) 3 மணி × $2\frac{1}{2}$ = $7\frac{1}{2}$ நாழிகை
15 நிமி × $2\frac{1}{2}$ = $37\frac{1}{2}$ விநாடி = $\frac{1}{2}$ நாழி. $7\frac{1}{2}$ விநாடி
$7\frac{1}{2}$ + $\frac{1}{2}$ நாழி. $7\frac{1}{2}$ விநா. = 8 நாழிகை $7\frac{1}{2}$ விநாடி

## தலைப்பு 3. வாரம் :

ஏழு நாள்கள் கொண்டது ஒரு வாரமாகும்.

ஏழு நாள் களாவன : ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

## தலைப்பு 4. மாதம் :

நான்கு வாரங்கள் கொண்டது ஒருமாதமாகும். 12மாதங்கள் கொண்டது ஒரு வருடமாகும்.

மாதங்கள் ஆங்கில மாதம், தமிழ் மாதம் என இருவகைப் படும். ஆங்கில மாதங்கள் ஆங்கில உச்சரிப்பை தமிழில் எழுதுவதுமூலம் வழங்கப்படுகின்றன. எல்லா மாதங்களும் சமமான நாள்கள் கொண்டனவல்ல.

மாதங்களின் பெயர்களும், அவைகள் கொண்டுள்ள நாள்களின் தொகையும் பின்வருவனவாகும்:

| | ஆங்கில மாதம் | நாள் | தமிழ் மாதம் | நாள் |
|---|---|---|---|---|
| 1 | சனவரி | 31 | தை | 29 |
| 2 | பெப்ருவரி | 28 | மாசி | 30 |
| 3 | மார்ச் | 31 | பங்குனி | 30 |
| 4 | ஏப்றில் | 30 | சித்திரை | 31 |
| 5 | மே | 31 | வைகாசி | 31 |
| 6 | யூன் | 30 | ஆனி | 32 |
| 7 | யூலை | 31 | ஆடி | 32 |
| 8 | ஒகஸ்ற் | 31 | ஆவணி | 31 |
| 9 | செப்ரெம்பர் | 30 | புரட்டாதி | 30 |
| 10 | ஒக்ரோபர் | 31 | ஐப்பசி | 30 |
| 11 | நவம்பர் | 30 | கார்த்திகை | 29 |
| 12 | டிசெம்பர் | 31 | மார்கழி | 30 |
| | | 365 | | 365 |

குறிப்பு: *தமிழ் வருடம் சித்திரை மாதம் முதலாந் திகதி தொடங்கும். அது பொதுவாக ஆங்கில ஏப்றில் மாதம் 13 அல்லது 14 ஆந் திகதியில் வருவதாகும்.*

கவனிப்பு ஆங்கில மாதங்கள் எந்த வருடத்திலும் ஒரே அளவான நாள்களைக் கொண்டிருக்கும். பெப்ருவரிமாதம் மட்டும் 'லீப்' வருடத்தில் 29 நாள்கள் கொண்டிருக்கும்.

தமிழ் மாதங்கள் ஒரு வருடத்தில் ஒரு அளவினவாகவும், மறுவருடத்தில் வேறுவித அளவினவாகவும் வரும்.

## தலைப்பு 5. அயனம்:

ஆறுமாதங்கள் கொண்ட காலப்பகுதி அயனம் எனப்படும். அயனம் இருவகையாகும்.

i உத்தராயனம்: இது தை தொடக்கம் ஆனிமாதம் வரையுள்ள 6 மாத காலமாகும்.

ii தட்சணாயனம்: இது ஆடி தொடக்கம் மார்கழி மாதம் வரையுள்ள 6 மாத காலமாகும்.

## தலைப்பு 6 வருடம்:

தமிழ் வருடங்கள் 60 உண்டு. ஆங்கிலத்தில் இவ்வித வருடப் பகுப்புகள் இல்லை.

நாள்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய் என்று சென்று சனியில் முடிந்து, திரும்ப ஞாயிறு என்று தொடங்குவது போலவும்,

மாதங்கள் சனவரி, பெப்ருவரி என்று சென்று டிசெம்பரில் முடிந்து திரும்ப சனவரி என்று தொடங்குவது போலவும்,

வருடங்கள் பிரபவ வருடம், விபவ வருடம், சுக்கில வருடம் என்று சென்று அட்சயவருடம் என்று முடிந்து, திரும்ப பிரபவ வருடம் என்று தொடங்கி நடக்கும்.



### 60 வருடங்களாவன

| | | |
|---|---|---|
| 1 பிரபவ வருடம் | 21 சர்வசித்து வருடம் | 41 பிலவங்க வருடம் |
| 2 விபவ ,, | 22 சர்வதாரி ,, | 42 கீலக ,, |
| 3 சுக்கில ,, | 23 விரோதி ,, | 43 சௌமிய ,, |
| 4 பிரமோதூத ,, | 24 விக்குறுதி ,, | 44 சாதாரண ,, |
| 5 பிரசோற்பத்தி | 25 கர ,, | 45 விரோதிகிருது ,, |
| 6 ஆங்கிரச ,, | 26 நந்தன ,, | 46 பரிதாபி ,, |
| 7 சிறீமுக ,, | 27 விசய ,, | 47 பிரமாதீச ,, |
| 8 பவ ,, | 28 சய ,, | 48 ஆனந்த ,, |
| 9 யுவ ,, | 29 மன்மத ,, | 49 இராட்சத ,, |
| 10 தாது ,, | 30 துன்முகி ,, | 50 நள ,, |
| 11 ஈசுவர ,, | 31 ஏவிளம்பி ,, | 51 பிங்கள ,, |
| 12 வெகுதான்ய ,, | 32 விளம்பி ,, | 52 காளயுக்தி ,, |
| 13 பிரமாதி ,, | 33 விகாரி ,, | 53 சித்தாத்திரி ,, |
| 14 விக்கிரம ,, | 34 சார்வரி ,, | 54 ரௌத்திரி ,, |
| 15 விசு ,, | 35 பிலவ ,, | 55 துன்மதி ,, |
| 16 சித்திரபானு ,, | 36 சுபகிருது ,, | 56 துந்துபி ,, |
| 17 சுபானு ,, | 37 சோபகிருது ,, | 57 ருத்ரோற்காரி ,, |
| 18 தாரண ,, | 38 குரோதி ,, | 58 ரத்தாட்சி ,, |
| 19 பார்த்திப ,, | 39 விசுவாவசு ,, | 59 குரோதன ,, |
| 20 விய ,, | 40 பராபவ ,, | 60 அட்சய ,, |

## தலைப்பு 7. திதி:

பௌர்ணமி அல்லது பூரணை முடிந்து அமாவாசை வரையுள்ள 15 நாள்கள் பதினைந்து பெயர்களால் குறிப்பிடப்படும். இதுபோலவே அமாவாசை முடிந்து பௌர்ணமி அல்லது பூரணை வரையுள்ள 15 நாள்கள் மேற்படி பதினைந்து பெயர்களால் குறிப்பிடப்படும்.

பௌர்ணமி முடிந்து

| | | |
|---|---|---|
| முதலாவது | நாள் | பிரதமை |
| 2 ஆவது | ,, | துவிதியை |
| 3 ,, | ,, | திரிதியை |
| 4 ,, | ,, | சதுர்த்தி |
| 5 ,, | ,, | பஞ்சமி |
| 6 ,, | ,, | சஷ்டி |
| 7 ,, | ,, | சப்தமி |
| 8 ,, | ,, | அட்டமி |
| 9 ,, | ,, | நவமி |
| 10 ,, | ,, | தசமி |
| 11 ,, | ,, | ஏகாதசி |
| 12 ,, | ,, | துவாதசி |
| 13 ,, | ,, | திரயோதசி |
| 14 ,, | ,, | சதுர்த்தசி |
| 15 ,, | ,, | அமாவாசை |

அமாவாசை முடிந்த பின்பு, திரும்ப பிரதமை என்று தொடங்கி நடந்து பௌர்ணமியில் முடிவடையும்.

குறிப்பு : (1) பௌர்ணமியின் பின்வரும் திதிகள் தேய்பிறைத் திதிகள் அல்லது அமரபடசத் திதிகள் என்றும் அமாவாசையின் பின்வரும் திதிகள் பூர்வபட்சத் திதிகள் அல்லது சுக்கில பட்சத்திதிகள் அல்லது வளர் பிறைத் திதிகள் என்றும் கூறப்படும்.

(2) மாதங்கள் 29, 30, 31, 32 நாட்களைக் கொண்டனவாக விகற்பமுறுவதாலும், சூரியோதயம் முந்திப்பிந்தி வருவதாலும், இராசிமானம் கூடிக் குறைந்து இருத்தலாலும் திதிகள் பதினைந்தும் சமனான கால அளவைக் கொண்டிராமல் வித்தியாசமான கால அளவைக் கொண்டனவாக அமைகின்றன.



## தலைப்பு 8. யோகம்:

சூரிய சந்திரரைக் கொண்டு ஒவ்வொன்றும் 13 கலை 20 பாகை அளவினதாகக் கணிக்கப்படும் 27 காலப் பகுப்புகள் யோகங்கள் என்று கூறப்படும்.

**யோகங்கள் 27 பின்வருவனவாகும் :**

| | | |
|---|---|---|
| 1 விஷ்கம்பம் | 10 கண்டம் | 19 பரிகம் |
| 2 பிரீதி | 11 விருத்தி | 20 சிவம் |
| 3 ஆயுசுமான் | 12 துருவம் | 21 சித்தம் |
| 4 சௌபாக்கியம் | 13 வியாகாதம் | 22 சாத்தியம் |
| 5 சோபனம் | 14 அரிசனம் | 23 சுபம் |
| 6 அதிகண்டம் | 15 வச்சிரம் | 24 சுப்பிரம் |
| 7 சுகர்மம் | 16 சித்தி | 25 பிராமியம் |
| 8 திருதி | 17 வியதீபாதம் | 26 மாகேந்திரம் |
| 9 சூலம் | 18 வரியான் | 27 வைதிருதி |

## தலைப்பு 9. கரணம்:

திதியை ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்படும் பதினொரு காலப்பகுதிகள் கரணம் எனப்படும். அவற்றின் பெயர்களும் உருவமும் பின்வருவனவாகும்.

| | பெயர் | உருவம் |
|---|---|---|
| 1 | பவம் | சிங்கம் |
| 2 | பாலவம் | புலி |
| 3 | கௌலவம் | பன்றி |
| 4 | தைதிலம் | கழுதை |
| 5 | கரசை | யானை |
| 6 | வணிசம் | எருது |
| 7 | பத்திரை (விட்டி) | கோழி |
| 8 | சகுனி | காகம் |
| 9 | சதுர்ப்பாதம் | நாய் |
| 10 | நாகவம் | பாம்பு |
| 11 | கிம்ஸ்துக்கினம் | புழு |

## தலைப்பு 10 நட்சத்திரம்:

பன்னிரண்டு இராசிகளினூடே சந்திரன் பயணம் செய்யும் 13 பாகை 20 கலை அளவு உடைய 27 பகுதிகளை நட்சத்திரங்கள் கொண்டனவாகும். கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் முறைப்படி நட்சத்திரங்கள் ஒழுங்கு முறையாக நடக்கும்.

(அ) நட்சத்திரங்கள் 27 பின்வருவனவாகும்

| | |
|---|---|
| 1 அச்சுவினி | 15 சுவாதி |
| 2 பரணி | 16 விசாகம் |
| 3 கார்த்திகை | 17 அனுட்டம் |
| 4 ரோகினி | 18 கேட்டை |
| 5 மிருகசீரிடம் | 19 மூலம் |
| 6 திருவாதிரை | 20 பூராடம் |
| 7 புனர்பூசம் | 21 உத்திராடம் |
| 8 பூசம் | 22 திருவோணம் |
| 9 ஆயிலியம் | 23 அவிட்டம் |
| 10 மகம் | 24 சதயம் |
| 11 பூரம் | 25 பூரட்டாதி |
| 12 உத்திரம் | 26 உத்தரட்டாதி |
| 13 அத்தம் | 27 ரேவதி |
| 14 சித்திரை | |

பன்னிரண்டு இராசிகள் 360 பாகையாதலின், ஓர் இராசி 30 பாகையாகும். ஒரு நட்சத்திரம் 13 பாகை 20 கலை அளவாக 30 பாகையையும் கடக்க 2¼ நட்சத்திர கால அளவு செல்லும்.



(ஆ) நட்சத்திர ஆண், பெண் முதலியன :

| நட்சத்திரப் பெயர் | சவ்விய நட்சத்திரம் | அயசவ்விய நட்சத்திரம் | ஆண் நட்சத்திரம் | பெண் நட்சத்திரம் | அலி நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|
| 1 அச்சுவினி | அச்சுவினி | — | அச்சுவினி | — | — |
| 2 பரணி | பரணி | — | — | பரணி | — |
| 3 கார்த்திகை | கார்த்திகை | — | — | கார்த்திகை | — |
| 4 ரோகிணி | — | ரோகிணி | — | ரோகிணி | — |
| 5 மிருகசிரிடம் | — | மிருகசிரிடம் | — | — | மிருகசிரிடம் |
| 6 திருவாதிரை | — | திருவாதிரை | — | திருவாதிரை | — |
| 7 புநர்பூசம் | புநர்பூசம் | — | புநர்பூசம் | — | — |
| 8 பூசம் | பூசம் | — | பூசம் | — | — |
| 9 ஆயிலியம் | ஆயிலியம் | — | — | ஆயிலியம் | — |
| 10 மகம் | — | மகம் | — | மகம் | — |
| 11 பூரம் | — | பூரம் | — | பூரம் | — |
| 12 உத்தரம் | — | உத்திரம் | — | உத்திரம் | — |
| 13 அத்தம் | அத்தம் | — | அத்தம் | — | — |
| 14 சித்திரை | சித்திரை | — | — | சித்திரை | — |
| 15 சுவாதி | சுவாதி | — | — | சுவாதி | — |
| 16 விசாகம் | — | விசாகம் | — | விசாகம் | — |
| 17 அனுட்டம் | — | அனுட்டம் | அனுட்டம் | — | — |
| 18 கேட்டை | — | கேட்டை | — | கேட்டை | — |
| 19 மூலம் | மூலம் | — | — | — | மூலம் |
| 20 பூராடம் | பூராடம் | — | — | பூராடம் | — |
| 21 உத்திராடம் | உத்திராடம் | — | — | உத்திராடம் | — |
| 22 திருவோணம் | — | திருவோணம் | திருவோணம் | — | — |
| 23 அவிட்டம் | — | அவிட்டம் | — | அவிட்டம் | — |
| 24 சதயம் | — | சதயம் | — | — | சதயம் |
| 25 பூரட்டாதி | பூரட்டாதி | — | பூரட்டாதி | — | — |
| 26 உத்திரட்டாதி | உத்திரட்டாதி | — | உத்திரட்டாதி | — | — |
| 27 ரேவதி | ரேவதி | — | — | ரேவதி | — |
| | 15 | 12 | 8 | 16 | 3 |

## (இ) நட்சத்திர அதிதேவதை முதலியன :

| நட்சத்திரம் | தேவதை | கணம் | யோனி | விருட்சம் | நட்சத்திர பாத எழுத்து |
|---|---|---|---|---|---|
| 1 அச்சுவினி | சரஸ்வதி | தேவ | ஆண்குதிரை | காஞ்சிரை | சு சே சோ ல |
| 2 பரணி | துர்க்கை | மனுட | ஆண்யானை | நெல்லி | லி லு லே லோ |
| 3 கார்த்திகை | அக்கினி | இராட்சத | பெண் ஆடு | அத்தி* | அ இ உ ஏ |
| 4 ரோகிணி | பிரமா | மனுட | ஆண்பாம்பு | நாவல் | ஒ வ வி வு |
| 5 மிருகசீரிடம் | சந்திரன் | தேவ | பெண்பாம்பு | கருங்காலி | வே வோ க கி |
| 6 திருவாதிரை | உருத்திரன் | மனுட | பெண்நாய் | செங்காலி | கு க ங ச |
| 7 புனர்பூசம் | அதிதி | தேவ | பெண்பூனை | மூங்கில் | கே கோ ஹ ஹி |
| 8 பூசம் | வியாழன் | தேவ | ஆண் ஆடு | அரசு* | ஹீ ஹே ஹே ட |
| 9 ஆயிலியம் | ஆதிசேடன் | இராட்சத | ஆண்பூனை | புன்னை* | டி டு டே டோ |
| 10 மகம் | சுக்கிரன் | இராட்சத | ஆண்எலி | ஆல்* | ம மி மு மே |
| 11 பூரம் | பார்வதி | மனுட | பெண்எலி | பலாசு | மோ ட டீ டு |
| 12 உத்தரம் | சூரியன் | மனுட | ஆண்மாடு | அலரி | டே டோ ப பி |
| 13 அத்தம் | சாத்தா | தேவ | பெண்எருமை | ஆத்தி | பு ஷ ண ட |
| 14 சித்திரை | துவட்டா | இராட்சத | பெண்புலி | வில்வம் | பே போ ர ரி |
| 15 சுவாதி | வாயு | தேவ | ஆண்எருமை | மருது | ரு ரே ரோ த |
| 16 விசாகம் | ஸ்கந்தர் | இராட்சத | ஆண்புலி | விளா | தி து தே தோ |
| 17 அனுட்டம் | இலக்குமி | தேவ | பெண்மான் | மகிழ | ந நி நு நே |
| 18 கேட்டை | இந்திரன் | இராட்சத | ஆண்மான் | பராய்* | நோ ய யி யு |
| 19 மூலம் | அசுரர் | இராட்சத | ஆண்நாய் | மரா* | யே யோ ப பி |
| 20 பூராடம் | வருணன் | மனுட | ஆண்குரங்கு | வஞ்சி* | பு த ப ட |
| 21 உத்திராடம் | விநாயகர் | மனுட | ஆண்கிரி | பலா* | பே தோ ஜ ஜி |
| 22 திருவோணம் | விஷ்ணு | தேவ | பெண்குரங்கு | எருக்கு* | கி கு கே கோ |
| 23 அவிட்டம் | வசுக்கள் | இராட்சத | பெண்சிங்கம் | வன்னி | க கி கு கே |
| 24 சதயம் | யமன் | இராட்சத | பெண்குதிரை | கடம்பு | கோ ஸ ஸி,ஸு |
| 25 பூரட்டாதி | குபேரன் | மனுஷ | ஆண்சிங்கம் | தேமா* | ஸே ஸோ த தி |
| 26 உத்திரட்டாதி | காமதேனு | மனுஷ | பெண்மாடு | வேம்பு | து ட ச த |
| 27 ரேவதி | சனி | தேவ | பெண்யானை | இலுப்பை* | தே தோ ச சி |

* பாலுள்ள மரங்கள்

## தலைப்பு 11 இராசி :

கிரகங்கள் வலம்வரும் பாதை, மேடம் முதலிய பன்னிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் 12 இராசிகள் எனப்படும். இந்த இராசிகளில் கிரகங்கள் அமையும் தன்மையைக் கொண்டு கிரகங்களின் தாக்கம் எவ்வாறு நடைபெறுகின்றது என்று கவனிக்கப்படுகின்றது.



## 11 (ஆ) இராசிகளின் பல்வேறு அம்சங்கள்:

1, இராசிப் பெயர்கள்
2, ,, மாதங்கள்
3. ,, உருவங்கள்
4. ,, அங்கங்கள்
5. ,, திக்கு
6. ,, நிறம்
7, இராசிச் சாதி
8. ,, சர, திர, உபயம்
9. ,, ஆண், பெண்
10. ,, ஒற்றை, இரட்டை
11. ,, கால்கள்
12. ,, இராசி மானம்

### 1. இராசிப் பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| மீனம் 12 | மேடம் 1 | இடபம் 2 | மிதுனம் 1 |
| கும்பம் 11 | (1) இராசிப் பெயர்கள் | | கர்க் கடகம் 4 |
| மகரம் 10 | | | சிங்கம் 5 |
| தனு 9 | விருச் சிகம் 8 | துலாம் 7 | கன்னி 6 |

### 2. இராசி மாதங்கள்

| | | | |
|---|---|---|---|
| பங்குனி மார்ச். ஏப் | சித்திரை ஏப்ரல். மே | வைகா. மே. யூன் | ஆனி யூன. யூலை |
| மாசி பெ. மார்ச் | (2) இராசி மாதங்கள் | | ஆடி யூலை. ஓக. |
| தை ஜன. பெப் | | | ஆவணி ஓகஸ்செப் |
| மார்க. டிசம். ஜன. | கார்த். நவம். டிச. | ஐப்பசி ஒக். நவ. | புரட். செப். ஒக். |

### 3. இராசி உருவங்கள்

| | | | |
|---|---|---|---|
| இரு மீன்கள் | வெள்ளாடு | எருது | பெண்ணும் ஆணும் |
| குடம் | (2) இராசி உருவங்கள் | | நண்டு |
| முதலை | | | சிங்கம் |
| வில் | தேள் | தராசு | கன்னிப் பெண் |

### 4. இராசி அங்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| பாதம் | தலை | முகம் | கழுத்து மார்பு |
| கணுக் கால் | (4) இராசி அங்கங்கள் | | தோள் இருதயம் |
| முழங் கால் | | | மார்பு வயிறு |
| தொடை | குறி லிங்கம் | முதுகு வயிறு | பக்கம் விலா |

* பொது விதி இது. ஆனால் இலக்கினத்தில் இருந்து தலை, முகம் என்று எடுக்க வேண்டும்.

5. இராசித் திக்கு

| | | | |
|---|---|---|---|
| வடக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |
| வடக்கு | (5) | | தெற்கு |
| வடக்கு | இராசித் திக்கு | | தெற்கு |
| மேற்கு | மேற்கு | மேற்கு | தெற்கு |

6. இராசி நிறம்

| | | | |
|---|---|---|---|
| பச்சை | செம்மை | வெண்மை | கருமை |
| பச்சை | (6) | | வெண்மை |
| கருமை | இராசி நிறம் | | செம்மை |
| செம்மை | பச்சை | வெண்மை | கருமை |

7. இராசிச் சாதி

| | | | |
|---|---|---|---|
| பலாயன் | வேளாளன் | இடையன் | சக்கிலியன் |
| குயவன் | (7) | | கன்னான் |
| வண்ணான் | இராசிச் சாதி | | பிராமணன் |
| தட்டான் | வேடன் | செட்டி | நாவிதன் |

8. இராசிச் சர, திர, உபயம்

| | | | |
|---|---|---|---|
| உபயம் | சரம் | திரம் | உபயம் |
| திரம் | (8) | | சரம் |
| சரம் | இராசிச் சர, திர, உபயம் | | திரம் |
| உபயம் | திரம் | சரம் | உபயம் |

9. இராசி ஆண், பெண்

| | | | |
|---|---|---|---|
| பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ஆண் | (9) | | பெண் |
| பெண் | இராசி ஆண், பெண் | | ஆண் |
| ஆண் | பெண் | ஆண் | பெண் |

10 இராசி ஒற்றை, இரட்டை

| | | | |
|---|---|---|---|
| இரட்டை | ஒற்றை | இரட்டை | ஒற்றை |
| ஒற்றை | (10) | | இரட்டை |
| இரட்டை | இராசி ஒற்றை இரட்டை | | ஒற்றை |
| ஒற்றை | இரட்டை | ஒற்றை | இரட்டை |



11. இராசிக் கால்கள்

| | | | |
|---|---|---|---|
| பறக்கும் இராசி | நாற்கால் இராசி | நாற்கால் இராசி | இரு கால் இராசி |
| இரு கால் இராசி | (11) | | பல கால் இராசி |
| பறக்கும் இராசி | இராசிக் கால்கள் | | நாற்கால் இராசி |
| நாற்கால் இராசி | பல கால் இராசி | இரு கால் இராசி | இரு கால் இராசி |

12. இராசி மானம் (யாழ்ப்பாணம்)

| | | | |
|---|---|---|---|
| 4.16 | நாழி விநாடி 4.35 | 5.07 | 5.27 |
| 4.23 | (12) இராசி மானம் | | 5.19 |
| 4.51 | (யாழ்ப்பாணம்) | | 5.01 |
| 5.20 | 5.26 | 5.09 | 4.56 |

## தலைப்பு: 12 (அ) நவக்கிரகங்கள்:

பன்னிரண்டு இராசிகளையும் ஆட்சிசெய்யும் ஒன்பது கோள்கள் எனப்படும் நவக்கிரகங்கள் பின்வருவனவாகும்;

1. சூரியன் :- (இரவி, பானு, தினகரன், ஆதவன், பரிதி)
2. சந்திரன் :- (மதி, திங்கள், அம்புலி, இந்து, சசி)
3. செவ்வாய் :- (அங்காரகன், தீக்கோன், குசன், சேய்)
4. புதன் :- (கணக்கன், வணிகன்)
5. வியாழன் :- (குரு, பொன்னவன்)
6. வெள்ளி :- (சுக்கிரன், புகர்)
7. சனி :- (மந்தன், முடவன், கரியவன்)
8. ராகு :- (கரும்பாம்பு, கருநாகம்)
9. கேது :- (செம்பாம்பு, செந்நாகம்)

குறிப்பு:- இவற்றைவிட இன்று, யூரனஸ், நெப்ரியூன், புளுட்டோ என்னும் கிரகங்கள் பற்றியும் அறிதல் வேண்டும்.

### (ஆ) நவக்கிரகங்களின் ஜாதி, பால், நிறம் முதலியன

| | | |
|---|---|---|
| 1. ஜாதி | 9. இரத்தினம் | 17. பிணிகள் |
| 2. பால் | 10. லோகம் | 18. புஷ்பம் |
| 3. நிறம் | 11. ஊன் | 19. சர, திர, உபயம் |
| 4. வடிவம் | 12. தானியம் | 20. ஆசனம் |
| 5. மொழி | 13. திக்கு | 21. சமுத்துக்கள் |
| 6. அங்கங்கள் | 14. சுவை | 22. பூதங்கள் |
| 7. வாகனம் | 15. திரையம் | 23. தேவதை |
| 8. குணம் | 16. முக்குணம் | 24. சுபாசுபர் |

| கிரகம் | 1 ஜாதி | 2 பால் | 3 நிறம் | 4 வடிவம் | 5 மொழி | 6 அங்கங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 சூரியன் | அரசன் | ஆண் | பவளம் | சமம் | சமஸ்கிருதம் | மார்பு இருதய |
| 2 சந்திரன் | வைசியன் | பெண் | தவளம் | குறியர் | தமிழ் | முகம் |
| 3 செவ்வாய் | அரசன் | ஆண் | சிவப்பு | குறியர் | தெலுங்கு | தலை |
| 4 புதன் | வைசியன் | அலி | பச்சை | நெடியர் | தமிழ் | கழுத்து முதுகு |
| 5 வியாழன் | பிர்மசாதி | ஆண் | பொன்நிற. | நெடியர் | சமஸ்கிருதம் | வயிறு |
| 6 வெள்ளி | பிர்மசாதி | பெண் | வெண்மை | சமம் | சமஸ்கிருதம் | குய்யம், அரை |
| 7 சனி | சூத்திரன் | அலி | கருமை | குறியர் | அன்னியமொழி | தொடை |
| 8 ராகு | சங்கிரமசாதி | பெண் | கருமை | நெடியர் | ,, | முழங்கால் |
| 9 கேது | சங்கிரமசாதி | அலி | செம்மை | நெடியர் | ,, | உள்ளங்கால் |

| கிரகம் | 7 வாகனம் | 8 குணம் | 9 இரத்தினம் | 10 லோகம் | 11 ஊண் | 12 தானியம் |
|---|---|---|---|---|---|---|
| 1 சூரியன் | தேர் | குரூரன் | மாணிக்கம் | சூரியகாந்தம் | சுடுகை | கோதுமை |
| 2 சந்திரன் | முத்துவிமான. | செளமியன் | முத்து | சந்திரகாந்தம் | குளிர்ச்சி | நெல்லு |
| 3 செவ்வாய் | அன்னம் | குரூரன் | பவளம் | செம்பு | சுடுகை | துவரை |
| 4 புதன் | குதிரை | செள்மியன் | மரகதம் | பித்தளை | சீதோஷ, | பச்சைப்பய |
| 5 வியாழன் | யானை | ,, | புஷ்பராகம் | பொன் | சுடுகை | கடலை |
| 6 வெள்ளி | கருடன் | ,, | வைரம் | வெள்ளி | குளிர்ச்சி | மொச்சை |
| 7 சனி | நாகம் | குரூரன | நீலம் | இரும்பு | சீதோஷ | எள்ளு |
| 8 ராகு | ஆடு | ,, | கோமேதகம் | அலுமினியம் | ,, | உழுந்து |
| 9 கேது | சிங்கம் | ,, | வைடூரியம் | அலுமினியம் | ,, | கொள்ளு |

| கிரகம் | 13 திக்கு | 14 சுவை | 15 திரையர் | 16 குணம் | 17 பிணிகள் | 81 புஸ்பம் |
|---|---|---|---|---|---|---|
| 1 சூரியன் | நடு கிழ | கார்ப்பு | ஸ்திரம் | இராசதம் | பித்தம் | செந்தாமரை |
| 2 சந்திரன் | தென்கிழக்கு | தித்திப்பு | சரம் | சாத்விகம் | சிலேற்மம் | வெள்ளல்லி |
| 3 செவ்வாய் | தெற்கு | துவர்ப்பு | சரம் | இராசதம் | பித்தம் | சண்பகம் |
| 4 புதன் | வடகிழக்கு | உவர்ப்பு | உபயம் | சாத்விகம் | வாதம் | வெண்காந்தன் |
| 5 வியாழன் | வடக்கு | தித்திப்பு | உபயம் | சாத்விகம் | வாதம் | முல்லை |
| 6 வெள்ளி | கிழக்கு | தித்திப்பு | ஸ்திரம் | இராசதம் | சிலேற்மம் | வெண்டாமரை |
| 7 சனி | மேற்கு | கைப்பு | உபயம் | தாமத | வாதம் | கருங்குவளை |
| 8 ராகு | தென்மேற்கு | புளிப்பு | சரம் | தாமத | பித்தம் | மந்தாமரை |
| 9 கேது | வடமேற்கு | புளிப்பு | சரம் | தாமத | பித்தம் | செவ்வல்லி |

| | 19 சர, திர உபயம் | 20 ஆசனம் | 21 சமுத்துக்கள் | 22 பூதங்கள் | 23 தேவதை |
|---|---|---|---|---|---|
| 1 சூரியன் | திரம் | வட்ட வடிவம் | எருக்கு | தேயு | ருத்திரன் |
| 2 சந்திரன் | சரம் | சவுக்க வடிவம் | முள் முருக்கு | அப்பு | விஷ்ணு |
| 3 செவ்வாய் | சரம் | திரிகோண வடிவம் | கருங்காலி | பிருதுவி | சுப்பிர |
| 4 புதன் | உபயம் | அம்பு வடிவம் | நாயுருவி | வாயு | விஷ்ணு |
| 5 வியாழன் | உபயம் | நீண்டசவுக்கம் | அரசு | தேயு | பிரமா |
| 6 வெள்ளி | திரம் | ஐங்கோணம் | அத்தி | அப்பு | துர்க்கை |
| 7 சனி | உபயம் | உள் வடிவம் | வன்னி | ஆகாயம் | யமன் |
| 8 ராகு | சரம் | கொடி வடிவம் | அறுகு | ஆகாயம் | பத்திரகாளி |
| 9 கேது | சரம் | முச்சில் வடிவம் | கருப்பை | ஆகாயம் | இந்திரன் |

24. சுபாசுபர் : சுபர் : வளர்பிறைச் சந்திரன், சுபர் கூடிய புதன். குரு, சுக்கிரன்

அசுபர் : சூரியன், தேய்பிறைச் சந்திரன், செவ்வாய், பாபர் கூடிய புதன், சனி, இராகு, கேது

## தலைப்பு: 13. திரிகோண இராசிகள் :

உதய இலக்கினம், சந்திர இலக்கினம், அல்லது ஒவ்வொரு கிரகமும் இருந்தஇடமாகிய 1ஆம் இடம், அதிலிருந்து 5ஆம் இடம், 9 ஆம் இடம் என்பன திரிகோண இராசிகள் எனப்படும்.

## தலைப்பு: 14. கேந்திர இராசிகள் :

உதய இலக்கினம், சந்திரலக்னம், அல்லது ஒவ்வொரு கிரகமும் இருந்த இடமாகிய 1 ஆம் இடம் அதிலிருந்து 4ஆம் இடம், 7ஆம் இடம், 10 ஆம் இடம் என்பன கேந்திர இராசிகள் எனப்படும். (1, 4, 7, 10)

குறிப்பு: 1. 1, 5, 9 திரிகோணம் எனப்படும்.

2. 1, 4, 7, 10 கேந்திரம் எனப்படும். கேந்திரத் தானங்களுக்கதிபதிகளாகிய கிரகங்கள் பாலியத்தில் பலத்தைக் கொடுக்கும்.

3. 2, 5, 8, 11 ஆகிய இடங்கள் பணபரம் எனப்படும். பணபரத்தானங்களுக்கு அதிபதிகளாகிய கிரகங்கள் யெளவனத்தில் பலத்தைக் கொடுக்கும்.

4. 3, 6, 9, 12 ஆகிய இடங்கள் ஆபோக்கலியம் எனப்படும். ஆபோக்கலியத் தானங்களுக்கு அதிபதிகளாகிய கிரகங்கள் விருத்த வயதில் பலன் கொடுக்கும்.

## தலைப்பு: 15 இராசிகளில் நவகிரங்களின் நட்பு, ஆட்சி, முதலியன.

**(அ) ஒவ்வோர் இராசியிலும் ஆட்சி, உச்சம், நீசம் பெற்ற கிரக விபரம்:**

**1. ஆட்சி**

| | | | |
|---|---|---|---|
| வியாழ (கேது) | செவ் | வெள்ளி | புதன் |
| சனி | (1)<br>ஆட்சி | | சந்திர |
| சனி | | | சூரியன் |
| வியாழ | செவ் | வெள்ளி | புதன் (ராகு) |

**5. உச்சம்**

| | | | |
|---|---|---|---|
| சுக்கி | சூரியன் | சந்திர | — |
| — | (2)<br>உச்சம் | | வியாழ |
| செவ் | | | — |
| — | ராகு<br>கேது | சனி | புதன் |

இராகு கேதுகளுக்கு ஆட்சியில்லையென்றும் கூறுவர்

**3. நீசம்**

| | | | |
|---|---|---|---|
| புதன் | சனி | ராகு<br>கேது | — |
| — | (3)<br>நீசம் | | செவ் |
| வியாழ | | | — |
| — | சந்திர | சூரிய | சுக்கிர |

**4. பகை**

| | | | |
|---|---|---|---|
| செவ் | சந்<br>குரு<br>ராகு<br>கேது | சூரியன் | சூரியன் |
| சூரிய:<br>சந்திர<br>செவ்<br>ரா: கே: | (4)<br>பகை | | சூரியன்<br>சுக<br>ராகு கேது |
| சூரிய<br>சந்திர | | | சந் செவ்<br>புத சுக்கி<br>சனி ராகு<br>கேது |
| செவ் | சூரியன்<br>குரு<br>சனி | சந்தி | சூரியன் |

குறிப்பு : (i) ஒரு கிரகம் உச்சம் பெற்ற இடத்துக்கு எதிரே (7ஆம் இடம்) நீசம் பெறுவதை அல்லது நீசம் பெற்ற இடத்துக்கு 7ஆம் இடத்தில் உச்சம் பெறுவதைக் கவனித்திடுக



(ii) **கிரக வலிமை**

1. உச்சம் = 60 கலை வலிமை
2. ஆட்சி = 30 ,, வலிமை
3. நட்பு = 15 ,, ,,
4. பகை = $7\frac{1}{2}$ ,, ,,
5. நீசம் = $3\frac{1}{2}$ ,, ,,

**(ஆ) பன்னிரு இராசிகளில் நவக்கிரக ஆட்சி உச்சம், முதலியன :**

| | | | |
|---|---|---|---|
| **மீனம்**<br>சூரி - நட்பு<br>சந்தி – நட்பு<br>செவ் - பகை<br>புதன் - நீசம்<br>குரு – ஆட்சி<br>சுக்கி - உச்சம்<br>சனி - நட்பு<br>*ரா.கே. நட்பு | **மேடம்**<br>சூரியன் - உச்சம்<br>சந்திர - பகை<br>செவ்வா - ஆட்சி<br>புதன் - நட்பு<br>குரு - பகை<br>சுக்கிரன் - நட்பு<br>சனி - நீசம்<br>ரா. கேது. பகை | **இடபம்**<br>சூரியன் - பகை<br>சந்திரன் - உச்சம்<br>செவ்வா - நட்பு<br>புதன் - நட்பு<br>குரு - நட்பு<br>சுக்கிரன் - ஆட்சி<br>சனி - நட்பு<br>ரா. கேது - நீசம் | **மிதுனம்**<br>சூரி - பகை<br>சந்தி - நட்பு<br>செவ் - நட்பு<br>புதன் - ஆட்சி<br>குரு - நட்பு<br>சுக்கி - நட்பு<br>சனி - நட்பு<br>ரா, கே. நட்பு |
| **கும்பம்**<br>சூரி – பகை<br>சந்தி - பகை<br>செவ் - பகை<br>புதன் - நட்பு<br>குரு - நட்பு<br>சுக்கி - நட்பு<br>சனி - ஆட்சி<br>ரா. கே. பகை | நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம்<br>என்பன | | **கர்க்கடகம்**<br>சூரி - பகை<br>சந்தி - ஆட்சி<br>செவ் - நீசம்<br>புதன் - பகை<br>குரு - உச்சம்<br>சுக்கி - பகை<br>சனி - பகை<br>ரா. கே-பகை |
| **மகரம்**<br>சூரி - பகை<br>சந்தி - பகை<br>செவ்-உச்சம்<br>புதன்-நட்பு<br>குரு-நீசம்<br>சுக்சி - நட்பு<br>சனி – ஆட்சி<br>ரா. கே. நட்பு | | | **சிங்கம்**<br>சூரி - ஆட்சி<br>சந்தி - பகை<br>செவ் - பகை<br>புதன் - பகை<br>குரு - நட்பு<br>சுக்கி – பகை<br>சனி - பகை<br>ரா. கே-நட்பு |
| **தனு**<br>சூரி - நட்பு<br>சந்தி - நட்பு<br>செவ் - பகை<br>புதன் - நட்பு<br>குரு - ஆட்சி<br>சுக்கி - நட்பு<br>சனி - நட்பு<br>ரா, கே- நட்பு | **விருச்சிகம்**<br>சூரியன் - பகை<br>சந்திரன் - நீசம்<br>செவ்வா - ஆட்சி<br>புதன் - நட்பு<br>குரு - பகை<br>சுக்கிரன் - நட்பு<br>சனி - பகை<br>ரா. கேது-உச்சம் | **துலாம்**<br>சூரியன் - நீசம்<br>சந்திரன் - பகை<br>செவ்வா - நட்பு<br>புதன் - நட்பு<br>குரு - நட்பு<br>சுக்கிரன் - ஆட்சி<br>சனி - உச்சம்<br>ரா, கேது - நட்பு | **கன்னி**<br>சூரி - பகை<br>சந்தி - நட்பு<br>செவ் - நட்பு<br>புதன் ஆட்,உச்<br>குரு - நட்பு<br>சுக்கி - நீசம்<br>சனி - நட்பு<br>ரா. கே-நட்பு |

*ராகு ஆட்சி கன்னி, கேது ஆட்சி மீனம் என்றும் கணிக்கப்படும்,

## தலைப்பு 16. இராசிகளில்கிரகங்கள் சஞ்சரிக்கும்கால அளவு:

| | | | |
|---|---|---|---|
| சூரியன் ஒரு இராசியில் | | 1 | மாதம் |
| சந்திரன் ,, | ,, | 2¼ | நாள் |
| செவ்வாய் ,, | ,, | 1½ | மாதம் |
| புதன் ,, | ,, | 1 | மாதம் |
| குரு ,, | ,, | 1 | வருடம் |
| சுக்கிரன் ,, | ,, | 1 | மாதம் |
| சனி ,, | ,, | 2½ | வருடம் |
| இராகு ,, | ,, | 1½ | வருடம் |
| கேது ,, | ,, | 1½ | வருடம் |

ஒரு கிரகம் தான் நிற்கும் இடத்தில் இருந்து 12 இராசிகளையும் ஒரு முறை கடந்து திரும்பவும் நின்ற இடத்திற்கு வரச் செல்லும் காலம்:

1. சூரியனுக்கு 1 வருடம் செல்லும். (365 நாள்)
2. சந்திரனுக்கு 27 நாள்கள் ,,
3. செவ்வாய்க்கு 1½ வருடம் செல்லும் (கிட்டத்தட்ட)
4. புதனுக்கு 1½ வருடம் செல்லும்(கிட்டத்தட்ட)
5. குருவுக்கு 12 வருடம் ,,
6. சுக்கிரனுக்கு 1 வருடம் ,,
7. சனிக்கு 30 ,, ,,
8. இராகுவுக்கு 18 ,, ,,
9. கேதுவுக்கு 18 ,, ,,

### வக்கிரகம்:

இராகு கேதுக்களைத் தவிர்ந்த மற்றைய ஏழு கிரகங்களும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்கின்றன. இராகு கேதுக்கள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்கின்றன. ஏழு கிரகங்களும் செல்வதை நேர்கதி என்றும், இராகு கேதுக்கள் செல்வதை வக்கிரகதி என்றும் கூறுவர்.

ஏழு கிரகங்களில் செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, என்னும் ஐந்து கிரகங்களும் சிலவேளைகளில் பின்நோக்கி (வக்கிரகித்து) சென்று, திரும்ப முன்நோக்கி நேர்கதியில் வருவதாகத் தோன்றுகின்றது.



## தலைப்பு: 17 சூரிய உதய அஸ்தமன நேரங்கள்: (யாழ்ப்பாணம்)

| தமிழ்த் | திகதி | உதயம் | அஸ்தமனம் | உச்சம் |
|---|---|---|---|---|
| சித்திரை | 1 | 6 . 05 | 6 . 17 | 12 . 01 |
| | 9 | 6 . 01 | 6 . 17 | 11 59 |
| | 17 | 5 . 57 | 6 . 17 | 11 . 57 |
| | 25 | 5 55 | 6 . 18 | 11 . 56 |
| வைகாசி | 3 | 5 . 53 | 6 . 20 | 11 56 |
| | 11 | 5 . 52 | 6 . 21 | 11 . 56 |
| | 19 | 5 . 52 | 6 . 23 | 11 . 57 |
| | 27 | 5 . 52 | 6 . 25 | 11 . 59 |
| ஆனி | 3 | 5 . 54 | 6 . 27 | 12 . 00 |
| | 11 | 5 . 55 | 6 29 | 12 . 02 |
| | 19 | 5 . 57 | 6 . 30 | 12 . 04 |
| | 27 | 5 . 59 | 6 31 | 12 . 05 |
| ஆடி | 3 | 6 . 01 | 6 31 | 12 . 06 |
| | 11 | 6 . 02 | 6 . 30 | 12 . 06 |
| | 19 | 6 04 | 6 . 28 | 12 . 06 |
| | 27 | 6 04 | 6 . 26 | 12 . 05 |
| ஆவணி | 4 | 6 . 05 | 6 . 22 | 12 . 04 |
| | 12 | 6 . 04 | 6 . 18 | 12 . 02 |
| | 20 | 6 . 04 | 6 . 14 | 11 . 59 |
| | 28 | 6 . 03 | 6 . 09 | 11 . 57 |
| புரட்டாதி | 5 | 6 . 03 | 6 . 04 | 11 . 54 |
| | 13 | 6 . 02 | 5 . 59 | 11 . 51 |
| | 21 | 6 . 02 | 5 . 55 | 11 . 48 |
| | 29 | 6 . 02 | 5 . 51 | 11 . 46 |
| ஐப்பசி | 7 | 6 . 02 | 5 47 | 11 . 45 |
| | 15 | 6 . 03 | 5 . 44 | 11 44 |
| | 23 | 6 . 05 | 5 . 42 | 11 . 44 |
| கார்த். | 1 | 6 . 08 | 5 . 42 | 11 . 45 |
| | 9 | 6 . 11 | 5 . 42 | 11 . 46 |
| | 17 | 6 . 15 | 5 . 43 | 11 . 49 |
| | 25 | 6 . 19 | 5 . 46 | 11 . 52 |
| மார்கழி | 3 | 6 . 23 | 5 . 49 | 11 . 56 |
| | 11 | 6 . 27 | 5 . 53 | 12 . 00 |
| | 19 | 6 . 31 | 5 . 57 | 12 . 04 |
| | 27 | 6 . 33 | 6 . 02 | 12 . 07 |
| தை | 6 | 6 . 35 | 6 . 06 | 12 . 10 |
| | 14 | 6 . 36 | 6 . 09 | 12 . 13 |
| | 22 | 6 . 36 | 6 12 | 12 . 14 |
| | 30 | 6 34 | 6 . 01 | 12 . 14 |
| மாசி | 8 | 6 . 32 | 6 . 16 | 12 . 14 |
| | 16 | 6 . 29 | 6 . 17 | 12 . 13 |
| | 24 | 6 . 25 | 6 . 18 | 12 . 11 |
| பங்குனி | 2 | 6 . 21 | 6 . 18 | 12 . 09 |
| | 10 | 6 . 16 | 6 . 18 | 12 07 |
| | 18 | 6 . 12 | 6 . 17 | 12 . 04 |
| | 26 | 6 07 | 6 . 17 | 12 02 |

## தலைப்பு: 18 பன்னிரண்டு இராசிகளில் நட்சத்திர நியதி:

| | | | |
|---|---|---|---|
| பூரட்டாதி<br>பின் 1 பா<br>உத்திரட்டாதி 4<br>ரேவதி 4 | அச்சுவினி<br>4 பாதம்<br>பரணி 4 பாதம்<br>கார்த்திகை<br>முன் 1 பாதம் | கார்த்திகை<br>பின் 3 பாதம்<br>ரோகிணி<br>4 பாதம்<br>மிருகசீரிடம்<br>முன் 2 பாதம் | மிருகசீரிடம்<br>பின் 2 பா<br>திருவாதிரை 4<br>புனர் பூசம்<br>முன் 3 பா |
| அவிட்டம்<br>பின் 2 பாத<br>சதயம் 4<br>பூரட்டாதி<br>முன் 3 பா | ஒரு நட்சத்திரம் நாலு பாதம் கொண்டதாகும் ஒரு இராசியில் 9 பாதங்கள் அமையும்<br>ஒரு இராசிக்கு $2\frac{1}{2}$ நட்சத்திரம் 9 பாதங்கள் | | புநர் பூசம்<br>பின் 1 பா<br>பூசம் 4<br>ஆயிலியம் 4 பா |
| உத்தராடம்<br>பின் 3 பா<br>திருவோணம் 4<br>அவிட்டம்<br>முன் 2 பா | 12 இராசிக்கும்<br>$12 \times 9 = 108$ பாதங்கள்<br>$108 \div 4 = 27$ நட்சத்திரம்<br>(பாதம் = கால்) | | மகம் 4 பாதம்<br>பூரம் 4 பாதம்<br>உத்தரம்<br>முன் 1 பாத |
| மூலம் 4<br>பூராடம் 4<br>உத்தராடம்<br>முன் 1 | விசாகம்<br>பின் 1 பா<br>அனுட்டம் 4பா<br>கேட்டை 4 பா | சித்திரை<br>பின் 2 பாத<br>சுவாதி 4 பாத<br>விசாகம்<br>முன் 3 பாத | உத்தரம்<br>பின் 3 பாத<br>அத்தம் 4 பா<br>சித்திரை<br>முன் 2 பா |

## தலைப்பு: 19 இரக மகாதிசைகளும் கால அளவும்:-

| | | | |
|---|---|---|---|
| சூரியதிசை | 6 | வருடம் | (கார்த், உத்தர, உத்தரா) |
| சந்திரதிசை | 10 | ,, | (ரோகி. அத். திருவோ) |
| செவ்வாய் திசை | 7 | ,, | (மிருக, சித், அவிட்) |
| இராகு திசை | 18 | ,, | (திருவா, சுவா, சதய) |
| வியாழதிசை | 16 | ,, | (புனர்பூ, விசா, பூரட்) |
| சனிதிசை | 19 | ,, | (பூசம், அனுட், உத்தரட்) |
| புதன் திசை | 17 | ,, | (ஆயிலி, கேட், ரேவதி) |
| கேதுதிசை | 7 | ,, | (மகம், மூலம், அச்சு) |
| சுக்கிர திசை | 20 | ,, | (பூரம், பூராட, பரணி) |
| | 120 | | |



குறிப்பு:

குழந்தை பிறந்த நேரம் என்ன திசையில் வருகிறதோ அத்திசையில் இருந்து மேலே காட்டப்பட்ட கிரக முறைப்படியே தொடர்ந்து திசை நடைபெறும்.

(உ+ம்) இராகு திசையில் குழந்தை பிறந்தால் இராகு திசை முடிய வியாழ திசை, பின்பு சனி திசை, பின்பு புதன் திசை, பின்பு கேது திசை, பின்பு சுக்கிர திசை, பின்பு சூரிய திசை, பின்பு சந்திரதிசை, பின்பு செவ்வாய் திசை என்று முறையே தொடரும்.

## தலைப்பு: 20. மகாதிசையில் புத்தி விபரம்:

(1) ஒவ்வொரு திசையும் திசாநாதனின் புத்தியை முதலாகக் கொண்டு நடக்கும். திசைகள் என்ன கிரக ஒழுங்கு முறை யாக நடைபெறுகின்றனவோ அதே கிரக ஒழுங்கில் புத்திகளும் நடக்கும்.

உதாரணம்:

சூரிய திசை சூரிய புத்தியில் ஒரு குழந்தை பிறந்தால் சூரிய புத்தியின் பின், முறையே சந்திரபுத்தி, செவ்வாய்புத்தி, ராகுபுத்தி, வியாழபுத்தி, சனிபுத்தி, புதன்புத்தி, கேதுபுத்தி, சுக்கிரபுத்தி நடந்து முடிந்து, அடுத்ததிசையான சந்திரதிசை சந்திரபுத்தியில் தொடங்கி நடக்கும்.

(2) ஒவ்வொரு திசைக்கும், அவற்றின் புத்திகளுக்கும் உரிய காலஅளவை அடுத்துள்ள அட்டவணையில் காண்க.

### புத்தியின் கால அளவு கணித்தல்:

ஒரு திசையில் ஒரு புத்தி எவ்வளவு காலம் நடக்கும் என் பதை, அடுத்துள்ள அட்டவணையைப் பாராது கணித்தும் சொல்லலாம்.

உதாரணம்:

சூரிய திசையில் சந்திரபுத்தி எவ்வளவு காலம் நடைபெறும் என்பதை அறிய, சூரிய திசைவருடத்தையும், சந்திரதிசை வருடத்தையும் பெருக்கி 10 ஆல் வகுத்திடுக.

சூரியதிசை 6 வருடம்
சந்திரதிசை 10 வருடம்
$6 \times 10 = 60, \; 60 \div 10 = 6$ (மாதம்)
சூரியதிசையில் சந்திரபுத்தி 6 மாதம், இப்படியே ஒவ்வொரு திசைபுத்தியையும் கணித்திடுக.

## மகா திசை புத்தியும், மொத்த சங்கியையும்:-

| திசை | புத்தி | வ | மா | நா | மொத்தம் வ | மா | நா |
|---|---|---|---|---|---|---|---|
| கார்த். உத்திர. உத்தரா சூரிய திசை 6 வ. | சூரிய | 0 | 3 | 18 | 0 | 3 | 18 |
| | சந்திர | 0 | 6 | 0 | 0 | 9 | 18 |
| | செவ் | 0 | 4 | 6 | 1 | 1 | 24 |
| | ராகு | 0 | 10 | 24 | 2 | 0 | 18 |
| | வியா | 0 | 9 | 18 | 2 | 10 | 6 |
| | சனி | 0 | 11 | 12 | 3 | 9 | 18 |
| | புத | 0 | 10 | 6 | 4 | 7 | 24 |
| | கேது | 0 | 4 | 6 | 5 | 0 | 0 |
| | சுக்கி | 1 | 0 | 0 | 6 | 0 | 0 |
| ரோ, அத்த-திருவோ. சந்திர திசை 10 வ | சந்திர | 0 | 10 | 0 | 0 | 10 | 0 |
| | செவ் | 0 | 7 | 0 | 1 | 5 | 0 |
| | ராகு | 1 | 6 | 0 | 2 | 11 | 0 |
| | வியா | 1 | 4 | 0 | 4 | 3 | 0 |
| | சனி | 1 | 7 | 0 | 5 | 10 | 0 |
| | புதன் | 1 | 5 | 0 | 7 | 3 | 0 |
| | கேது | 0 | 7 | 0 | 7 | 10 | 0 |
| | சுக்கிர | 1 | 8 | 0 | 9 | 6 | 0 |
| | சூரிய | 0 | 6 | 0 | 10 | 0 | 0 |
| மிருகஷீ - சித்திரை அவி செவ்வாய் திசை 7வ. | செவ் | 0 | 4 | 27 | 0 | 4 | 27 |
| | ராகு | 1 | 0 | 18 | 1 | 5 | 15 |
| | வியா | 0 | 11 | 6 | 2 | 4 | 21 |
| | சனி | 1 | 1 | 9 | 3 | 6 | 0 |
| | புதன் | 0 | 11 | 27 | 4 | 5 | 27 |
| | கேது | 0 | 4 | 27 | 4 | 10 | 24 |
| | சுக்கிர | 1 | 2 | 0 | 6 | 0 | 24 |
| | சூரிய | 0 | 4 | 6 | 6 | 5 | 0 |
| | சந்திர | 0 | 7 | 0 | 7 | 0 | 0 |
| திருவாதி-சுவாதி-சதய ராகு திசை 18 வ. | ராகு | 2 | 8 | 12 | 2 | 8 | 12 |
| | வியா | 2 | 4 | 24 | 5 | 1 | 6 |
| | சனி | 2 | 10 | 6 | 7 | 11 | 12 |
| | புதன் | 2 | 6 | 18 | 10 | 6 | 0 |
| | கேது | 1 | 0 | 18 | 11 | 6 | 18 |
| | சுக்கிர | 3 | 0 | 0 | 14 | 6 | 18 |
| | சூரிய | 0 | 10 | 24 | 15 | 5 | 12 |
| | சந்திர | 1 | 6 | 0 | 16 | 11 | 12 |
| | செவ் | 1 | 0 | 18 | 18 | 0 | 0 |
| புனர்பூச - விசாக - பூரட் வியாழ திசை 16 வ. | வியா | 2 | 1 | 18 | 2 | 1 | 18 |
| | சனி | 2 | 6 | 12 | 4 | 8 | 0 |
| | புதன் | 2 | 3 | 6 | 6 | 11 | 6 |
| | கேது | 0 | 11 | 6 | 7 | 10 | 12 |
| | சுக்கிர | 2 | 8 | 0 | 10 | 6 | 12 |
| | சூரிய | 0 | 9 | 18 | 11 | 4 | 0 |
| | சந்திர | 1 | 4 | 0 | 12 | 8 | 0 |
| | செவ் | 0 | 11 | 6 | 13 | 7 | 6 |
| | ராகு | 2 | 4 | 24 | 16 | 0 | 0 |

| திசை | புத்தி | வ | மா | நா | மொத்தம் வ | மா | நா |
|---|---|---|---|---|---|---|---|
| பூசம்-அனு-உத்திரட்டா சனி திசை 19 வ. | சனி | 3 | 0 | 3 | 3 | 0 | 3 |
| | புதன் | 2 | 8 | 9 | 5 | 8 | 12 |
| | கேது | 1 | 1 | 9 | 6 | 9 | 21 |
| | சுக்கிர | 3 | 2 | 0 | 9 | 11 | 21 |
| | சூரிய | 0 | 11 | 12 | 10 | 11 | 3 |
| | சந்திர | 1 | 7 | 0 | 12 | 6 | 3 |
| | செவ் | 1 | 1 | 9 | 13 | 7 | 12 |
| | ராகு | 2 | 10 | 6 | 16 | 5 | 18 |
| | வியா | 2 | 6 | 12 | 19 | 0 | 0 |
| ஆயிலியம்-கேட்-ரேவதி புதன் திசை 17 வ. | புதன் | 2 | 4 | 27 | 2 | 4 | 27 |
| | கேது | 0 | 11 | 27 | 3 | 4 | 24 |
| | சுக்கிர | 2 | 10 | 0 | 6 | 2 | 24 |
| | சூரிய | 0 | 10 | 6 | 7 | 1 | 0 |
| | சந்திர | 1 | 5 | 0 | 8 | 6 | 0 |
| | செவ் | 0 | 11 | 27 | 9 | 5 | 27 |
| | ராகு | 2 | 6 | 18 | 12 | 0 | 15 |
| | வியா | 2 | 3 | 6 | 14 | 3 | 21 |
| | சனி | 2 | 8 | 9 | 17 | 0 | 0 |
| அச்வினி-மகம்-மூலம் கேது திசை 7 வ. | கேது | 0 | 4 | 27 | 0 | 4 | 27 |
| | சுக்கிர | 1 | 2 | 0 | 1 | 6 | 27 |
| | சூரிய | 0 | 4 | 6 | 1 | 11 | 3 |
| | சந்திர | 0 | 7 | 0 | 2 | 6 | 3 |
| | செவ் | 0 | 4 | 27 | 2 | 11 | 0 |
| | ராகு | 1 | 0 | 18 | 3 | 11 | 18 |
| | வியா | 0 | 11 | 6 | 4 | 10 | 24 |
| | சனி | 1 | 1 | 9 | 6 | 0 | 3 |
| | புதன் | 0 | 11 | 27 | 7 | 0 | 0 |
| பரணி-பூரம்-பூராடம் சுக்கிர திசை 20 வ | சுக்கிர | 3 | 4 | 0 | 3 | 4 | 0 |
| | சூரிய | 1 | 0 | 0 | 4 | 4 | 0 |
| | சந்திர | 1 | 8 | 0 | 6 | 0 | 0 |
| | செவ் | 1 | 2 | 0 | 7 | 2 | 0 |
| | ராகு | 3 | 0 | 0 | 10 | 2 | 0 |
| | வியா | 2 | 8 | 0 | 12 | 10 | 0 |
| | சனி | 3 | 2 | 0 | 16 | 0 | 0 |
| | புதன் | 2 | 10 | 0 | 18 | 10 | 0 |
| | கேது | 1 | 2 | 0 | 20 | 0 | 0 |

கேது திசையில் அச்வினி தொடங்கி 9 நட்சத்திரங்களும் பின் மகம் தொடங்கி 9 நட்சத்திரங்களும், மூலம் தொடங்கி 9 நட்சத்திரங்களும் முறையாக ஒவ்வொரு திசையிலும் அமைந்திருப்பதை அவதானிக்குக.



## தலைப்பு: 21. பன்னிரண்டு கிரக பாவங்கள் :

இலக்கினம் முதலாகப் பன்னிரண்டு இராசிகளும் முறையே முதலாம் பாவம், இரண்டாம் பாவம், மூன்றும் பாவம், நாலாம் பாவம். ............. என்று அழைக்கப்படும். ஒவ்வொரு பாவத்தையும் ஆளுகின்ற கிரகங்கள் பின்வருவனவாகும்.

| இடம் | கிரகம் | காரகம் | |
|---|---|---|---|
| முதலாம் இடம்(பாவம்) | சூரியன் | உடல் | காரகன் |
| இரண்டாம் ,, ,, | குரு | தனம், வாக்கு, குடும்ப | ,, |
| மூன்றும் ,, ,, | செவ்வாய் | சகோதர | ,, |
| நாலாம் ,, ,, | சந்திரன், புதன் | தாய்(மாதுரு)பந்து | ,, |
| ஐந்தாம் ,, ,, | குரு | புத்திர | ,, |
| ஆறும் ,, ,, | சூரியன், சனி | சத்துரு | ,, |
| ஏழாம் ,, ,, | சுக்கிரன் | களத்திர | ,, |
| எட்டாம் ,, ,, | சனி | ஆயுள் | |
| ஒன்பதாம் ,, ,, | சூரியன், குரு, சனி | தந்தை (பிதுர்) | ,, |
| பத்தாம் ,, ,, | சூரியன், குரு, புதன் | தொழில் | ,, |
| பதினோராம்,, ,, | குரு | இலாபம் | ,, |
| பன்னிரண்டாம்,, | சனி | சயனம், விரயம் | ,, |

குறிப்பு:

ஏழாம் இடம் களத்திரத்திற்குரியது. ஏழாம் இடத்தை களத்திரத்தானம் என்று கூறுவர். களத்திரகாரகன் சுக்கிரன் ஆவான். களத்திரம் பற்றி ஆராயும்போது:

(1) களத்திரகாரன் நின்ற இடம் எது என்பதும்

(2) களத்திரதானம் எவருடைய வீடென்பதும்

(3) களத்திரதானாதிபன் எங்கே, எப்படி நிற்கிறன் என்பதும்

(4) களத்திரதானத்தை எக்கிரகங்கள் பார்க்கின்றன என்பதும்

(5) களத்திரதானத்திற்கும், களத்திரகாரனுக்கும் களத்திராதிபனுக்கும் உள்ள சம்பந்தம் எப்படியானது என்பதும் நோக்கப்படவேண்டும். (இப்படியே மற்றைய பாகங்களையும் நோக்குக.)

## தலைப்பு : 22. கிரக சத்துரு மித்துருத் தன்மை : (நைசர்க்கிய பலம்)

| கிரகம் | மித்துரு | சத்துரு | சமம் |
|---|---|---|---|
| சூரியனுக்கு | சந். செவ். குரு. | சுக். சனி. ராகு. கேது | புதன் |
| சந்திரனுக்கு | சூரி. புத | ராகு, கேது. | செவ். குரு. சுக். சனி |
| செவ்வாய்க்கு | சூரிய. சந் குரு. | புதன் | சுக், சனி, ராகு, கேது |
| புதனுக்கு | சூரியன், சுக்கிர. | சந்திரன் | செவ்.குரு,சனி,ராகு,கேது |
| வியாழனுக்கு | சூரி சந். செவ். | சுக்கிரன் | சனி, ராகு, கேது |
| சுக்கிரனுக்கு | புதன், சனி | சூரியன், சந்திரன் | செவ், குரு,ராகு, கேது |
| சனிக்கு | புதன். சுக்கிர. | சூரி. சந். செவ். | குரு. ராகு, கேது |

## தலைப்பு: 23. கிரக நோக்குப் பலம். (பார்வை)

(அ) நோக்கு :

(1) எல்லாக் கிரகங்களும் தாம் தாம் நின்ற இடத்தையும் 7ஆம் இடத்தையும் முழுநோக்காக நோக்கும். (1—7)

(2) செவ்வாய் இவற்றுடன் 4, 8ஆம் இடங்களை முழு நோக்காக நோக்கும். (4—8)

(3) சனி 1, 7 உடன் 3, 10ஆம் இடங்களை முழு நோக்காக நோக்கும். (3—10)

(4) குரு 1, 7 உடன் 5, 9ஆம் இடங்களை முழு நோக்காக நோக்கும். (5,—9)

(5) ராகு, கேதுக்கள் 1, 7 உடன் 3, 11ஆம் இடங்களை அரை நோக்குடன் நோக்கும். (3—11)

| கிரகம் | ¼ பார்வை இடம் | ½ பார்வை இடம் | ¾ பார்வை இடம் | முழுப்பார்வை இடம் |
|---|---|---|---|---|
| சூரியன் | 3, 10 | 5, 9 | 4, 8 | 7 |
| சந்திரன் | 3, 10 | 5, 9 | 4, 8 | 7 |
| செவ்வாய் | 3, 10 | 5, 9 | — | 4, 7, 8 |
| புதன் | 3, 10 | 5, 9 | 4, 8 | 7 |
| குரு | 3, 10 | — | 4, 8 | 5, 7, 9 |
| சுக்கிரன் | 3, 10 | 5, 9 | 4, 8 | 7 |
| சனி | — | — | 4, 8 | 3, 7, 10 |
| கேது | — | 3, 11 | | 7 |

(ஆ) மறைவு ;

(1) எல்லாக் கிரகங்களும் 8ஆம், 12ஆம் இடங்களில் மறைவாகும். (8—12)

(2) சந்திரன், புதன், குரு என்பன இவற்றுடன் 3, 6ஆம் இடங்களில் மறைவாகும். (8, 12—3, 6)



## தலைப்பு: 24. ஓரை விபரம்: சூரிய உதயம் முதல் கணித்திடுக.

| நா. வி. வரை | ஞாயிறு | திங்கள் | செவ். | புதன் | வியா. | வெள். | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| 2-30 | சூரியன் | சந்தி. | குசன் | புதன் | குரு | சுக்கி. | சனி |
| 5-00 | சுக்கிரன் | சனி | சூரிய. | சந்தி | குசன் | புதன் | குரு |
| 7-30 | புதன் | குரு | சுக்கி. | சனி | சூரிய. | சந்தி. | குசன் |
| 10-00 | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கி. | சனி | சூரிய. |
| 12-30 | சனி | சூரிய. | சந்தி. | குசன் | புதன் | குரு | சுக்கி. |
| 15-00 | குரு | சுக்கி. | சனி | சூரிய. | சந்தி. | குசன் | புதன் |
| 17-30 | குசன் | புதன் | குரு | சுக்கிர. | சனி | சூரிய. | சந்தி. |
| 20-00 | சூரியன் | சந்தி. | குசன் | புதன் | குரு | சுக்கி. | சனி |
| 22-30 | சுக்கிரன் | சனி | சூரிய. | சந்தி. | குசன் | புதன் | குரு |
| 25-00 | புதன் | குரு | சுக்கி. | சனி | சூரிய | சந்தி. | குசன் |
| 27-30 | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கி. | சனி | சூரிய. |
| 30-00 | சனி | சூரிய. | சந்தி. | குசன் | புதன் | குரு | சுக்கி. |
| 32-30 | குரு | சுக்கி | சனி | சூரிய. | சந்தி | குசன் | புதன் |
| 35-00 | குசன் | புதன் | குரு | சுக்கி. | சனி | சூரிய. | சந்தி |
| 37-30 | சூரியன் | சந்தி. | குசன் | புதன் | குரு | சுக்கி. | சனி |
| 40-00 | சுக்கிரன் | சனி | சூரிய. | சந்தி | குசன் | புதன் | குரு |
| 42-30 | புதன் | குரு | சுக்கி. | சனி | சூரிய | சந்தி. | குசன் |
| 45-00 | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கி. | சனி | சூரிய. |
| 47-30 | சனி | சூரிய. | சந்தி. | குசன் | புதன் | குரு | சுக்கி. |
| 50-00 | குரு | சுக்கி. | சனி | சூரிய. | சந்தி. | குசன் | புதன் |
| 52-30 | குசன் | புதன் | குரு | சுக்கி. | சனி | சூரிய | சந்தி. |
| 55-00 | சூரியன் | சந்தி. | குசன் | புதன். | குரு | சுக்கி. | சனி |
| 57-30 | சுக்கிரன் | சனி | சூரிய. | சந்தி. | குசன் | புதன் | குரு |
| 60-00 | புதன் | குரு | சுக்கி | சனி | சூரிய. | சந்தி. | குசன் |

## தலைப்பு: 25. முக்குணவேளை: சூரிய உதயம் முதல் கணித்திடுக :

| நாழி. மணி | நாள் விநா வரை | ஞாயிறு புதன் சனி | திங்கள் வியாழன் | செவ்வாய் வெள்ளி |
|---|---|---|---|---|
| 1½ | 3.45 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 3 | 7.30 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 4½ | 11.15 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 6 | 15.00 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 7½ | 18.45 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 9 | 22.30 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 10½ | 26.15 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 12 | 30.00 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 13½ | 33.45 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 15 | 37.30 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 16½ | 41.15 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 18 | 45.00 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 19½ | 48.45 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |
| 21 | 52.30 | சாத்விகம் | ராசதம் | தாமதம் |
| 22½ | 56.15 | ராசதம் | தாமதம் | சாத்விகம் |
| 24 | 60.00 | தாமதம் | சாத்விகம் | ராசதம் |

இ 7

## தலைப்பு: 26. இரகங்களும் நன்மை தரும் இடங்களும்:

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | . | 2 | 3 | . | . | 6 | . | . | 9 | 10 | 11 | . | நன்மை |
| சந்திரன் | 1 | . | 3 | . | . | 6 | 7 | . | . | 10 | 11 | . | ,, |
| செவ்வாய் | . | . | 3 | . | . | 6 | . | . | . | . | 11 | . | ,, |
| புதன் | . | 2 | 3 | 4 | 5 | 6 | . | 8 | . | 10 | 11 | . | ,, |
| குரு | . | 2 | . | . | 5 | . | 7 | . | 9 | . | 11 | . | ,, |
| சுக்கிரன் | 1 | 2 | 3 | 4 | 5 | . | 7 | 8 | 9 | . | 11 | 12 | ,, |
| சனி | . | . | 3 | . | . | 6 | . | . | . | . | 11 | . | ,, |
| ராகு | . | . | 3 | . | . | 6 | . | . | . | . | 11 | . | ,, |
| கேது | . | . | 3 | . | . | 6 | . | . | . | , | 11 | . | ,, |

## தலைப்பு: 27. இலக்கினம் முதல் 12 வீடுகளின் பலன்கள்:

1. இலக்கினம்: உடல், தோற்றம், புகழ், குணங்கள்
2. தனம் : கல்வி, குடும்பம், முகம், வாக்கு, வலதுகண்
3. சகோதரர் ; வீரியம், விவேகம், காது, அன்பு
4. மாதா : வாகனம், வீடு, பூமி, சுகம்
5. புத்தி : புத்திரர், பூர்வ புண்ணியம், இருதயம், பேரன்
6. சத்துரு : வயிறு, ரோகம், பிணி, பயம் பேர்த்தி
7. களத்திரம்: இன்பம், மர்மஸ்தானம், சிநேகிதர், (மனைவி)
8. ஆயுள் : நோய், மரணம், மாங்கல்யம்
9. பிதிர் : பாக்கியம், தருமம், தந்தை, கீர்த்தி, போர்
10. தொழில் : கீர்த்தி, மானம், மோட்சம்
11. இலாபம் : மூத்த சகோதரன், துன்பமின்மை
12. விரயம் : சயனம், செலவு, பிரயாணம், இடதுகண்

## தலைப்பு: 28. இலக்கின யோககாரரும், யோகதிசைகளும்:

| இலக்கினம் | யோககாரர் | யோகதிசைகள் |
|---|---|---|
| 1. மேடம் | — | குரு, சனி |
| 2. இடபம் | சனி | சனி |
| 3. மிதுனம் | — | சனி |
| 4. கர்க்கடகம் | செவ்வாய் | செவ்வாய் |
| 5. சிங்கம் | செவ்வாய் | செவ்வாய் புதன் ½ |



| இலக்கினம் | யோககாரர் | யோகதிசைகள் |
|---|---|---|
| 6. கன்னி | புதன், சுக்கிரன் | சுக்கிரன் |
| 7. துலாம் | சந்தி, புதன், சனி | சனி, புதன் ½ |
| 8. விருச்சிகம் | சூரியன், சந்திர | குரு, சந்திர. |
| 9. தனு | சூரியன், புதன் | சூரிய செவ் ½ |
| 10. மகரம் | செவ்வாய், சுக்கிர. | சுக்கிர, புதன் |
| 11. கும்பம் | செவ்வாய், குரு | புதன், சுக்கிர ½ |
| 12. மீனம் | செவ்வாய், குரு | செவ் ½, குரு ¼ |

## தலைப்பு: 29. கோள்களின் தான வலிமை:

உதயத்தில் (1 இல்) புதன், குரு, வலியர்
நீர்க்கீழில் (4 இல்) சந்திரன், சுக்கிரன் ,,
பாட்டில் (7 இல்) சனி, இராகு, கேது ,,
உச்சியில் (10இல்) சூரியன், செவ்வாய் ,,

## தலைப்பு: 30. கிரக மூலத் திரிகோண இராசி, பாகை:

| | கிரகம் | மூலத்திரிகோணம் | பாகை | |
|---|---|---|---|---|
| 1. | சூரியன் | சிங்கம் | 20° | 1—20° |
| 2. | சந்திரன் | இடபம் | 27° | 4—30° |
| 3. | செவ்வாய் | மேடம் | 12° | 1—12° |
| 4. | புதன் | கன்னி | 5° | 16—20° |
| 5. | வியாழன் | தனு | 13° | 1 – 10° |
| 6. | சுக்கிரன் | துலாம் | 3° | 1— 3° |
| 7. | சனி | கும்பம் | 20° | 1— 20° |

## தலைப்பு: 31. கிரக அதிஉச்ச அதிநீசமும் பாகையும்:

| கிரகம் | அதிஉச்ச இராசி | அதிநீச இராசி | |
|---|---|---|---|
| சூரியன் | மேடம் 10ஆம்° | துலாம் | 10° |
| சந்திரன் | இடபம் 3ஆம்° | விருச்சிகம் | 3° |
| செவ்வாய் | மகரம் 28ஆம்° | கடகம் | 28° |
| புதன் | கன்னி 15ஆம்° | மீனம் | 15° |
| குரு | கடகம் 5ஆம்° | மகரம் | 5° |
| சுக்கிரன் | மீனம் 27ஆம்° | கன்னி | 27° |
| சனி | துலாம் 20ஆம்° | மேடம் | 20° |

இரண்டாவது திறவுகோல்

## சோதிடக் குறிப்பு (ஜாதகம் கணித்தல்)

சோதிட வாய்பாடுகளை நன்கு விளங்கி மனனம் செய்து கொண்டபின், சோதிடக் குறிப்பு எழுத முனைவது நன்று

1938ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 25ஆந் திகதி பிற்பகல் 5-05 மணிக்கு ஒரு சிசு பிறந்துள்ளது. இச்சிசுவுக்கு எப்படிச் சோதிடக் குறிப்பு எழுதுவது?

சோதிடக் குறிப்பு எழுதுவதற்கு, முதற் தேவையானது சிசு பிறந்த ஆண்டுப் பஞ்சாங்கமாகும். பஞ்சாங்கம் ஒன்றை வாங்கிக் கொண்டு பின்வரும் முறைப்படி சிறு குறிப்புகள் எழுதுங்கள்
(வாக்கிய பஞ்சாங்கப்படி)

சிறு குறிப்பு: (1) ஆங்கில 1938 ஒகஸ்ற் 25 ஆம் திகதி = வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 9 திகதி வியாழன் (பஞ்சாங்கத்தில் காண்க)

சி. கு. : (2) அன்று சூரிய உதயம் 6.05 (17 ஆவது தலைப்பில் காண்க)

சி. கு. ; (3) (சிங்க) ராசிமானத்தில் 9ஆம் திகதி இருப்பு — 3 நாழி 41 விநா. (பஞ்சாங்க ஆவணி மாத அட்டவணை ராசிமானம் பார்க்க)

சி. கு. . (4) சூரிய உதயம் தொடக்கம் சிசு பிறந்த நேரம் வரை சென்ற நேரம் = காலை 6-05 தொடக்கம் பிற்பகல் 5.05 மணிவரை = 11 மணித்தியாலம்

சி. கு. : (5) உதயாதி சென்ற மேற்படி 11 மணித்தியாலத்தை நாழிகை விநாடியாக்குக.
(1 மணித்தியாலம் = 2½ நாழிகை)
∴ 11 மணித்தியாலம் = 27 நாழிகை 30 விநாடி



சி. கு. : (6) உதய இலக்கினம் அறிதல்:

| | |
|---|---|
| சிசு பிறந்த நேரம் சிங்கராசியில் ராசிமான இருப்பு (3ஆம் குறிப்பு) | 3நா. 41விநா |
| சிங்கராசியின் பின் கன்னிராசி மானம்(தலை. 11இல் 12ஆம்கூடு) | 4 ,, 56 ,, |
| கன்னி ராசியின்பின் துலா ராசி மானம் (தலைப்பு 11 இல் 12 ஆம் கூடு) | 5 ,, 09 ,, |
| துலா ராசியின் பின் விருச்சிக ராசிமானம் (தலைப்பு 11 இல் 12ஆம்கூடு) | 5 ,, 26 ,, |
| இப்படியே விருச்சிகத்தின் பின் தனுராசிமானம் | 5 ,, 20 ,, |
| | 24 ,, 32 ,, |
| உதயாதி 24 நாழி 32விநாடி வரை அதாவது தனு முடிவு வரை சிசு பிறக்கவில்லை. அதன் பின் மகர ராசிமானம் | 4 ,, 51 ,, |
| | 29 ,, 23 ,, |

29 நாழிகை 23 விநாடி காலத்துள் சிசு பிறந்துள்ளது. எனவே உதய லக்கினம் மகரம்.

| குறிப்பு: | நா: விநாடி |
|---|---|
| மகரம் முடிய இராசிமானம் | 29 - 23 |
| சிசு பிறந்தது | 27 - 30 |
| மகரத்தில் இருப்பு = | 1 - 53 |

சி. கு. : (7) சென்ம நட்சத்திரம் அறிதல் :
1 ஆவணி 9 ஆந் திகதி (ஒகஸ்ற் 25) பஞ்சாங்கத்தில் நட்சத்திரம் மகம், 50 நாழிகை 16 விநாடி வரை என்று காட்டப்பட்டுள்ளது. சிசு 27 நாழி 30 விநாடியில் பிறந்தபடியால் அதாவது 50 நாழிகை 30 விநாடிக்குள் அமைவதால் சென்ம நட்சத்திரம் மகம்.

II இந்த மகநட்சத்திரம் முதல்நாள் 53 நாழிகை 28 விநாடியில் ஆயிலியம் பட்டுப் போக, உதயமானதால் முதல் நாள் (60—53, 28) 6 நாழிகை 32 விநாடி நின்று, அடுத்த நாள் 50 நாழிகை 16 விநாடியில் படுவதால் 6.32 + 50.16= 56 நாழிகை 48 விநாடி பரமநாழிகை கொண்டதாகும்.

III மகம், பரமநாழிகை 56-48 கொண்டதாகவே பாதம் ஒன்றுக்கு 56.48 ÷ 4 =14 நாழிகை 12விநாடியாகும்.

IV சூரிய உதயாதி 27 நாழிகை 30 விநாடியில் சிசு பிறந்தபடியால் நட்சத்திரத்தில் சென்றது: முதல் நாள் 6 நாழிகை 32 விநாடியும் மற்ற நாள் 27 நாழிகை 30 விநாடியுமாகும். அதாவது 6.32+27.30=34 நாழிகை 2 விநாடியாகும்.

V ஒரு பாதத்திற்கு 14 நாழிகை 12 விநாடி எனக் கண்டதினல் (சி. கு. 7 III), நட்சத்திரத்தில் சென்ற 34 நாழிகை 2விநாடியில் 2 பாதம் கழிந்து ($14.12 \times 2 = 28.24$) மூன்றும் பாதத்திலும் $34.02 - 28.24 = 5.38$ கழிந்துள்ளது. எனவே சிசு பிறந்தது மக நட்சத்திரம் 3ஆம் பாதமாகும்.

VI மக நட்சத்திரத்தில் செல்லாநின்றது: $56.48 - 34{\cdot}02 =$ 22 நாழிகை 46 விநாடியாகும்.

சி. கு. (8) சந்திர லக்கினம் அல்லது இராசி அறிதல்:

சென்ம நட்சத்திரம் மகம் 3 ஆம் பாதம் எனக்கண்டுள்ளமையால், 18ஆம் தலைப்பில் மகநட்சத்திரம் எந்த இராசிக்குரியது என்று பார்க்கவும். சிங்க இராசியில் மகம் இருக்கின்றது. எனவே சந்திர இலக்கினம் சிங்கம் ஆகும்.

சி. கு. (9) திதி அறிதல்: (தலைப்பு 7)

ஆவணி 9ம் திகதி பஞ்சாங்கத்தில்29நாழிகை 11 விநாடி வரை அமவாசைத் திதி காட்டப்பட்டுள்ளது. சிசு 27 நாழிகை 30 விநாடியில் பிறந்தபடியால் திதி அமாவாசையாகும்.

சி. கு. (10) யோகம் அறிதல்: (தலைப்பு 8)

ஆவணி 9ஆம் திகதி பஞ்சாங்கத்தில் 15 நாழிகை 26 விநாடி வரை பரிசம் காட்டப்பட்டுள்ளது. சிசு 29 நாழிகை 11 விநாடியில் பிறந்துள்ளதால் பரிசம் முடிந்து சிவயோகத்தில் பிறந்துள்ளது.



சி. கு. (11) கரணம் அறிதல்: (தலைப்பு 9)

ஆவணி 9ஆம் திகதி பஞ்சாங்கத்தில் 1 நாழிகை 50 விநாடியில் சதுர்ப்பாதம் முடிந்து, கிம்ஸ்துக்கினம் தொடங்கி 56 நாழிகை 51 விநாடியில் முடிவதால் கிம்ஸ்துக்கினத்தில் பிறந்துள்ளது.

சி. கு. (12) ஓரை அறிதல்: (தலைப்பு 24)

சூரிய உதயாதி 27 நாழிகை 30 விநாடிவரை, தலைப்பு 24 இல் வியாழக்கிழமை சுக்கிர ஓரை குறிக்கப்பட்டுள்ளது. எனவே சிசு சுக்கிரஓரையில் பிறந்துள்ளது.

சி. கு: (13) முக்குணவேளை அறிதல் (தலைப்பு 25)

தலைப்பு 25 இல் (9ஆந் திகதி வியாழக்கிழமை) 30 நாழிகை வரை இராசதம் என்றிருப்பதால் சிசு இராசத வேளையில் பிறந்துள்ளது.

சி. கு. (14) நட்சத்திர மகாதிசை அறிதல் (தலைப்பு 20)

1. மக நட்சத்திரத்திற்கு, தலைப்பு 20 இல் கேது திசை கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நட்சத்திர மகாதிசை கேதுதிசை. இது 7 வருடம் நடக்கும்.
2. கேது திசையில் ஒரு பகுதி கழிந்ததால் சிசு பிறந்தபின் கேது திசை எவ்வளவு காலம் நடந்துள்ளது என்று கணிக்க வேண்டும்.

மக நட்சத்திர பரம நாழிகை 56 நா. 48விநா.
மகம் செல்லா நின்றது. 22 நா. 46 விநா.

எனவே (7 வருடம் ÷ 56.48) × 22.46 கேது திசையில் இருப்பாகும்.

$(56 \times 60) + 48 = 3408$ விநாடி.

$(22 \times 60) + 46 = 1366$ ,,

$\frac{7}{3408} \times \frac{1366}{1} = \frac{9562}{3408} = 2\frac{2746}{3408}$ வரு.

$\frac{2746}{3408}$ வரு. $\times 12 = \frac{32952}{3408} = 9\frac{2280}{3408}$ மாத.

$\frac{2280}{3408}$ மாத. $\times 30 = \frac{68400}{3408} = 20\frac{240}{3408}$ நாள்

∴ கேது திசை இருப்பு = 2 வருடம் 9 மாதம் 20 நாள்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

**சி. கு. (15) திசாகாலம் அறிதல் (தலைப்பு 20)**

| | வரு. | மா. | நாள். |
|---|---|---|---|
| கேது திசை இருப்பு | 2 | 9 | 20 |
| கேதுவின் பின் சுக்கிர திசை | 20 | 0 | 0 |
| அதன் பின் சூரிய திசை | 6 | 0 | 0 |
| ,, சந்திர திசை | 10 | 0 | 0 |
| ,, செவ்வாய் திசை | 7 | 0 | 0 |
| ,, இராகு திசை | 18 | 0 | 0 |
| ,, வியாழதிசை | 16 | 0 | 0 |
| ,, சனிதிசை | 19 | 0 | 0 |
| ,, புதன் திசை | 17 | 0 | 0 |
| | 115 | 9 | 20 |

**சி. கு. (16) மகாதிசையில் புத்தி விபரம் அறிதல்: (தலைப்பு 20)**

கேது திசையில் இருப்பு 2 வருடம் 9 மாதம 20 நாள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே கேதுதிசையில் சென்றது:

| வ. | மா. | நா. |
|---|---|---|
| 7 | 0 | 0 |
| 2 | 9 | 20 |
| 4 | 2 | 10 |

தலைப்பு 20ல் கேது திசை புத்தி அட்டவணையில் (மொத்தம் போடப்பட்ட இடத்தில்) கேது திசை வியாழபுத்தி வரை 4 வருடம் 10 மாதம் 24 நாள் என உண்டு. எனவே 4வருடம. 2 மாதம் 10 நாள் வரை சென்றது போக கேதுதிசை வியாழ புத்தியில் இருப்பு;

| வ. | மா. | நா. |
|---|---|---|
| 4 . | 10 - | 24 |
| 4 . | 2 - | 10 |
| 0 . | 8. | 14. |

| | வ. | மா. | நா. |
|---|---|---|---|
| கேதுதிசையில் வியாழபுத்தி இருப்பு | 0 . | 8 . | 14. |
| ,, சனி புத்தி | 1 . | 1 . | 9. |
| ,, புதன்.புத்தி | 0 . | 11 . | 27. |
| | 2 . | 9 . | 20. |



**சி. கு. (17) நடப்பு வருடங்களில் திசாபுத்தி கணித்தல் :**

பிறந்த ஆண்டு, மாதம், திகதியை முறையே எழுதிய பின் அதன் கீழ் ஒவ்வொரு புத்தியின் கால அளவை எழுதிக் கூட்டிக்கொண்டு வர நடப்பு வருட திசாபுத்தி வரும்.

| | | |
|---|---|---|
| எடுத்துக் கொண்ட பிறந்த திகதி (ஆங்கிலம்) | 1938 - 8 - 25 | |
| கேது திசை இருப்பு | 2 - 9 - 20 | |
| | 1941 - 6 - 15 | வரை. |
| சுக்கிர திசை | 20 - 0 - 0 | |
| | 1961 - 6 - 15 | வரை. |
| சூரியதிசை | 6 - 0 - 0 | |
| | 1967 - 6 - 15 | வரை. |
| சந்திர திசை | 10 - 0 - 0 | |
| | 1977 - 6 - 15 | வரை. |
| செவ்வாய் திசை | 7 - 0 - 0 | |
| | 1984 - 6 - 15 | வரை. |
| இராகு திசை | 18 - 0 - 0 | |
| | 2002 - 6 - 15 | வரை |

இப்படியே கணித்துக்கொண்டு போகலாம். தேவைப்படின் திசாவருடம் முழுவதையும் எழுதிக் கூட்டிக் கணியாது அத்திசைக்குரிய ஒவ்வொரு புத்தியாக எழுதிக் கூட்டிக் கணிக்கலாம்.

**சி. கு. (18) கிரக நிலை அமைத்தல் ;-**

இராசிச் சக்கரக்கூடு ஒன்றை அமைத்திடுக.
சிசு பிறந்த நேரம் பஞ்சாங்கத்தில் கிரகங்கள் நின்றபடி கிரகநிலையை அமைத்திடுக.

| | | | |
|---|---|---|---|
| சனி | கேது | 5 | 6 |
| குரு | கிரக நிலை | | செவ். புதன் |
| லக்கி | | | சூரிய சந்தி. |
| 12 | 11 | ராகு | சுக்கி. |

தி 9

சூரியன் — ஆட்சி
சந்திரன் — பகை
செவ்வா. — நீசம்
புதன் — நட்பு
குரு — நட்பு
சுக்கிரன் — நீசம்
சனி — நட்பு
ராகு — நட்பு
கேது — பகை

பின்பு தலைப்பு 15 (ஆ) கூட்டில் உள்ளபடி இங்குள்ள கிரகங்கள் இருக்கும் வீடுகளைக் கவனித்து நட்பு, ஆட்சி, உச்சம் முதலியவற்றைக் குறித்திடுக.

1. குறிப்பு 6 இன்படி இலக்கினம் மகரமாதலின் மகரராசியில் இலக்கினம் என்று எழுதுக. (லக்கினம்)
2. பஞ்சாங்கத்தில் ஆவணி மாதம் சூரியன் குறிக்கப்பட்டுள்ள ராசியில் சூரியன் என்று எழுதிடுக. (சூரி) அல்லது (ரவி)
3. 8 ஆவது சி. குறிப்பில் கண்டபடி சந்திரன் சிங்கராசியில் இருப்பதால் சிங்கராசியில் சந்திரன் என்று எழுதிடுக. (சந்)
4. செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என்பனவற்றையும் பஞ்சாங்கத்தில் பார்த்து ஒவ்வொன்றும் 9ஆந் திகதி நின்ற இடத்தில் குறித்திடுக. (கிரகங்கள் மாறுவதை அவதானித்து குறித்திடவேண்டும்.)

சி. கு. **(19) நவாம்ச இலங்கினம் அறிதல்:-**

சி. கு. (6) இல் உதய இலக்கினம் அறிந்தபோது மகரத்தில் இருப்பு 1 நாழிகை 53 விநாடி எனக் கணிக்கப்பட்டது. மகர இராசிமானம் 4 நாழிகை 51 விநாடி. எனவே, மகரத்தில் சென்ற ராசிமானம் 4.51 − 1.53

= 2 நாழிகை 58 விநாடி

மகர இராசிமானத்தை விநாடியாக்க $4 \times 60 + 51$

= 291 விநாடி

சென்ற இராசி மானம் $2 \times 60 + 58 = 178$ விநாடி

மகர ராசிமானத்தை 9 கூருக்க $291 \div 9 = 32\frac{1}{3}$ விநாடி

178 விநாடியில் $32\frac{1}{3}$ விநாடி எத்தனை முறை உள்ளதோ அத்தனை நவாம்சக்கூறு கழிந்து விட்டதென எடுக்க வேண்டும்.

$178 \div 32\frac{1}{3} = 5$ முறையும் $16\frac{1}{3}$ விநாடி மிச்சமும். எனவே, மகரலக்கினம் 6ஆம்கூறில் சிசு பிறந்துள்ளது. உதயலக்கினமானது:-

மேடம், சிங்கம், தனுவாயின் மேட முதலும் இடம், கன்னி, மகரமாயின் மகர முதலும் மிதுனம், துலாம், கும்பமாயின், துலா முதலும், கர்க்கடகம், விருச்சிகம், மீனமாயின் கர்க்கடக முதலும்,



முறையாக எண்ணி இலக்கினக் கூறு பொருந்தும் இராசி நவாம்ச இலக்கினம் என எடுக்க வேண்டும். இங்கு மகர இலக்கினம் 6ஆம் கூறில் சிசு பிறந்ததினால், மகர முதல் 6ஆம் கூறான மிதுனம் நவாம்ச இலக்கினமாகும்.

சி: கு: **(20) நவாம்ச நிலை அமைத்தல்:**

இராசிச் சக்கரக் கூடு ஒன்றை அமைத்திடுக.

| | | | |
|---|---|---|---|
| செவ் | 11 | 12 | ராகு லக், / சந். சூரி. |
| புத. | நவாம்ச நிலை | | 2 |
| 8 | | | சுக்கி. |
| கேது | குரு சனி | 5 | 4 |

சூரியன் — பகை
சந்திரன் — நட்பு
செவ்வா. — பகை
புதன் — நட்பு
குரு — பகை
சுக்கிரன் — பகை
சனி — பகை
ராகு — நட்பு
கேது — நட்பு

1. 19ஆம் சி. குறிப்பில் கணித்தபடி நவாம்ச லக்கினம் மிதுனமாகும். மிதுன ராசியில் லக்கினம் எனக்குறித்திடுக.
2. வெகுதானிய வருட பஞ்சாங்கத்தில் கிரகபாதசாரம் என்ற பகுதியை எடுத்து,
   சூரியன் ஆவணி 9இல் என்ன நட்சத்திர பாதத்தில் நிற்கின்றதெனப் பார்க்க. 7ஆந் திகதி தொடக்கம் 11ஆந் திகதி வரை மகம் 3ஆம் கால் மிதுனம் என்றிருக்கின்றது. எனவே நவாம்சநிலையில் சூரியனை மிதுன ராசியில் குறித்திடுக.
3. சூரிய பாதசாரத்தில் சென்ம நட்சத்திரமான மகம் 3 ஆம் பாதம் என்ன அம்சம் எனக் காண்க. இதுவும் மிதுனம் என்றே இருக்கிறது. மிதுனத்தில் சந்திரனைக் குறித்திடுக. — (இச்சாதகருக்கு சூரிய அம்சமும் சந்திர அம்சமும் ஒன்றாக இருப்பதால் மயக்கம் ஏற்படலாம் —தவிர்த்திடுக.)
4. இப்படியே ஆவணி 9ஆந் திகதி ஏனைய கிரகங்களின் பாதசாரங்களில் அவற்றின் அம்சத்தைக் கண்டு குறித்திடுக.

| | | |
|---|---|---|
| செவ்வாய் | — | மீனம் |
| புதன் | — | மேடம் |
| குரு | — | விருச்சிகம் |
| சுக்கிரன் | — | சிங்கம் |
| சனி | — | விருச்சிகம் |
| ராகு | — | மிதுனம் |
| கேது | — | தனு |

பின்பு தலைப்பு 15 (ஆ) கூட்டில் உள்ள படி இங்குள்ள கிரகங்கள் இருக்கும் விடுகளைக் கவனித்து நட்பு, ஆட்சி, உச்சம் முதலியவற்றைக் குறித்திடுக.

### ஜாதகக் குறிப்பு எழுதல்:

இங்கு 20 சிறு குறிப்புகளிலும் காட்டப்பட்ட விபரங்களை உள்ளடக்கி, அடுத்தபக்கத்திலுள்ளவாறு ஜாதகக் குறிப்பை எழுதிடுக.

* ஜநநீ ஜந்ம ஸௌக்யாநாம் வர்த்த நீ
குல ஸம்பதாம்
பதவி பூர்வ புண்யாநாம் லிக்யதே
ஜந்ம பத்ரிகா

ஸ்ரீ கலியப்தம் 5040, சாலிவாகன சகாப்தம் 1861,
கொல்லம் **1114**, ஹிஜரி **1357**

முதலியன நீக்கப்பபட்டிருப்பதைக் கவனிக்குக.



## ஜாதகக் குறிப்பு

1938ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 25ஆந் திகதிக்குச் சரியான வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 9ஆந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5மணி 05 நிமிடத்தில், அஃதாவது சூரிய உதயாதி 27 நாழிகை 30 விநாடியில் திரு.................. .......... அவர்களுக்கு உத்தம புத்திரன் சுபஜெனனமானவேளை பொருந்திய ஜாதகக் குறிப்புகள் பின்வருவனவாகும்.

| | | |
|---|---|---|
| திதி | —அமாவாசை........................ | சி. கு. 9 |
| யோகம் | —சிவம்...................................... | சி. கு. 10 |
| கரணம் | —கிம்ஸ்துக்கினம்......... ........ | சி. கு. 11 |
| ஓரை | —சுக்கிரன்.................................. | சி. கு. 12 |

உதய இலக்கினம்: மகரம் ................................ சி. கு. 16
சந்திர இலக்கினம்: சிங்கம்.................................. சி. கு. 8

ஜெனன நட்சத்திரம் : மகம் [illegible] ஆம் பாதம்.... சி. கு. 7
பரம நாழிகை 56 விநாடி 48

| | | |
|---|---|---|
| பாதம் ஒன்றுக்குக் கண்டது | 14 நா | 12 வி. |
| நட்சத்திரத்தில் சென்றது | 34 ,, | 02 ,, |
| செலவு நீக்கி இருப்பு | 22 ,, | 46 ,, |

நட்சத்திர மகா திசை : கேது
கேது திசையில் இருப்பு 2 வருடம் 9 மாதம் 20 நாள்

தெய்வ நிலை:- (மகம் - தலைப்பு 10 (இ) பார்த்திடுக)

தேவர் : சுக்கிரன்
கணம் : இராட்சதர்
யோனி: ஆண் எலி
விருட்சம்: ஆல்
நாம அட்சரம்: மு

| | | | |
|---|---|---|---|
| சனி | கேது | 5 | 6 |
| குரு | கிரக நிலை | | செவ். புத. |
| லக். | | | சூரிய. சந். |
| 12 | 11 | ராகு | சுக் |

| | | |
|---|---|---|
| சூரியன் | — | ஆட்சி |
| சந்திரன் | — | பகை |
| செவ். | — | நீசம் |
| புதன் | — | நட்பு |
| குரு | — | நட்பு |
| சுக்கிரன் | — | நீசம் |
| சனி | — | நட்பு |
| ராகு | — | நட்பு |
| கேது | — | பகை |

| | | | |
|---|---|---|---|
| செவ். | 11 | 12 | சூரி லக் / சந் ராகு |
| புதன் | நவாம்ச நிலை | | 2 |
| 8 | | | சுக் |
| கேது | குரு சனி | 5 | 4 |

| | | |
|---|---|---|
| சூரியன் | — | பகை |
| சந்திரன் | — | நட்பு |
| செவ். | — | புதன் |
| புதன் | — | நட்பு |
| குரு | — | பகை |
| சுக்கிரன் | — | பகை |
| சனி | — | பகை |
| ராகு | — | நட்பு |
| கேது | — | நட்பு |

## மகாதிசை விபரம்

| | | | |
|---|---|---|---|
| கேது திசை இருப்பு | 2 | 9 | 20 |
| சுக்கிர திசை | 20 | 0 | 0 |
| சூரிய திசை | 6 | 0 | 0 |
| சந்திர திசை | 10 | 0 | 0 |
| செவ்வாய் திசை | 7 | 0 | 0 |
| ராகு திசை | 18 | 0 | 0 |
| வியாழ திசை | 16 | 0 | 0 |
| சனி திசை | 19 | 0 | 0 |
| புதன் திசை | 17 | 0 | 0 |
| | 115 | 9 | 20 |



## திசாபுத்தி விபரம்

| | |
|---|---|
| ஜெனன திகதி | 1938 . 8 . 25 |
| கேது திசை வியாழபுத்தி இருப்பு | . 8 . 14 |
| | 1939 . 5 . 09 |
| ,, சனிபுத்தி | 1 . 1 . 09 |
| | 1940 . 6 . 18 |
| ,, புதன் புத்தி | 0 . 11 . 27 |
| | 1941 . 6 . 15 |
| சுக்கிர திசை சுக்கிர புத்தி | 3 . 4 . 0 |
| | 1944 . 10 . 15 |
| ,, சூரிய புத்தி | 1 . 0 . 0 |
| | 1945 . 10 . 15 |
| ,, சந்திர புத்தி | 1 . 8 . 0 |
| | 1947 . 6 . 15 |
| செவ்வாய் புத்தி | 1 . 2 . 0 |
| | 1948 . 8 . 15 |
| ,, ராகு புத்தி | 3 . 0 . 0 |
| | 1951 . 8 . 15 |
| வியாழ புத்தி | 2 . 8 . 0 |
| | 1954 . 4 . 15 |
| ,, சனி புத்தி | 3 . 2 . 0 |
| | 1957 . 6 . 15 |
| ,, புதன் புத்தி | 2 . 10 . 0 |
| | 1960 . 4 . 15 |
| ,, கேது புத்தி | 1 . 2 . 0 |
| | 1961 . 6 . 15 |
| சூரிய திசை சூரிய புத்தி | 0 . 3 . 18 |
| | 1961 , 10 . 03 |
| ,, சந்திர புத்தி | 0 . 6 . 00 |
| | 1962 . 4 . 03 |
| ,, செவ்வாய் புத்தி | 0 . 4 . 06 |
| | 1962 . 8 . 09 |
| ,, ராகு புத்தி | 0 . 10 . 24 |
| | 1963 . 7 . 3 |
| ,, வியாழ புத்தி | 0 . 9 . 18 |
| | 1964 , 4 . 21 |

| | |
|---|---|
| | 1964 . 4 . 21 |
| சூரிய திசை சனி புத்தி | 0 . 11 . 12 |
| | 1965 . 4 . 3 |
| ,, புதன் புத்தி | 0 . 10 . 6 |
| | 1966 . 2 . 9 |
| ,, கேதுபுத்தி | 0 . 4 . 6 |
| | 1966 . 6 . 15 |
| ,, சுக்கிர புத்தி | 1 . 0 . 0 |
| | 1967 . 6 . 15 |
| சந்திர திசை சந்திர புத்தி | 0 . 10 . 0 |
| | 1968 . 4 . 15 |
| ,, செவ்வாய் புத்தி | 0 . 7 . 0 |
| | 1968 . 11 . 15 |
| ,, ராகு புத்தி | 1 . 6 . 0 |
| | 1970 . 5 . 15 |
| வியாழ புத்தி | 1 . 4 . 0 |
| | 1971 . 9 . 15 |
| ,, சனி புத்தி | 1 . 7 . 0 |
| | 1973 . 4 . 15 |
| ,, புதன் புத்தி | 1 . 5 . 0 |
| | 1974 . 11 . 15 |
| ,, கேது புத்தி | 0 . 7 . 0 |
| | 1975 . 6 . 15 |
| ,, சுக்கிர புத்தி | 1 . 8 . 0 |
| | 1977 . 2 . 15 |
| ,, சூரிய புத்தி | 0 . 6 . 0 |
| | 1977 . 6 . 15 |
| செவ்வாய் திசை செவ்வாய் புத்தி | 4 . 27 |
| | 1977 . 11 . 12 |
| ,, இராகு புத்தி | 1 . 0 . 18 |
| | 1979 . 0 . 0 |
| ,, வியாழ புத்தி | . 11 . 6 |
| | 1979 . 11 . 6 |
| ,, சனி புத்தி | 1 . 1 . 9 |
| | 1981 . 0 . 15 |
| ,, புதன் புத்தி | 11 . 27 |
| | 1982 . 0 . 12 |



| | |
|---|---|
| | 1982 . 0 . 12 |
| செவ்வாய் திசை கேது புத்தி | 0 . 4 . 27 |
| | 1982 . 5 . 09 |
| ,, சுக்கிர புத்தி | 1 . 2 . 0 |
| | 1983 . 7 . 09 |
| ,, சூரிய புத்தி | 0 . 4 . 6 |
| | 1983 . 11 . 15 |
| ,, சந்திர புத்தி | . 7 . 0 |
| | 1984 . 6 . 15 |
| ராகு திசை ராகு புத்தி | 2 . 8 . 12 |
| | 1987 . 2 . 27 |
| ,, வியாழ புத்தி | 2 . 4 . 24 |
| | 1989 . 7 . 21 |
| ,, சனி புத்தி | 2 . 10 . 6 |
| | 1992 . 5 . 27 |
| ,, புதன் புத்தி | 2 . 6 . 18 |
| | 1995 . 0 . 15 |
| ,, கேது புத்தி | 1 . 0 . 18 |
| | 1996 . 1 . 3 |
| ,, சுக்கிர புத்தி | 3 . 0 . 0 |
| | 1999 . 1 . 3 |
| ,, சூரிய புத்தி | 0 . 10 . 24 |
| | 1999 . 11 . 27 |
| ,, சந்திர புத்தி | 1 . 6 . 0 |
| | 2001 . 5 . 27 |
| ,, செவ் புத்தி | 1 . 0 . 18 |
| | 2002 . 6 . 15 |

இப்போது ஒரு சாதகக் குறிப்பு எழுதும் முறை விளங்கி விட்டது. இனி, குறிப்பை எவ்விதமாக நோக்குவது என்பது பற்றிச் சிறிது பயிலவேண்டும்.

மூன்றுவது திறவுகோல்

# சோதிடப் பலன் கூறுதல்

முதலாவது திறவுகோலினுல் சோதிட வாய்பாடுகளேயும், இரண்டாவது திறவுகோலினுல் சோதிடக் குறிப்பு எழுதுவதை யும் அறிந்து கொண்டாயிற்று. இனி, ஒரு ஜாதகக் குறிப்பை வைத்துக்கொண்டு பலன் கூறுவதற்கு அறியவேண்டும்.

சோதிடப் பலன் கூறுவதற்கு ஆரம்பமாக, பின்வரும் அம்சங்களினூடே அறிவைப் பெறவேண்டும்.

1. சிசு பிறந்த நாள் (வாரம்), மாதம், ஆண்டு, நட்சத்திரம் திதி, கணம், யோகம், ஓரை, முக்குணவேளை என்பவற்றின் பலன்,
2. சென்ம நட்சத்திர அதிதேவதை, கணம், யோனி, விருட்சம், சவ்விய நட்சத்திரம், அபசவ்விய நட்சத்திரம், ஆண், பெண், அலி நட்சத்திரம், என்பவற்றின் பலன்.
3. இராசித் திக்கு, நிறம், சாதி, சர திர உபயம், இராசி ஆண், பெண், இராசி ஒற்றை இரட்டை, என்பவற்றின் பலன்.
4. உதய இலக்கினம் எந்த இராசிக்குரியதோ அந்த இராசிக்குரிய பொதுப்பலன்.
5. சந்திர இலக்கினம் எந்த இராசிக்குரியதோ அந்த இராசிக்குரிய பொதுப்பலன்.
6. செனன காலம் இலக்கினம் முதலாக நவக்கிரகங்கள் நின்ற இடங்கள், அக்கிரகங்களின் நட்பு ஆட்சி உச்சம் பகை முதலிய தன்மைகள், கிரகங்கள் இலக்கினத்தில் இருந்து கேந்திரம், திரிகோணம், மறைவு, மூலத்திரிகோணம் என்பவற்றில் அமைந்த தன்மைகளுக்குரிய பொதுப்பலன்.
7. 6ஆவதில் கூறப்பட்டபடி சந்திர இலக்கினத்துக்குப் பொருந்திய கிரகங்களின் தன்மைகளுக்கு ஏற்ற பொதுப்பலன்.



8. ஒவ்வொரு கிரகமும் இருக்கும் இராசிக்குரிய பொதுப் பலன்.
9. ஒவ்வொரு கிரகமும் எந்தப் பாவத்தில் அமைந்திருக்கிறதோ அந்தப் பாவத்துக்குரிய பொதுப்பலன்.
10. நவக்கிரகங்கள் ஒருவரை ஒருவர் நோக்குதல், இலக்கினத்தை நோக்குதல், என்பவற்றுக்குரிய பொதுப்பலன்.
11. கிரகங்கள் பரிவர்த்தனையடைதல் முதலிய யோக நிலைகளுக்குரிய பலன்.
12. இரண்டு முதலிய கிரகங்கள் ஒன்று சேர்ந்து நிற்பதற்குரிய பொது பலன்.
13. சிசு பிறந்த திசா புத்திப் பலன்
14. பலன் கூறும் நேரத்தில் (கோசார நிலைக்கு ஏற்ப)சந்திர இலக்கினத்துக்கு எந்த எந்த இடத்தில் குரு, சனி, ராகு, கேது முதலிய கிரகங்கள் நிற்கின்றன என்பதுக்குரிய பொதுவான பலன்.
15. பலன் கூறும் நேரத்தில் ஏழரைச் சனியுண்டாயின் அதற்குரிய பொதுப்பலன்.

(ஏழரைச் சனியென்பது: சந்திர இலக்கினத்துக்கு முன்னும், சந்திர இலக்கினத்திலும், சந்திர இலக்கினத்துக்குப் பின்னும் உள்ள மூன்று இராசிகளில் சனி சஞ்சரிக்கும் $7\frac{1}{2}$ வருட காலமாகும்

மேற் கூறிய பதினைந்து பிரிவுகளிலும் பொதுவான பலன் கூறக் கற்றுக்கொண்டபின், நல்ல நூல்களை வாசித்து நுட்பமான பலன்களை அறிந்து கொள்வது இலகுவானதாகும்.

அடுத்த, சில பகுதிகளுக்கு பலன் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. அவற்றைப் படித்தபின் நாம் எழுதி மாதிரிச் சோதிடக் குறிப்பை வைத்துக்கொண்டு பொதுப்பலன் எழுதிப்பார்ப்போம்

## பலாபலன் விபரம்

**1. நாட்பலன் :**

1. ஞாயிறு : அழகு, சிவந்தநிறம், பார்வை—அலட்சியம் செய்பவன், தனவந்தன் — மத்திம பலன்.
2. திங்கள்: கீர்த்தி, தர்மம், அபிமானம் — நல்லபலன்.
3. செவ்வாய்: வஞ்சகம், பொய் ஈனம்,—கெட்டபலன்.
4. புதன் : கல்வியறிவு, தெய்வபக்தி, சத்தியம் — நல்ல பலன்.
5. வியாழன்: சத்தியம், தர்மம், விவேகம்,—சந்தோஷவான் —நல்லபலன்.
6. வெள்ளி : செல்வம், மேன்மையான செயல்-நல்லபலன்
7. சனி : பாவி, பிறபெண்களை விரும்புவோன், பலவீனன். - கெட்டபலன்.

**2. மாதப்பலன்:**

1. சித்திரை: மகிழ்ச்சியுடையோன், தாய் தந்தைப் பிரியன், சமய அறிவாளி — நல்லபலன்
2. வைகாசி: புகழ் உடையோன், வித்துவான், பலசாலி - நல்ல பலன்.
3. ஆனி : தீரன், புத்திர சம்பத்துடையவன், அற்ப காரிய கோபி, - மத்திம பலன்.
4. ஆடி : புண்ணியவான், தயாளன், செல்வந்தன், நல் மனைவியுடையோன் - மத்திம பலன்.
5. ஆவணி: தெய்வ பக்தியுடையவன், விசுவாசமுள்ளவன், செல்வந்தர் சிநேகமுடையவன், - நல்ல பலன்.

7. புரட்டாதி: சாந்தகுணமுள்ளோன், பலதேச சஞ்சாரி, சரித்திரமறிந்தோன் நல்லபலன்.

7. ஐப்பசி: தரித்திரன், கெட்ட சிந்தனையாளன், -கெட்ட பலன்.

8. கார்த்திகை: பெற்றோருடன் கூடி வாழ்பவன், ஒன்று சேர்பவன் - நல்லபலன்.

9. மார்கழி : தெய்வபக்தியுள்ளவன், செல்வம் சேர்ப்பவன், - நல்ல பலன்.

10. தை: நற்குணமுள்ளவன், நீட்டுமூக்கன், செல்வந்தன், நரம்பன் - மத்திம பலன்.

11. மாசி: கருமி, விரோதி, வீண்பேச்சாளன், புத்தியில்லாதவன் - கெட்டபலன்.

12. பங்குனி: தருமி, செல்வந்தன் - மத்திமபலன்

**3. நட்சத்திரப் பலன் :**

1. அச்சுவினி : புத்திமான், செல்வந்தன், கீர்த்தியுடையோன் இலட்சுமிகடாட்சமுடையோன், ஞானசாத்திரப் பயிற்சியுடையோன் சோதிடநூல் வல்லோன், கோபகுணமுள்ளோன், சண்டைக்காரன், உண்மை, பேசுபவன், பெண்களிடத்தில் இச்சையுடையவன்.

பாதம் 1 பாவத்துக்கு அஞ்சாதவன், அந்நியர்மேல் அன்புள்ளவன், கோள் சொல்பவன்

பாதம் 2 மேலான அறிவுடையவன், பிறர் குணங்களை அறிபவன், சாத்திர உணர்வுடையவன்

பாதம் 3 நற்புத்தி கூறுபவன், கணித சாத்திர உணர்வுடையவன்

பாதம் 4 சபலமான புத்தியுடையவன், உண்மை பேசுபவன், சோதிட அறிவுடையவன், இச்சையுடையவன்

2. பரணி காத்திரமான தேகமுள்ளவன், நற்குணன் தருமக் குணமுள்ளவன், திறமான பேச்சுடையவன், ஐஸ்வரியமுள்ளவன், கர்வமுள்ளவன், நன்றி மறப்பவன், சத்துருக்களை ஜெயிப்பவன்.

பாதம் 1 நீதியை நிலைநாட்டுபவன், பராக்கிரமமுடையவன், சத்துருக்களுக்கு அஞ்சாதவன்

பாதம் 2 தருமக் குணமுள்ளவன், புத்திசாலி, சாத்திரத்தைப் பிறருக்குரைப்பவன், சோம்பற் குணமுள்ளவன்.

பாதம் 3 சன்மார்க்கன், கோபக்குணமுடையவன், சீக்கிர சந்தோஷமடைபவன்

பாதம் 4 கர்வமுள்ளவன், சேவகஞ் செய்பவன், துர்ச்சனர் சிநேகம் உள்ளவன்.

3 கார்த்திகை பொய் பேசாதவன், கல்வியறிவு குறைந்தவன், வாயாடி, கோபி பிரபுத்துவமுடையன், இரசவாதன், மூர்க்கன், கெட்ட நடையுடையோன் வல்லவன், பிறர் பொருள் ஆசையுடையவன், பொறுமை குறைந்தவன். நோயாளி.

பாதம் 1 வித்துவத்தன்மையுடையவன், பொருள் இலாபம் அடைபவன், பிரபுத்துவமுடையவன் நோயாளி-

பாதம் 2 மிகுத்த கோபமுடையவன், ஆசாரக் குறைவுடையவன், அந்நியர் நட்புடையவன்.

பாதம் 3 சோம்பற்குணமுள்ளவன், விவேகி, துட்ட பெண்கள் சேர்க்கையடைபவன்.

பாதம் 4 பொறுமை குறைந்தவன், மனத்துக்கமுடையவன், நோயாளி

4. ரோகிணி தத்துவஞானி, செல்வந்தர், அரசர் நட்புடையவன், வாக்குப் பிசகாதவன், பிற பெண்களில் நாட்டமுடையவன், மாந்திரிக - சாத்திர வல்லபன், பிறர் சொல்லும் புத்திக்கு அமைந்து நடப்பவன், திட சித்தம் உள்ளவன், அபிமானமுடையவன்

பாதம் 1 பொறுமையில்லாதவன், பெண்களிடத்தில் நாட்டமுள்ளவன், வர்ம குணமுள்ளவன், பிறருக்குத் துன்பஞ் செய்பவன்

பாதம் 2 ஆசாரம், உண்மை என்பன உடையவன், ஏகதாரமுடையவன், வாய்ச்சாலம் உள்ளவன் நோயாளி.

பாதம் 3 கணிதசாத்திர உணர்ச்சியுடையவன், சங்கீத-மந்திர அப்பியாசம் உடையவன், குருவினுல் அனுக்கிரகம் பெற்றவன்

பாதம் 4 பிறர் பொருள் ஆசையுள்ளவன், பொருட் செலவு மிக்கவன், பெண்கள் தாசன்



5. மிருக சீரிடம் ஒழுக்கமுடையவன், புத்திசாலி தேசசஞ்சாரி, கோபக் குணமுடையவன், நினைத்தவை முடிக்கும் வல்லமையுடையவன், ஆடல் பாடல்களில் விருப்புடையவன், இஷ்டசித்தி உடையவன், பெண்கள் நாட்டமுள்ளவன், தர்மஞ் செய்யும் விருப்புடையோன்

பாதம் 1 சத்துருக்களை வெல்பவன், உண்மை பேசுபவன், ஆசாரக் குறைவுடையவன், தூலதேகமுடையவன்

பாதம் 2 உண்மை பேசுபவன், சாந்த குணமுடையவன் இஷ்டசித்தியுள்ளவன், பெண்கள் நாட்டம் உள்ளவன்

பாதம் 3 இனிய வாக்குடையவன், தர்ம குணமுடையவன், விவேகமுடையவன், சீக்கிர சந்தோஷமடைபவன்

பாதம் 4 கோபக் குணமுடையவன், வீரத்தன்மை உடையவன், வஞ்சகத் தன்மையுடையவன்

6. திருவாதிரை பொய் பேசுபவன், கோபக் குணமுடையவன், சிநேகப் பிரியமுடையவன், பிரபுத்தன்மையுடையவன், பிடிவாதகுணமுடையவன், கீர்த்தியுடையவன் இனசனர் பகையுடையவன், நற்குணமுடையவன், பெண்களுக்குப் பயந்தவன்.

பாதம் 1 நல்ல வசனமுரைப்பவன், நற்குணமுள்ளவன் இளம் பெண்களில் விருப்புடையவன், பிரபுத்தன்மையுடையவன், பிடிவாத குணமுடையவன்

பாதம் 2 வாய்ச்சாலமுள்ளவன், நிதானமாக ஒரே வார்த்தை பேசுபவன், ஞானவிரோதமுள்ளவன், உத்தம பெண் சேர்க்கையுடையவன்

பாதம் 3 முற்கோபமுள்ளவன், நற்குணமில்லாதவன், அன்பில்லாதவன், கோள் சொல்பவன், பெண்களுக்குப் பயந்தவன்

பாதம் 4 ஆசாரக் குறைவானவன், விரைவாகக் கருமம் சாதிப்பவன், ஈனத்தொழில் புரிபவன், இனசனர் பகையுடையவன், துணிவுள்ளவன்.

**7. புநர்பூசம்** — மனக்கிலேசமுள்ளவன், நற்குணம், நற்புத்தி, உள்ளவன், பலரிடத்தும் அன்புள்ளவன், சொற் சாதுரியம் உள்ளவன், புகழ்பெற்ற வித்துவத் தனமையுடையவன், தரும சிந்தையுள்ளவன், இடாம்பீக நடையுடையவன்.

பாதம் 1 — அனுபோகமுள்ளவன், இடாம்பீக நடையுடையவன், பெண்கள் நாட்டமுள்ளவன்.

பாதம் 2 — ஆசாரக் குறைவுடையவன், சோம்பலுடையவன்' உட்டண தேகமுள்ளவன்

பாதம் 3 — காவிய சாத்திர உணர்ச்சியுடையவன், குட்டரோகமுடையவன், பல் நோயுடையவன்

பாதம் 4 — சொற்சாதுரியம்—குயுத்தி உடையவன், பெரியோர் சேர்க்கையுடையவன், காரிய நிதானமுடையவன்

**8. பூசம்** — புத்திசாலி, வாக்கு வல்லபமுடையவன், தரும குணமுடையவன், தாய் தந்தையர்ப் பிரியன், காமமுடையவன் சண்டைகாரன் செல்வந்தன் பிரபுத் தன்மையுடையவன், கபடகுணமுள்ளவன், ஞான அறிவுடையவன், கோபக்குணமுள்ளவன்

பாதம் 1 — தருமஞ் செய்பவன், கோபக்குண முள்ளவன், புத்திப்பலம் உள்ளவன், தீர்க்காயுளுடையவன்

பாதம் 2 — பிரபுத் தன்மையுடையவன், நிதானமுடையவன், அந்நியர் நட்புடையவன்

பாதம் 3 — இனசனர் நட்புடையவன், ஞான அறிவுடையவன், நற்காரியங்கள் செய்பவன்

பாதம் 4 — கோபக்குணமுள்ளவன், வஞ்சக மனமுடையவன், பெண்கள் நாட்டமுடையவன்

**9. ஆயிலியம்** — கோபக்குணமுள்ளவன், துன்மார்க்கன், விவேகி, சிற்றுணவுகளிற் பிரீதி உள்ளவன், ஞான அறிவுடையவன் சத்துருக்களை நேசிப்பவன், வலியோருக்கு அஞ்சாத நெஞ்சுத் திடமுள்ளவன், விசாலமான கண்களையுடையவன், பிறரை வஞ்சித்துப் பொருள் தேடுபவன், செல்வந்தன்.



பாதம் 1 — அதிக செல்வமுடையவன், பெண், பூமி இவற்றில் மிக்க ஆசையுடையவன், விவேகி, பல தொழில்களையும் செய்பவன்.

பாதம் 2 — தீய நடையுடையவன், குரூர புத்தியுடையவன் அந்நியர் ஏவற்றொழில் செய்பவன்.

பாதம் 3 — கோபக்குணமுடையவன், ஞான அறிவுடையவன், சோப்பலுள்ளவன், பெண்ணை வருத்துபவன்.

பாதம் 4 — பிறர் பொருளை அபகரிப்பவன், தீமை செய்பவர்களோடு இணங்குபவன், நீசப்பெண் சேர்க்கையடைபவன்.

**10 மகம்** — அழகன், விவேகி, அற்ப நித்திரையுடையவன், வலது புற மறுவுடையோன், நீராடும் விருப்புடையோன், பல இடங்களிலும் சஞ்சரிப்போன், அளவாகப் பேசுபவன், தெய்வபக்தி பிதுர் பக்தியுடையோன், பல நூலறிவுடையோன், சேர்ந்தவர்களுக்கு இயைந்த நடையுடையோன், பேராசையுடையோன்.

பாதம் 1 — அதிக யூகமுடையோன், பேராசைடையுயோன் அச்சம் கொள்ளும்படியான கோபநோக்குடையோன்.

பாதம் 2 — அழகான தேகமுடையோன், செல்வமுடையவன், தாது நோயுடையோன், சந்தோஷமுள்ளவன்.

பாதம் 3 — சாதுவான குணமுடையோன், கடின சித்தமுடையோன், பேராசையுடையோன், புனிதமுடையோன்.

பாதம் 4 — மனச் சஞ்சலமுடையோன், இனிமையான பேச்சுடையோன், பெண்புத்தி கேட்போன் சிரங்கு முதலிய நோய்களுடையோன்.

**11. பூரம்** — நல்ல அறிவுடையவன், பொருளை வருந்தித் தேடுபவன், பின் நடக்கப்போவதை முன்னரே அறிந்துகொள்பவன், கடுஞ் சொல்லுடையவன் துர்ப்புத்தியுடையவன், வர்க்கத்தினால் பொருள் ஈட்டுபவன்.

பாதம் 1 இன்சொல்லும் ஆசாரமும் உடையவன், வீரக் குணம் உள்ளவன், வியாபாரம் செய்பவன், கோபமுள்ளவன், சிறிய வீட்டில் வாழுபவன்

பாதம் 2 மனக்கிலேசம் உடையவன், தாகமுடையவன், கமத்தொழல் விருப்புள்ளவன், பிறரால் உதவி பெறுபவன்

பாதம் 3 நான் என்ற தத்துவமுள்ளவன், மேம்பாடுள்ளவன், கீர்த்தியுள்ளவன்

பாதம் 4 துக்கமுடையவன், பிறர் நிந்தை செய்பவன் பெரியோரைத் தூஷிப்பவன்

12 உத்தரம் நற்குணமுடையவன், நன்றி மறவாதவன், நல் நடத்தையுடையவன், அபிமானி, போகவான், பழைய பொருள் சேரும் பலனுடையவன், பழைமையைக் கைக்கொள்பவன், கீர்த்தியை விரும்புபவன், தைரியமுள்ளவன், பெண்களிடத்து அன்புள்ளவன்

பாதம் 1 அன்பான பேச்சுடையவன், கீர்த்திப் பிரியமுடையவன், தைரியமுடையவன், கண்ணியவான், இனசனரில் அன்புடையவன்

பாதம் 2 போசனப்பிரியமுடையவன், சஞ்சல சித்தமுடையவன், காமுகத்தன்மையுடையவன், தரித்திரமடைபவன்

பாதம் 3 இடாம்பீகன், ஆசாரமுடையவன், வாணிபஞ் செய்பவன்

பாதம் 4 சிநேகம் மறவாதவன், பிறரைத் தூஷிப்பவன் வாலிபத்தில் மாதவை இழப்பவன், துட்டத்தனமுள்ளவன்

13 அத்தம் நல்வார்த்தை பேசுபவன், அங்கலட்சணமுள்ளவன், அகங்காரி, இராசயோகமுடையோன், கல்வித் திறமையால் பண்டிதனுகுபவன், தருமம் — நற்கருமங்கள் செய்பவன், நற்கீர்த்தியுடையோன்

பாதம் 1 திருத்தமான வேலை செய்பவன், அகங்காரி, பொய்பேசுபவன், பசுக்களிடத்து அன்புள்ளவன்



பாதம் 2 நற்குணமுடையவன், செய்தொழிலை நன்ருய் அறிபவன், ஆடல் பாடல்களில் பிரியமுள்ளவன், பாக்கியமுள்ளவன்

பாதம் 3 மனப்பகை கொள்பவன், தந்திரமான நடையுடையவன், நோயாளி, வியாபாரப்பற்றுடையவன்

பாதம் 4 இராச யோகமுடையவன், மாதாவிடத்து அன்பு கொண்டவன். நற்குணம் — நற்கீர்த்தியுடையவன், நீதியான நடையுடையவன், தர்ம சிந்தையுள்ளவன், தந்தையைச் சிறியவயதில் இழப்பவன்.

14 சித்திரை வயிற்றிலும் முகத்திலும் மச்சமுடையோன், பரிவும் அன்புமான பேச்சுடையோன், துரிதமாக முன்னேறுவோன், நற்கருமங்கள் செய்வோன், உலோப குணமுள்ளவன், விசித்திர வாக்குடையோன், மர்மமானவன், சமயோசித புத்தியுடையவன். தேசசஞ்சாரி. பரந்தகீர்த்தியுடையோன், மனோதுக்கமுடையோன்.

பாதம் 1 நேத்திர ரோகமுடையவன், தேச சஞ்சாரி, தீங்கு செய்ய முயலுபவன்.

பாதம் 2 தேகத்தைப் பாதுகாப்பவன், வறுமையை அனுபவிப்பவன், மனோசஞ்சலமுடையவன், வாக்குறுதி உடையவன்.

பாதம் 3 பரந்த கீர்த்தியுடையவன், ஞான அறிவு நன்னடை ஒழுக்கம் என்பன உடையோன், வித்துவத்தன்மை உடையவன்.

பாதம் 4 விவேகம் உள்ளவன், சத்துருக்களை அடக்குபவன், வெற்றியடைபவன்.

15. சுவாதி தெய்வபக்தியுடையவன், உண்மை பேசுபவன், தன் எண்ணப்படி நடப்பவன், பலவான், வாய்ச்சாலம் உடையவன், கல்வித்திறமை உடையவன், தன் எண்ணத்தை வெளியிடாதவன், கலகப் பிரியன், காமக்குணமுடையவன், திரவியமுடையவன்.

பாதம் 1 ஞான அறிவு, சாதுக்குணம் உடையவன், கல்விப் போதனை செய்பவன், வீரக்குணமுடையவன்.

பாதம் 2 திடசரீரமுடையவன், வாய்ச்சாலம் உள்ளவன், காமக்குணமுடையவன், தன் எண்ணத்தை வெளியிடாதவன், காரிய சமர்த்தன்.

பாதம் 3 நல்லொழுக்கமற்றவன், குரூர புத்தியுடையவன், கலகப்பிரியமுள்ளவன்.

பாதம் 4 சோரக் குணம் உள்ளவன், கலகப் பிரியமுள்ளவன், காமக்குணமுள்ளவன், அங்கச் சிறப்புடையவன்.

16. விசாகம் தெய்வபக்தி, நற்குணங்கள் உள்ளவன், புத்திசாலி, நீதியாயும் அடக்கமாயும் பேசுபவன், வஞ்சகமுடையவன், கூர்மையான புத்தி உள்ளவன், சோதிட சாத்திரமறிந்தவன், நோயுடைய தேகம் முற்கோபம் என்பன உடையவன், தற்புகழ்ச்சி உடையவன், வருங்காரியம் அறிபவன்

பாதம் 1 கல்வியறிவுடையவன், சோதிட உணர்ச்சியுடையவன், வஞ்சகக் குணமுள்ளவன், கீர்த்தியுடையவன்

பாதம் 2 சத்திய வாக்குடையவன், நீதியுடையவன், நோயுள்ள தேகமுடையவன், சரசமான பேச்சுடையவன், தற்புகழ்ச்சியுடையவன், இன்பத்தில் ஆசையுடையவன்

பாதம் 3 தேகபலமுடையவன், வாய்ச்சாலம் உடையவன், வருங்காலமறிபவன்

பாதம் 4 ஞான அறிவுடையவன், செல்வமுடையவன், அமைதியான புத்தியுடையவன், தனக்கு இயைந்த விவாகம் செய்து கொள்பவன்

17. அனுட்டம் நற்குணம், விவேகம் என்பன உடையவன், உபாயமாகப் பேசுபவன், நீதியுடையவன், பலராலும் புகழப்படுபவன், பிதாமாதாவை அன்போடு ஆதரிப்பவன், அரசராற் சன்மானிக்கப்



படுபவன் இசைக்கருவிகளில் பிரியமுள்ளவன், பெண்களில் அன்புடையவன், சகோதரதோஷமுடையவன், நுட்பமான - நூதனமான வேலைகள் செய்பவன், சுகானுபவம் உடையவன்

பாதம் 1 நீதியுடையவன், பிறர்குறிப்பறிபவன், ஆசாரம் உடையவன், மந்திரசாதனை செய்யத்தக்கவன்

பாதம் 2 வாய்ச்சாலம் உள்ளவன், நுட்பமான - நூதனமான வேலை செய்பவன், சங்கீதத்தில் பிரியமுள்ளவன், பெண்ணாசையுடையவன்,

பாதம் 3 அங்கலட்சணமுடையவன், சமயோசித புத்தி உடையவன், கல்வி-சாதுரியம் உடையவன், குருவிசுவாசமுடையவன்,

பாதம் 4 அபிமானமுள்ளவன், சகோதரதோஷமுடையவன், தன்னை அடைந்தவர்களுக்கு அன்பு செய்பவன்

18 கேட்டை தேக அழகு உடையவன், விவேகம், சமயோசித புத்தி என்பன உடையவன், இராச சிநேகமுடையவன், பொய் பேசுதல், கோபக்குணம் என்பன உடையவன், சிற்றுணவுகளில் விருப்பமுள்ளவன். அபிமானம் — வெஞ் சொற் பொறுக்காத தன்மையுடைவன், பிற பெண்களில் பிரியமுள்ளவன், தரும சிந்தை — 'தயாள குணம் உடையவன், சங்கீத பிரியமுடையவன், தன் குலத்தைப் புகழ்பவன், பரிகாசஞ் செய்பவன், கண் வியாதியுடையவன்.

பாதம் 1 தேக அழகுடையவன், கருமங்களை அறிந்து விளங்கிச் செய்பவன், பரிகாச வசனம் பேசுவோன்

பாதம் 2 வாய்ச்சாலமுடையவன், ஈகை - இன்சொல் உடையவன், போகவிருப்புள்ளவன், சங்கீதப் பிரியம் உள்ளவன், தேகத்தில் நோயுடையவன்.

பாதம் 3 சாதுவான குணமுடையவன், பிறர் கருமங்களைத் தன் கருமம் போற் செய்பவன், கண் வியாதியுடையவன்.

பாதம் 4 முற்கோபமுள்ளவன் தன் குலத்தைப் புகழுப வன், குரூர புத்தியுள்ளவன், வஞ்சகசக் குண முடையவன்.

19 மூலம் பாவி, நன்றியற்றவன், செய்கின்ற கருமங்கள் வழுவாமற் செய்பவன், பிதாமாதாக்களில் அன் புள்ளவன், கல்வியறிவு, விவேகம் உள்ளவன் நோயாளி, பிதாமாதாக்களால் துன்பமடைப வன், சிறப்புஞ் செல்வமும் உடையவன்.

பாதம் 1 பாபச்செயல் புரிபவன், ரோகமுடையவன், பிதா மாதாக்களால் துன்பமடைபவன்.

பாதம் 2 தாயால் துன்பமடைபவன், வயிற்றில் நோயு டையவன், உண்மை பேசுபவன், கல்வித் திறமை உடையவன், மரியாதை பெறுபவன்.

பாதம் 3 சோம்பலுடையவன், பொருட்செலவுடையவன், துட்டர், பிசாசு, சூனியம் முதலியவற்றுற் பயமடைபவன், கனி வர்க்கத்தில் விருப்புடை யவன்.

பாதம் 4 சிறப்புஞ் செல்வமுமுடையவன், பலமுடையவன் கோபமில்லாதவன், சாமர்த்தியமுடையவன், சத்துருவை அடக்குபவன்.

20 பூராடம் புத்திசாலி, சுகமுள்ளவன், பொய்பேசாதவன் பரோபகாரசிந்தையுடையவன், தாயை சிறு வயதில் இழப்பவன், பெண்களில் பிரியமுடை யவன், அங்க இலட்சனமுள்ளவன், அற்புபுத் திரருடையவன், மனக்கலக்கமுள்ளவன்.

பாதம் 1 விநயமான நடையுடையவன். அற்பபுத்திரரை யுடையவன், சூரக்குணமுடையவன்.

பாதம் 2 அங்க இலட்சணம் உடையவன், சிநேகிதரில் அன்பில்லாதவன், பிறபெண்களில் நாட்ட முடையவன்.

பாதம் 3 பாக்கியமுடையவன், சுகமனுபவிப்பவன், மத் திய வயதில் தாயாற்துன்பமடைபவன்.

பாதம் 4 நோயுள்ள தேகமுடையவன், மனக்கபடமுள் ளவன், தாய் தந்தையரால் துன்பத்தையடை பவன்.



23407

21 உத்தராடம் கல்விப்பிரியம் உள்ளவன், சுகவான், கீர்த்தி மான், போசனப்பிரியமுடையவன், நூதன கருமங்கள் செய்பவன், பல சாத்திரங்களை அறிபவன், உலோபக் குணமுடையவன், பிறர் பொருள்களில் ஆசையற்றவன், நண்பரில் அன்புள்ளவன், ஈகையுடையவன்.

பாதம் 1 நற்புத்தியுடையவன், ஈகையுடையவன், பல சாத்திரங்களை அறிபவன், பிறரை உபசரிப்பவன்

பாதம் 2 கருமங்களை இரகசியமாகவும் கிரமமாகவும் செய்து முடிப்பவன், திடசரீரம் உள்ளவன் உலோப குணமுள்ளவன்.

பாதம் 3 கோபக்குணம், விசாரமனம், குரூரகுணம் என்பன உடையவன், கல்வித் திறமை உடைய வன்.

பாதம் 4 இனசனரில் அன்புள்ளவன், நூதனகருமங்கள் செய்பவன், வியாபாரம் செய்ய விருப்புடைய வன்.

22 திருவோணம் கல்வித்திறமையுடையவன், கீர்தியுடையவன் உதார குணமுள்ளவன், காமக்குணமுள்ளவன், மனக்கபடம் உள்ளவன், மனச் சலனமில்லாத வன், கோபித்தவுடன் சாந்தமடைபவன், வாச னைத் திரவிய விருப்புடையோன், பிடிவாத குணமுள்ளவன், பொதுமகளிரில் ஆசையுடை யவன், உலோபக்குணமுள்ளவன்.

பாதம் 1 விவேகம் உள்ளவன், காவியமறிந்தவன், உற் சாகமுள்ளவன், போகப் பிரியமுள்ளவன், அற்ப புத்திரரையுடையவன்.

பாதம் 2 உலோபக்குணமுள்ளவன், தயவில்லாதவன், சிநேகிதர் குறைந்தவன்.

பாதம் 3 உலோபக்குணமுடையவன், காமக்குணமுள்ள வன். தயவில்லாதவன், நோயுள்ளவன்.

பாதம் 4 தருமக்குணம் உள்ளவன், செல்வமுள்ளவன், பயிர்ச் செய்கை விருப்புடையவன். பொது மகளிில் ஆசையுடையவன்.

23 அவிட்டம் — அறிவுடையவன், அடக்கமுடையவன், பூமி யாசையுடையவன், பெண்ஆசை கொண்டவன், பிறர் பொருளில் ஆசையில்லாதவன், போச னப்பிரியம் உள்ளவன், பிதா மாதாக்களில் அன்புடையவன், சுகானுபவமுடையவன், பிற ருக்கு அஞ்சாதவன், தன் சொல் மேலாயி ருக்க வேண்டுமென்னும் எண்ணம் உள்ள வன், தன்னைக் குற்றம் சொன்னால் சகிக்கமுடி யாதவன், மனக்கிலேசமுள்ளவன்.

பாதம் 1 — உண்மை பேசுபவன், விவேகமுடையவன், பசி பொறுக்க முடியாதவன், மனக்கிலேசம் உள் ளவன், இரக்கமில்லாதவன்.

பாதம் 2 — சாத்திரங்களை அறிந்தவன், அதிக யூகமுள்ள வன், தருமக்குணமுள்ளவன்.

பாதம் 3 — நற்குணமுள்ளவன், அபிமானம் உள்ளவன், எவரும் மதிக்கும்படியான நடையுள்ளவன்.

பாதம் 4 — செல்வமுடையவன், தூல தேகமுள்ளவன், குரூ ரக் குணமுள்ளவன், கர்வநடையுள்ளவன்.

24 சதயம் — புத்தியுடையவன், நன்னடையுடையவன், இன் பமாகப் பேசுவோன். அற்ப உணவு அருந்துப வன், பெரியோர் சிநேகமுடையவன், பெண்க ளில் அன்புடையவன், விடாமுயற்சியுடையவன், நினைத்ததை முடிப்பவன், வயிற்றில் நோயுள் ளவன், அபிமானம் உடையவன், ஆசாரமுடை யவன்.

பாதம் 1 — அழகும் நற்குணமும் உடையவன், பொருளுடை யவன், உதார குணமுள்ளவன், ஆசாரமுள்ள வன், குருக்கள், பசுக்களிடத்து அன்புள்ளவன்.

பாதம் 2 — திடீரெனக் கோபமடைபவன். மனக்கிலேசம் உள்ளவன்.

பாதம் 3 — வயிற்றில் நோயுடையவன். பசியுடையவன், நற்கருமங்களைப் பிரயாசப்பட்டு முடிப்பவன், சேவக விருத்தியுடையவன்.



பாதம் 4 — நற்குணமுடையவன், அபிமானமுடையவன், நினைத்ததைச் செய்து முடிப்பவன், சுகமனுப விப்பவன்

25. பூரட்டாதி — கல்வியுடையவன், மந்திர சாத்திரமறிபவன், பிரபுக்கள் நேசன், பயந்தவனைப்போல் நடப் பவன், நற்குணமுடையவன், பெண்களால் பயன் அடைபவன், மனைவிமேல் அன்புடை யவன்,பாக்கியமுடையவன்

பாதம் 1 — குருபக்தியுடையவன், மனைவிமேல் அன்புடை யவன், தேகபலம் உள்ளவன், சுகமனுபவிப் பவன்

பாதம் 2 — சிரேஷ்டமான குணமுடையவன், மந்திர சாத் திரம் அறிந்தவன், எவருக்கும் இதங்கூறிக் கருமம் சாதிப்பவன்

பாதம் 3 — கல்வித் திறமையுடையவன், பித்தரோகமுடை யவன், பிறர்மனைப் போசனப் பிரியமுடைய வன், நன்னடை, பொறுமையுடையவன்

பாதம் 4 — பிறர்புகழும் நற்குணங்களுடையவன், உண்மை பேசுபவன். அழகுடையவன், அன்புடையவன், சிநேகிதரில் அன்புடையவன், பாக்கியமுடை யவன்

26. உத்தரட்டாதி — கல்வியும் விவேகமும் உடையவன், அன்புடன் சொற்சாதுரியமாகப் பேசுபவன், பிறர் கரு மம் பார்ப்பவன், பெண்களில் அன்புடையவன், கோள் சொல்பவன், புத்திர விருத்தியுடைய வன், பிறர்சொற்கேட்டு நடப்பவன், முற் கோபம் உடையவன், துக்கமுடையவன்

பாதம் 1 — பரோபகார சிந்தையுடையவன், கோபமுடை யவன், சஞ்சலமுடையவன்

பாதம் 2 — நற்குணமுள்ளவன், தேகரோகம் உள்ளவன், சாதுவானவன், வறுமையுள்ளவன்

பாதம் 3 — முற்கோபமுடையவன், தேவபக்தியுடையவன், பிறர்சொற் கேட்பவன், கோள் சொல்பவன், விவேகம் உள்ளவன் தீமை செய்யாதவன்

பாதம் 4 உதாரகுணமுள்ளவன், பிறர்சொற் கேட்பவன், கிலேசமுடையவன், பயிர்த்தொழில் விருப்புடையவன்

27 ரேவதி கடவுள் பக்தியுடையவன், திடமான புத்தியுடையவன், சுந்தர புருடன், மனைவியின்மேல் பிரியமுடையவன், சிலகாலம் அதிக செல்வப் பேறுள்ளவன், குருபக்தியுடையவன், மனக் கிலேசமுடையவன், சத்துருவை வெல்லுபவன், கலகப் பிரியன், சரீர சுகமுடையவன்

பாதம் 1 கல்வித் திறமையுடையவன், நற்குணமுள்ளவன், கலகப் பிரியன், மனக்கிலேசமுள்ளவன், விரைவாகக் கருமமாற்றுபவன்

பாதம் 2 விவேகமுடையவன், சுக சரீரமுடையவன், கோபக்குணமுள்ளவன், அகங்காரி, மிருதுவான சரீரம் உடையவன்

பாதம் 3 புத்திக்குறைவு உடையவன், கஷ்டம் அனுபவிப்பவன் தன்னதிக்கம் செலுத்த முடியாதவன்

பாதம் 4 அலங்காரப் பிரியன். சரீரசுகமுடையவன், வீரத்தன்மை கொண்டவன், சத்தியவாக்குடையவன், சத்துருக்களை வெல்பவன்

## 4. திதிப் பலன்

1. பிரதமை : செல்வன், எதையும் சிந்திக்கும் புத்தியுடையவன், சந்தோஷப் பிரியமுடையவன்
2. துதியை : சத்திய வசனம் பேசுபவன், பொய் சொல்லாதவன், கீர்த்தியுடையவன், பொருள் சேர்ப்பவன், இனசனரை இரட்சிப்பவன்
3. திரிதியை : எண்ணிய கருமம் முடிப்பவன், பராக்கிரமம் உடையவன், சுத்தமுடையவன், பயமுள்ளவன், தேவபணி செய்பவன்
4. சதுர்த்தி : தேசசஞ்சாரம் செய்பவன் எல்லோருக்கும் நண்பன், அளவற்ற காரியம் சிந்திப்பவன், மந்திரவாதி
5. பஞ்சமி : நுட்பமான தேகத்தையுடையவன், சமய ஆராய்ச்சியுடையவன், பெண்கள்மேல் பிரியம் உள்ளவன், காமமுள்ளவன், துக்கமுள்ளவன்
6. சஷ்டி : மெலிந்தவன், முன்கோபி, செல்வன், பிரபுக்கள் சிநேகமுள்ளவன்
7. சப்தமி : தயாள சிந்தையுள்ளவன், பராக்கிரமசாலி, செல்வன், கண்டிப்புடையவன், கசரோகி
8. அட்டமி : இலட்சுமீகரமுடையவன், பிறவிச் செல்வமுடையவன், புத்திரச் செல்வமுடையவன் காமுகன், கசரோகி
9. நவமி : தூலதேகத்தையுடையவன், மனைவி மக்களை விரும்பாதவன், வேறு பெண்களில் நாட்டமுள்ளவன், கீர்த்தியுடையவன்
10. தசமி : குணசீலன், தர்மவான், யோக்கியவான்
11. ஏகாதசி : அழகற்றவன், உத்தம காரியங்கள் செய்பவன் செல்வன், நீதியுடன் நடப்பவன்
12. துவாதசி : குணசீலன், நூதனத் தொழில் புரிபவன், செல்வன், தர்மவான்
13. திரியோதசி : இனசனமற்றவன், கீர்த்தியுள்ளவன், செல்வன், உலோபகுணத்தை உடையவன், மந்திரமறிந்தவன்
14. சதுர்த்தசி : கோபி, பிறர்பொருளை அபகரிப்பதில் பிரியமுடையவன், குரோதகுணமுள்ளவன், பிறர் தூஷணையடைவோன்
15. பௌர்ணமி : புத்திசாலி, வித்தைப் பிரியன், பொறுமையுடையவன், உண்மை பேசுபவன், தயாள குணமுடையவன், கீர்த்தியுடையவன்.

## 5. கரணப் பலன்

1. பவம் : பாவி, காமுகன், சோம்பலுள்ளவன்
2. பாலவம் : நற்குணவான் கண்ணியவான், சங்கீதப் பயிற்சியுடையவன்



கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு அன்பளிப்பு
க. குமரன்

3. கௌலவம் : நன்னடையுடையவன், செல்வந்தன், கீர்த்தியுடையவன்

4. தைதுலே : நன்னடையுடையவன், செல்வந்தன், தர்மவான், சந்தோஷமுடையவன்

5. கரசை : தெய்வபக்தியுடையவன், மாதா பிதாவை நேசிப்பவன், கீர்த்தியுடையவன்

6 வணிசை : நற்குணவான், வெகு சாமர்த்தியமுடையவன், இடாம்பீக குணமுடையவன், பெண் நாட்டமுள்ளவன்.

7. பத்திரம் : சிறப்புடையவன், பெண்கவலை கொண்டவன்.

8. சகுனி : பாவி, முன்கோபி, அறிவு குறைந்தவன்.

9. சதுஷ்பாதம் : செல்வன், சர்வ செயல் வல்லபன்.

10. நாகவம் : பராக்கிரமசாலி, சமர்த்தன், செல்வன்.

11. கிம்ஸ்துக்கினம் : சஞ்சலமுடையவன், தந்திரமுள்ளவன், பலராலும் விரும்பப்படுபவன்.

## 6. யோகப் பலன்

1. விஷ்கம்பம் : இசைப்பிரியன், சத்துரு சங்காரி, தனவான் மாடாடு வைத்திருப்பவன்.

2. பிரீதி : தைரியசாலி, நற்குணமுடையவன், எத்தொழிலும் செய்பவன்.

3. ஆயுஷ்மான் : சுகவான், பராக்கிரமசாலி, குணசீலமுள்ளவன், தீர்க்காயுள் உடையவன்.

4. சௌபாக்கியம் : சுகவான், தேவபக்தியுடையவன், பெருமையுடையவன், மானமுள்ளவன்.

5. சோபனம் : சற்குணமுடையவன், சாமர்த்தியமுள்ளவன், ஆலயதரிசனம் செய்பவன்.

6. அதிகண்டம் : கீர்த்தியுடையவன், செல்வந் திரட்டுபவன், இனசனரால் போற்றப்படுபவன்.

7. சுகர்மம் : புத்திசாலி, புண்ணியசாலி.

8. திருதி : நல்வார்த்தை பேசுபவன், பேராசையுடையவன் பொறுமையுடையவன்.



9. சூலம் : கருணையுடையவன், சத்துரு சங்காரி, கோபி கலகப்பிரியன்.

10. கண்டம் : அகங்காரி, பயந்தவன், இலட்சுமீகரமற்றவன்,

11. விருத்தி : செல்வர்கள் நண்பன், செல்வன். சரிதிரப் பிரசங்கி.

12. துருவம் : பெரியோர் பக்தியுடையவன், இதமாகப் பேசுவோன், தனவந்தன்.

13. வியாகாதம் : தேச சஞ்சாரி, அறிவில்லாதவன், விரோதி துக்கமுடையவன்.

14. அரிசணம் : நற்கருமங்கள் செய்பவன், புத்திமான், தனவான், இனிப்புப் பொருள்களில் பிரியமுடையவன்.

15. வச்சிரம் : தனவான், பூமியுடையவன், காமுகன்.

16. சித்தி : தெய்வபக்தியுடையவன், விசுவாசமுடையோன், செல்வந்தன்.

17. வியதிபாதம் : வஞ்சகன், தீங்கு செய்பவன், கெட்ட நடையுடையவன்.

18. வரியான் : பொய்யன், மகாதுட்டன், கொலைப்பிரியன்.

19. பரிகம் : கபடன், தீயகுணன், ஈனன். மோசஞ் செய்பவன்.

20. சிவம் : மாதா பிதாவைப் பேணுபவன், நல்ல சரித்திரம் படித்து அதன்படி நடப்பவன்.

21. சித்தம் அழகற்றவன், நன்னடை போதிப்பவன், செல்வந்தர் நேசன்

22. சாத்தியம் : சாத்திரமறிந்தவன், வித்துவான், உத்தம பெண்ணை மணப்பவன்.

23. சுபம் : அழகன், பொருள் திரட்டுபவன், பெண்கள் நாட்டமுடையவன்.

24. சுப்பிரம் : மிருதுவான தேகமுடையவன், வித்துவான் தர்மவான், கடுங்கோபி, செல்வந்தன்.

25. பிராமியம் : தயாள சிந்தையுடையவன், தர்மவான், தான் புசிக்க உழைக்காதவன்.

தி 16

26. மாகேந்திரம் : செல்வந்தன், தயயாள சிந்தையுடையவன், சகலமும் அறிந்தவன்.

27. வைதிருதி : பலாபலன், தருமவான், இடாம்பீகன், அயலாரை அவதூறு கூறுபவன்.

7. கால ஓரைப் பலன்

| | | |
|---|---|---|
| 1. சூரியன் | — | மிருத்தியு |
| 2. சந்திரன் | — | பூர்வபட்சம் மகிழ்ச்சி<br>அமரபட்சம் தீது |
| 3. செவ்வாய் | — | கலகம் |
| 4. புதன் | — | சந்தோஷம் |
| 5. வியாழன் | — | உடை, பொன் விருத்தி |
| 6. வெள்ளி | — | விவாகப் பலன் |
| 7. சனி | — | சிறைப் பயம் |

8. முக்குணவேளைப் பலன்

1. இராசதம் : கல்வியுடையவன், நற்புத்தியுடையவன், சுகமுடையவன், தேச உபகாரம் செய்பவன், மேம்பாடாய் நடப்பவன்.

2. சாத்வீகம் : புத்திமான், அழகுடையவன், தெய்வபக்தியுடையவன்,

3. தாமதம் : கல்வியற்றவன், வாக்குச் சுத்தமற்றவன், சோம்பலுடையவன், அசதியுடையவன், பாவி.

9. உதய லக்கின பலன்

1. மேடம் உதயலக்கினமாயின் :

இராச சன்மானம் பெறுதல், அதிக அழகுள்ளவனுதல், இளைத்த தேகம், தைரியற்குறைவு, ஆபரண விருத்தியுடைமை தனஞ் சேர்த்தல், சாமர்த்திய குணம், தர்ம சாத்திர விருப்பு, சொல்வன்மை, மிருகங்களை வதைத்தல், திடபுத்தி முதலிய குணங்கள் இருக்கும், இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 100 வயதுவரை ஆயுள் உண்டு.



2. இடபம் உதய இலக்கினமாயின் :

தெய்வ பக்தியுடையவன், நற்குணங்களுடையவன், அற்ப போசனம் செய்பவன், புளிப்புச் சுவையிற் பிரியமுடையவன், ஏவலாட்களையுடையவன், கணிதக் கல்வியைக் கற்குமாசையுடையவன், வஸ்திராபரணச் சிறப்புடையவன், கபடமற்றவன்போல் நடித்து பிறர்பொருளை அபகரிப்பவன், இருமல் நோயாற் பீடிக்கப்படுபவன், குழந்தைகளின் மழலைச் சொல் கேட்பதில் பிரியமுள்ளவன், களத்திர பீடையுடையவன். இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 77 வயது ஆயுளுடையவன்.

3. மிதுனம் உதய இலக்கினமாயின் :

ஆசாரம், அபிமானம், செல்வம் என்பன உடையவன், சத்துருக்களை ஜெயிப்பவன், குளிர்ந்த பேச்சுடையவன், கபடமாய் வாக்குச் சுத்தமின்றிப் பேசுபவன், விரதம் அனுட்டிப்பவன், தார சுகக் குறைவும் பெண் மோகமும் உடையவன், பித்த ரோகமுடையவன், இனசனர் மத்தியில் முதல்வனுய் இருப்பவன், கிரமமாகத் தன்கருமம் பார்ப்பவன், இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 65 வயது ஆயுளுடையவன்.

4. கர்க்கடகம் உதய இலக்கினமாயின் :

குருவிசுவாசமும் கீர்த்தியுமுடையவன், செல்வந்தன், தந்தைக்கு மாறுன கருத்துடையவன், உணவுக்குக் குறைவற்றவன், காணுதவிடத்தில் மறுவுடையவன், பொதுப்பெண்களில் ஆசையுடையவன், சாமர்த்தியம், பராக்கிரமம் உடையவன். சில நாள் தரித்திரம் அனுபவிப்பவன், புத்திரர் குறைவாக உள்ளவன். இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 90 வயது ஆயுளுடையவன்.

5. சிங்கம் உதய இலக்கினமாயின் :

தொழிலின்மேல் அதிக விருப்புடையவன், பசி பொறுக்கமாட்டாதவன், நன்ருய் உண்பவன், தரும குணமுடையவன், நோய் துன்பம் ஏற்பட்டால் உடனே சுகமடைபவன், தெய்வப்பணி செய்பவன், எவரிலும் அன்புடையவன், அற்ப புத்திரரையுடையவன், போகவிருப்புடையவன், தாய் தந்தையரில் பிரியமற்றவன், இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 80 வயது ஆயுளுடையவன்.

6. கன்னி உதய இலக்கினமாயின் :

அழகு, நற்குணம், ஆசாரம் என்பன உடையவன், தர்மம் செய்பவன், பல கருமங்களும் அறிந்தவன். பின் வயதில் அதிக செல்வம் உடையவன், முன்வயதில் கஷ்டமடைபவன், வாகன விருப்புடையவன், புத்திர விருத்தியும் இனசனக் கட்டுமுடையவன், இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 77 வயதுக்குக் குறையாத ஆயுளுடையவன்.

7. துலா உதய இலக்கினமாயின் :

நற்குணம், நல்லறிவு வல்லபம் உடையவன், அபிமானி, மிகுந்த செல்வத்தையடைபவன், கலையாராய்ச்சியுடையவன், குடும்ப - புத்திர விருத்தியுடையவன், இனசனக் கட்டு, இராசசிநேகம் உடையவன். வாசனைப்பூக்களில் விருப்புடையவன், இரண்டு மனைவியரையுடையவன், இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 85 வயது ஆயுள் உடையவன்.

8. விருச்சிகம் உதய இலக்கினமாயின் :

நற்குணம், செல்வம் உடையவன், சில காலம் தரித்திரம் அனுபவிப்பவன், பேரறிவுடையவன், நல்வார்த்தை பேசுபவன், தனது மனைவியிடத்தில் பிரியமுள்ளவன், நினைந்த கருமத்தைக் கிரமமாக முடிப்பவன், பிதா, மாதாக்களிடத்தில் அன்புள்ளவன், தன் குலமத்தியில் பிரதானியாயிருப்பவன், அரச வருமானம் பெறுபவன், இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 90 வயது ஆயுளுடையவன்.



9. தனு உதய இலக்கினமாயின் :

தயை, தருமம், நீதியுள்ள நடத்தையுடையவன், பெரியோரிடத்து மரியாதையுடையவன், நல்ல கல்வியை இளம் வயதிற் கற்பவன், பல இடங்களுக்கும் திரிபவன், நடுவயதில் பொருட் செலவால் அலைச்சல் அடைபவன், பொதுசன மரியாதை பெறுபவன், பிறருக்கு இனிமையானவன், மிகுந்த புத்திரரையுடையவன், இரகசிய இடத்தில் மறுவுள்ளவன், உண்மை பேசும் குணமுடையவன், மனைவியிடத்தில் பிரியமுள்ளவன், எப்பொழுதும் முயற்சியுடையவன் இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 77 வயது வரை ஆயுள் உடையவன்.

10. மகரம் உதய இலக்கினமாயின் :

திரண்டு, உருண்ட நேத்திரத்தை உடையவன், நல்ல தேகமும், நற்புத்தியும் உடையவன், பிறர் அறியாத இடத்தில் மறுவுடையவன், வாசனை மலர்களில் பிரியமுடையவன், மனைவியிடத்தில் பிரியமுள்ளவன், மிகுந்த புத்திரரையுடையவன், வாய்ச்சாலமும் உபயாயபுத்தியும் உள்ளவன். பட்சிகளை இம்சிப்பவன், சுகவீனம் உடையவன். இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 67 வயது ஆயுள் உடையவன்.

11 கும்பம் உதய இலக்கினமாயின் :

குள்ளமானவன், பித்த தேகத்தையுடைவன் கருமங்களைத் தாமதமாகச் செய்பவன், தன்னைத் தானே புகழ்ந்து கொள்பவன், சிநேக விரோதமடைபவன், பிறரை இகழ்பவன், பிறர் செய்த உபகாரத்தை மறப்பவன், பெண்களுக்கு நண்பன், சுகானுபவமுள்ளவன், இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 80 வயது ஆயுளை உடையவன்.

12. மீனம் உதய இலக்கினமாயின் :

தனவான், பொன், நவமணிகள் உடையவன், அற்ப ஆசையுடையவன், ஞாபசக்தி, தெய்வபக்தி குருபக்தி, பெரியோரிடத்து அன்பு என்பன உள்ளவன்' வாசனை மலர்களில் விருப்புடையவன், அழகும், அறிவும் உடையவன், கண்ட சிற்றுண்டிகளையும் உண்பவன், காது நோய் உடையவன், பிறர் பொருளில் ஆசை கொள்பவன், தயை, பொறுமை உடையவன், நற்குணமற்ற இரு மனைவியரையடைபவன், எதிலும் மிக்க கவனமுடையவன், இலக்கினத்தைச் சுபர் நோக்கில் 100 வயது வரை ஆயுள் உடையவன்.

10. சந்திர இலக்கின பலன்.

1. மேடம் சந்திர லக்கினமானால் :

சரீர பெலமும், சிவந்த கண்ணும் உடையவன், சிரசில் மறுவுடையவன், அதிக ஆசையுடைவன், சீக்கரத்தில் சந்தோஷமடைபவன், தூரவழி நடப்பவன், பெண் போகத்தில் விருப்புடையவன், பொருளைச் சம்பாத்தித்தும் பாதுகாத்தலில் கவனமில்லாது செலவு செய்பவன்.

2. இடபம் சந்திர இலக்கினமானால் :

நற்குணம், தேக அழகு உடையவன், தயவுடையவன், தேகசுகமுடையவன், முற்சகோதரர் உடையவன், மத்திம ஆயுளுடையவன், பெண்களுக்கு இனியவனாக நடப்பவன், சிநேகிதர்களையுடையவன் கருமங்கள் முற்றாக முடிந்த பின்பே அதனாற் சந்தோஷிப்பவன்

3. மிதுனம் சந்திர இலக்கினமானால் :

உண்மை பேசுபவன், விவேகமுள்ளவன், இதமாகப் பேசுபவன், போசனப் பிரியமுள்ளவன், பட்டாடைகளில் விருப்புள்ளவன், பெண்ணினத்தால் மகிழ்ச்சிப்படுத்தப்படுபவன், சுகசீவனம் செய்பவன், பாக்கியமுடையவன்.



4. கர்க்கடகம் சந்திர இலக்கினமானால் :

மனக்கபடம் உள்ளவன், உபாயமான புத்தியுள்ளவன், எவருடனும் அன்பாக நடப்பவன், சிநேக விருப்புடையவன், கருமங்களை உத்தேசத்தினால் அறிபவன், வீடு முதலிய கட்டடச் சிறப்புகள் செய்விப்பவன், பெண்பாலாரைப் பரிகாச வார்த்தையினால் வெல்பவன்.

5. சிங்கம் சந்திர இலக்கினமானால் :

முகலட்சணம் உடையவன், கர்வ நடையுடையவன், தைரியபுத்தி இல்லாதவன், அற்பகாரியங்களிலே கோபிப்பவன், தயவுக் குறைவானவன், மனத் துக்கமுடையவன், கடிந்துபேசுபவன், உற்சாகமுள்ளவன், சுதந்திர விருப்புள்ளவன், பெண்களோடு கலகஞ் செய்பவன், மலை, வனம் முதலிய இடங்களில் சஞ்சரிக்க விருப்புடையவன், பொருள் ஈகை உடையவன், தாம்பூல விருப்புடையவன்

6. கன்னி சந்திர இலக்கினமானால் :

உண்மை பேசுபவன், பலவித கல்வி கற்பவன், தரும சாத்திர அப்பியாசமுடையவன், நற்கருமங்களில் தானும் உடன்படுபவன். கருமங்களில் வெற்றியும் மேன்மையும் அடைபவன், தைரியக் குறைவான தேகம் உடையவன், மிருதுவான வார்த்தை பேசுபவன், நல்லோர் பலரால் மதிக்கப்படுபவன், அற்பபுத்திர யோகத்தையுடையவன், அபிமானமுடையவன், பிறதேச சஞ்சார விருப்புடையவன்.

7. துலாம் சந்திர இலக்கினமானால் :

வித்துவத் தன்மையான கல்வியுடையவன், சாந்தகுணமுள்ளவன், ஆசாரக்கிரமம் உள்ளவன், தேவபக்தி, குருபக்தி உடையவன், மனவர்மம் உடையவன், இனசனர் விரோதமுடையவன், மனச்சந்தோஷம் இல்லாதவன், நிலையான மனம் இல்லாதவன், குலமகளை மனைவியாயுடையவன், வியாபாரத்தில் விற்கவும் வாங்கவும் சாமர்த்தியம் உள்ளவன்.

8. விருச்சிகம் சந்திர இலக்கினமானால் :

அச்சமுள்ள மனதையுடையவன், சேட்டைக் குணம் உள்ளவன், பிறரறியாது பாவச்செயல் புரிபவன், பட்சிகள் மிருகங்களை வருத்துபவன், பிதாமாதாவை இழப்பவன், (செவ்வாய் அல்லது இராகு, இந்தச் சந்திர லக்கினத்தில் அல்லது சந்திர லக்கினத்துக்கு 4 - 7 - 10 ஆம் இடங்களில் ஒன்றில் நின்றால் மேற் சொல்லிய பலன்கள் நடக்காது, இராசயோகம் உண்டாகும் எனக் கொள்க)

9. தனு சந்திர இலக்கினமானால் :

சரீர பெலம் உள்ளவன், உற்சாகமுடையவன், நுட்பமாகக் காரியங்களை அறிபவன், அதிக ஆசை உள்ளவன், வீரம் உள்ளவன், வெல்லும் சொற் பேசுபவன், பொருள் தேடும் இயல்புடையவன், தந்தையின் பொருளைச் செலவு செய்பவன், ஈகையுடையவன், காவியம் அறிந்தவன், இனசனரைத் தூஷிப்பவன், அந்நிய சன வசீகரமுடையவன்.

10. மகரம் சந்திர இலக்கினமானால் :

அங்கலட்சண முள்ளவன், காவியம் அறிந்தவன், சரீரபெலம் உள்ளவன், உலோபக்குணம் உள்ளவன், கோள் சொல்லக்கேட்கும் குணம் உள்ளவன் தயைகுறைந்தவன், தனக்கு இஷ்டமானதையே செய்யும் குணம் உள்ளவன், தன் குடும்பத்தில் கவனம் உள்ளவன், பாக்கிய விருத்தியுடையவன், தேவையான நேரம் பொருளினால் கஷ்டப்படுபவன்.

11. கும்பம் சந்திர இலக்கினமானால் :

இடுப்பின் பக்கத்தில் மறுவுள்ளவன், தூலமான உறுப்புக்களையுடையவன், தூரவழிநடக்க அஞ்சாதவன், வாசனைமலர்களில் விருப்புள்ளவன், பெண்கள் நாட்டமுடையவன், சிலகருமங்களை ஆக்கவும் அழிக்கவும் வல்லபம்உள்ள உபாயபுத்தியுடையவன்.



12. மீனம் சந்திர இலக்கினமானால் :

நூதன பொருட்களிலும், சில சம்பந்தமான வஸ்துக்களிலும் விருப்புடையவன், வீடுமுதலிய வற்றை திருத்தமாகவும் அழகாகவும் செய்விப்பதில் விருப்புடையவன், மலர்களிடத்தில் ஆசையுடையவன்.

11. கிரகங்கள் இராசிகளில் இருக்கும் பலன்.

மேடம், இடபம், முதலிய 12 இராசிகளில் சூரியன், சந்திரன், முதலிய கிரங்கள் இருக்கும் பலன்கள் பின் வருவனவாகும். இவை, கிரகங்களின் நட்பு ஆட்சி உச்சம் முதலிய வலிமைக்கும், ஈன வலிமைக்கும் ஏற்ப கூடிய குறைந்த பலனைக் கொடுப்பனவாகும்.

(1) சூரியன் இருக்கும் இராசி :

1. மேடம் ஆனால், சொற்ப தனமுள்ளவன், சாத்திர வாதம் செய்பவன், புகழுடையவன்
2. இடபம் ஆனால், சங்கீதப்பிரியன், முகரோகமுள்ளவன் நேத்திரரோகமுள்ளவன். சத்துருக்களையுடையவன்.
3. மிதுனம் ஆனால், கல்வி, தனம் இவற்றை அடைய சதா கவலையுடையவன், தயாளகுணமுள்ளவன்.
4. கடகம் ஆனால், பெண் விடயத்தில் சபலம் உள்ளவன்
5. சிங்கம் ஆனால், அநேக வித்தை அறிந்தவன், தந்திர சாலி, சத்துருவை ஜெயிப்பவன்.
6. கன்னி ஆனால், திரவியம் தேடும் ஆசை அதிக முடையவன், சரீரகாந்தியுடையவன், வெட்கமுடையவன்.
7. துலாம் ஆனால், தைரிய சாலி.
8. விருச்சிகம் ஆனால், கீர்த்திமான்.

9. தனுசு ஆனால், சிறிய வியாபாரி.
10. மகரம் ஆனால், சாமத்திய முடையவன்.
11. கும்பம் ஆனால், புத்திர பௌத்திர சுகமற்றவன்.
12. மீனம் ஆனால், விவசாய விருத்தியுள்ளவன்.

(2) சந்திரன் இருக்கும் இராசி :

1. மேடம் ஆனால், உருண்ட கண்களையுடையவன், காமி, தனமில்லாதவன், மூத்தோருள்ளவன், தண்ணீருக்குப் பயப்படுகிறவன்,
2. இடபம் ஆனால், அழகான தேகமுடையவன், அதிகாரம் பராக்கிரமம், தயாளம், என்பன உடையவன், காமி, பெண்குழந்தைகள் உள்ளவன்.
3. மிதுனம் ஆனால், ஸ்திரீ லோலன், வேத சாத்திரம் அறிந்தவன், சங்கீதப்பிரியன், ஆடல், பாடல் வேடிக்கைகளில் வல்லவன்.
4. கடகம் ஆனால், சோதிட சாத்திரமுணர்ந்தவன், பெண்களுக்கு அடங்கி நடப்பவன்.
5. சிங்கம் ஆனால், கர்வமுள்ளவன், வீரம் உள்ளவன், பெண்களைத் துவேசிப்பவன், அற்ப புத்திரரையுடையவன், பல் நோய், வயிற்று நோய் உள்ளவன்.
6. கன்னி ஆனால், நயமாய்ப் பேசுபவன், வேதசாத்திரம் அறிந்தவன், ஆடல், பாடல், சிற்பசாத்திரம் என்பனவற்றில் விருப்புடையவன், ஸ்திரிலோலன் அந்நிய தேசவாசஞ் செய்ய விருப்புடையவன், அதிக பெண்களையும் சொற்ப ஆண்களையும் பிள்ளைகளாகக் கொண்டவன்.
7. துலாம் ஆனால் அங்கவீனன், வேதசாத்திரமறிந்தவன் வர்த்தகன், தனவந்தன், குடும்பத்தை இரட்சிப்பவன், நோயாளி.
8. விருச்சிகம் ஆனால், கள்ளங்கபடமுள்ளவன், வாலிபத்தில் ரோகி, தாய் தந்தையரை விட்டுப்பிரிபவன், தேச சஞ்சாரி



9. தனுசு ஆனால், சாமர்த்தியமாய்ப் பேசுபவன், நூலாசிரியன், சங்கீதம் சித்திரம் என்பனவற்றில் வல்லவன், பிதிர் சொத்துள்ளவன், குல சிரேஷ்டன்.
10. மகரம் ஆனால், லோபி, மனைவி மக்களிடத்திற் பிரியமுள்ளவன், சதா சஞ்சாரி, நூல்கள் எழுதுபவன், காமி.
11. கும்பம் ஆனால், செவிடன், பாவகாரியஞ் செய்பவன், சலியாமல் நடப்பவன்.
12. மீனம் ஆனால், தனவான் கல்விமான், நீர்ப்பொருள்களில் வியாபாரி, காமி.

(3) செவ்வாய் இருக்கும் இராசி :

1. மேடம் ஆனால், விவசாயத்தினாலும், அரசாங்கத்தினாலும் பொருள் பெறுபவன்.
2. இடபம் ஆனால், காமாக்கினியுடையவன்.
3. மிதுனம் ஆனால், மெல்லிய குரலுள்ளவன்
4. கடகம் ஆனால், அதிக தனவந்தன், இராசப்பிரியன்
5. சிங்கம் ஆனால், ஸ்திரமான செல்வமுடையவன்
6. கன்னி ஆனால், மெல்லிய குரலுள்ளவன்
7. துலாம் ஆனால், காமக்கினியுடையவன்
8. விருச்சிகம் ஆனால், விவசாயத்தினாலும் அரசாங்கத்தினாலும் பொருள் பெறுபவன்
9. தனுசு ஆனால், சுகமும் சந்தோஷமும் உடையவன் எதிரிகளை வெல்பவன்
10. மகரம் ஆனால், கெட்டவர்கள் சகாயம் உடையவன்
11. கும்பம் ஆனால், அரசன் அல்லது அரசனுக்குச் சமானமானவன்
12. மீனம் ஆனால், சுகமும் சந்தோஷமும் உடையவன்

(4) புதன் இருக்கும் இராசி :

1. மேடம் ஆனால், தரித்திரன்
2. இடபம் ஆனால், வித்துவான்
3. மிதுனம் ஆனால், சுகவான்
4. கடகம் ஆனால், செலவாளி
5. சிங்கம் ஆனால், மனைவிக்கு அடங்கி நடப்பவன்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

6. கன்னி ஆனால், நற்குணமுடையவன், ஆபத்துக்கள் நேரிடாதவன்
7. துலாம் ஆனால், வித்துவான்
8. விருச்சிகம் ஆனால், தரித்திரன்
9. தனுசு ஆனால், இராஜப்பிரியன்
10. மகரம் ஆனால், கூலிக்குக் கைத்தொழில் செய்பவன்
11. கும்பம் ஆனால், கூலிக்குக் கைத்தொழில் செய்பவன்
12. மீனம் ஆனால், சேவகஞ் செய்பவன்

(5) குரு இருக்கும் இராசி :

1. மேடம் ஆனால், நற்குணவான், கொடையாளி, தனமும் புத்திரர்களும் அதிகமாக உள்ளவன்
2. இடபம் ஆனால், வல்லமைசாலி
3. மிதுனம் ஆனால், அதிக சிநேகிதருடையவன்
4. கடகம் ஆனால், அதிக புத்திரரையுடையவன், புத்திமான்
5. சிங்கம் ஆனால், கீர்த்திமான்
6. கன்னி ஆனால், அதிக சிநேகிதருடையவன்
7. துலாம் ஆனால், வல்லமைசாலி
8. விருச்சிகம் ஆனால், நற்குணவான், கொடையாளி, தனமும் புத்திரரும் அதிகம் உள்ளவன்
9. தனுசு ஆனால், அரசன் அல்லது அரசனுக்குச் சமானமானவன்
10. மகரம் ஆனல் தேச சஞ்சாரி, கவலையுடையவன்
11. கும்பம் ஆனால், சுகவான்
12. மீனம் ஆனால், அரசன் அரசனுக்குச் சமானமானவன்

(6) சுக்கிரன் இருக்கும் இராசி :

1. மேடம் ஆனால் பெண்களிடத்தில் பிரியமுள்ளவன்
2. இடபம் ஆனால், சிநேகிதர், உறவினர், பொருள், ஞானம் என்பவற்றில் அதிக பற்றுடையவன்
3. மிதுனம் ஆனால், வித்துவான், தனவான், ஞானவான்
4. கடகம் ஆனால், எதற்கும் பயப்படுபவன்
5. சிங்கம் ஆனால், மந்தகுண புத்திரரையுடையவன்



6. கன்னி ஆனால், இழிந்த செயல்கள் புரியப் பின் நிற்காதவன்
7. துலாம் ஆனால், அரசர் நேசமுடையவன்
8. விருச்சிகம் ஆனால், துட்ட பெண்கள் சகவாசம் உடையவன்
9. தனுசு ஆனால், சனங்களுக்கு தலைமை வகிப்பவன்
10. மகரம் ஆனால், போகி
11. கும்பம் ஆனால், கன்னிப் பெண்கள் சகவாசமுள்ளவன்
12. மீனம் ஆனால், வித்துவான், குணவான், தனவான்

(7) சனி இருக்கும் இராசி :

1. மேடம் ஆனால், மூர்க்கக் குணமுடையவன்
2. இடபம் ஆனால், அதிக தனமில்லாதவன்
3. மிதுனம் ஆனால், தனம், புத்திரர், புத்தி என்பன இல்லாதவன்
4. கடகம் ஆனால், தாய் சுகமில்லாதவன்
5. சிங்கம் ஆனால், அபகீர்த்தியுடையவன்
6. கன்னி ஆனால், அற்ப தனவான், அற்ப புத்திரவான்
7. துலாம் ஆனால், கிராமத்துக்கு அதிகாரியாயுள்ளவன், ஒரு இனத்துக்குத் தலைவனுக உள்ளவன்
8. விருச்சிகம் ஆனால், கெட்ட மனதுள்ளவன்
9. தனுசு ஆனால், தனம், புத்திரர், மனைவி முதலிய சுகமுடையவன்
10. மகரம் ஆனால், அரசனுக்குப் பிரியமுள்ளவன்
11. கும்பம் ஆனால், தனவான்
12. மீனம் ஆனால், அழகும், நல்ல குணங்களுமுள்ளவன்

விசேட குறிப்பு

இங்கு கூறப்பட்ட 1. நாட்பலன், 2. மாதப் பலன், 3. நட்சத்திரப் பலன், 4. திதிப்பலன், 5. கரணப் பலன், 6. யோகப்பலன், 7. காலஹோரைப்பலன், 8. முக்குணவேளைப்பலன், 9. உதய இலக்கினப் பலன், 10. சந்திர இலக்கினப்பலன், என்பன யாவும் உத்தேசமான ஒரு பொதுப் பலனாகும்.

இப்பலன் பல்வேறு காரணங்களினால் மேலும் சிறப்புள்ள பலனாகவோ, பலன் குறைந்ததாகவோ, முற்றாக வேறுபட்ட பலனுள்ளதாகவோ மாறுபடலாம்

(அ) ஞாயிற்றுக் கிழமையில் பிறந்தவர்கள் எல்லோரும் ஒரே பலனைக் கொண்டிருக்க முடியாது என்பதை உணரவேண்டும். ஏனெனில் வருடத்தில் உள்ள ஞாயிறுகள் 12 மாதங்களில் வருவதால் ஒவ்வொரு மாதத்து ஞாயிறும் விகற்பமடைகிறது. ஒருமாதத்தில் வரும் நான்கு ஞாயிறுகளும், வெவ்வேறு திதிகளுடன் வரும்

(ஆ) ஆவணிமாதத்தில் பிறந்தவர்கள் எல்லோரும் ஒரே பலனைக் கொண்டிருக்க முடியாது என்பதையும் உணரவேண்டும். ஏனெனில் வருடத்தில் உள்ள மாதங்கள் 60 விகற்பமான வருடங்களில் வருவதால் ஒவ்வொரு வருடத்து ஆவணியும் விகற்பமடைகின்றது.

(இ) இப்படியே நட்சத்திரம், திதி, கர்ணம், யோகம், ஓரை, முக்குணவேளை என்பனவும் பற்பல விகற்பங்களோடு நடப்பதால் ஒரே பலன் இருக்கமாட்டாது என்பதை உணரவேண்டும்.

(ஈ) உதய இலக்கினப் பலனில் ஒரே உதய இலக்கினமுடைய பலருக்கு ஒரேமாதிரிப் பலன் நடக்க மாட்டாது. ஏனெனில் ஒவ்வொருவருடைய உதய இலக்கினத்தையும் கிரகங்கள் ஒரே மாதிரியாகப் பார்ப்பதில்லை. ஒரு உதய இலக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பல பார்த்திருக்கும், அல்லது ஒரு சுபக்கிரகம் மாத்திரம் பார்த்திருக்கும், அல்லது ஒரு சுபக்கிரகமும் பாராது இருக்கலாம். பலபாவக்கிரகங்கள் பார்த்திருக்கலாம். ஒரு பாவக்கிரகம் மாத்திரம் பார்த்திருக்கலாம். சுபரும் பாபரும் சேர்ந்து பார்த்திருக்கலாம் இப்படிப் பல விகற்பங்கள் ஏற்படுவதால் ஒரே மாதிரியான பலன் ஏற்படாது என்பதை உணரவேண்டும்.

(உ) சந்திர இலக்கினத்துப் பலனும் மேற்கூறிய உதய இலக்கினப் பலன் வேறுபடுவது போல மாறுபடும்.



## உதாரண ஜாதக

### பொதுப்பலன் அறிதல்

நாம் உதாரணத்துக்காகக் கற்றுக் கொண்ட ஜாதகக் குறிப்பை(38ஆம் பக்கத்தில் உள்ள சோதிட குறிப்பை) ஆராய்ந்து பலன் எழுதிப் பார்ப்போம்.

1938 ஆவணி 9 ஆந் திகதி (25-8-38) பிறந்த இந்த ஜாதகனுக்குரிய பலன் :

1. **நாட் பலன் :** வியாழன்: சத்தியம், தர்மம், விவேகம், உடையவன், சந்தோசவான் (பக்கம் 44 பார்க்க)
2. **மாதப் பலன் :** ஆவணி: தெய்வபக்தியுடையவன், விசுவாசமுள்ளவன், செல்வந்தர் சிநேகமுடையவன். (பக்கம் 44 பார்க்க)
3. **நட்சத்திர பலன் :** மகம் 3 ஆம் பாதம் : மகப்பொதுப்பலன்: அழகன், விவேகி, அற்பநித்திரையுடயவன் வலதுபுற மறுவுடையவன், நீராடும் விருப்புடையவன், பல இடங்களிலும் சஞ்சரிப்பவன், அளவாகப் பேசுபவன், தெய்வபக்தி, பிதுர் பக்தியுடையவன், பல நூலறிவுடையவன், சேர்ந்தவர்களுக்கு இயைந்த நடையுடையவன் பேராசையுடையவன். (பக்கம் 49 பார்க்க)

**8ஆம் கால் மகம்** சிறப்புப்பலன் : சாதுவரன குணமுடையவன், கடினசித்தமுடையவன் பேராசையுடையவன், புனிதமுடையவன். (பக்கம் 49 பார்க்க)

4. **திதிப்பலன் :** அமாவாசை: சாந்தமான குணமுள்ளவன், தாய் தந்தையர்மேல் பக்தியுடைவன், கூடுதலும் குறைதலுமான, செல்வநிலையுள்ளவன், மனக் கிலேசமுள்ளவன், மரியாதையான நடையுடையவன்.
5. **கரணப் பலன் :** கிம்ஸ்துக்கினம் : சஞ்சலமுடையவன், தந்திரமுள்ளவன், பலராலும் விரும்பப்படுபவன். (பக்கம் 60 பார்க்க

6. யோகப் பலன்: சிவம்: மாதா பிதாவைப் பேணுபவன், நல்ல
சாத்திரம் படித்து அதன்படி நடப்பவன்
(பக்கம் 61 பார்க்க)

7. ஓரைப் பலன்: சுக்கிர ஓரை: விவாகப் பயனுடையவன்.
(பக்கம் 62 பார்க்க)

8. முக்குணவேளைப் பலன்: இராசதம்: கல்வியுடையவன், நற்
புத்தியுடையவன், சுகமுடையவன், தேச உப
காரம் செய்பவன், பேம்பாடாய் நடப்பவன்
(பக்கம் 62 பார்க்க)

9. உதயலக்கின பலன்: மகரம்: திரண்டு உருண்ட நேத்திரத்தை
யுடையவன், நல்ல தேகமும் நற்புத்தியுமுடை
யவன், பிறர் அறியாத இடத்தில் மறு உடை
யவன், வாசனை மலர்களில் பிரியமுடையவன்,
மனைவியிடத்தில் பிரியமுள்ளவன், மிகுந்த
புத்திரரையுடையவன், வாய்ச்சாலமும் உபாய
புத்தியும் உள்ளவன், பட்சிகளை இம்சிப்பவன்,
சுகசீவனம் உடையவன், இலக்கினத்தைச்
சுபர் நோக்கில் 67 வயது ஆயுள் உடையவன்
(பக்கம் 65 பார்க்க)

10 சந்திர லக்கின பலன்: சிங்கம்: முகலட்சணம் உடையவன்
கர்வ நடையுடையவன், தைரியபுத்தியில்லா
தவன், அற்பகாரியங்களிலே கோபிப்பவன்,
தயவுக் குறைவானவன், மனத்துக்கமுடை
யவன், கடிந்துபேசுபவன், உற்சாகமுள்ளவன்,
சாத்திர விருப்புள்ளவன், பெண்களோடு கலகம்
செய்பவன், மலை வனம் முதலிய இடங்களில்
சஞ்சரிக்க விருப்புடையவன், பொருள் ஈகையு
டையவன், தாம்பூல விருப்புள்ளவன்
(பக்கம் 67 பார்க்க)

**11.** கிரகங்கள் இராசிகளில் இருக்கும் பலன் :

1. சூரியன் சிங்கத்தில் இருக்கும் பலன் :
அனேக வித்தை அறிந்தவன், தந்திரசாலி,
சத்துருவை ஜெயிப்பவன்.
(பக்கம் 69 பார்க்க)



2. சந்திரன் சிங்கத்தில் இருக்கும் பலன் :
கர்வமுள்ளவன், வீரம் உள்ளவன், பெண்களைத்
துவேஷிப்பவன், அற்ப புத்திரரையுடையவன்,
பல்நோய், வயிற்றுநோய் உள்ளவன்.
(பக்கம் 70 பார்க்க)

3. செவ்வாய் கற்கடகத்தில் இருக்கும் பலன் :
அதிக தனவந்தன், இராசப் பிரியன்
(பக்கம் 71 பார்க்க)

4. புதன் கற்கடகத்தில் இருக்கும் பலன் : செலவாளி
(பக்கம் 71 பார்க்க)

5. குரு கும்பத்தில் இருக்கும் பலன் : சுகவான்
(பக்கம் 72 பார்க்க)

6. சுக்கிரன் கன்னியில் இருக்கும் பலன் :
இழிந்த செயல்கள் புரியப் பின்நிற்காதவன்
(பக்கம் 73 பார்க்க)

7. சனி மீனத்தில் இருக்கும் பலன் :
அழகும் நல்ல குணங்களும் உள்ளவன்
(பக்கம் 73 பார்க்க)

இங்கு கூறப்பட்ட 11 அம்சங்களிலும் பொருந்தியுள்ள குணங்களை ஒன்று திரட்டி ஜாதகனின் பொதுவான குணநலன்களை அறிந்து கொள்வதே முறை.

---

விரிவான சோதிட அறிவைப் பெற பின்வரும் நூல்களை வாசிக்கலாம்.

1. சோதிட அரிச்சுவடி (ப. வடிவேலு செட்டியார்)
2. ஜாதக பாஸ்கரன் (வி. சபாபதி ஐயர்)
3. சோதிட வினாவிடை (சி. அகிலேஸ்வர சர்மா)
4. சோதிட சுயபோதினி (C. G. ராஜன்)
5. சாராவளி (ஸ்ரீ. கல்யாணவர்மனர்)
6. பலதீபிகை (ஸ்ரீ. மந்திரேசுவர முனிவர்)
7. ஜாதக அலங்காரம்

# சோதிடத் திறவுகோல்

## அனுபந்தம்

### சோதிட வினுவிடை

1. ஒரு நாழிகை என்பது எத்தனை நிமிடம் கொண்டது?
ஒரு நாழிகை 24 நிமிடம் கொண்டது.

2. ஒரு நிமிடம் எத்தனை விநாடி கொண்டது?
ஒரு நிமிடம் $2\frac{1}{2}$ வினுடி கொண்டது.

3. ஒரு நாளில் எத்தனை நாழிகை உண்டு?
ஒரு நாளில் 60 நாழிகை உண்டு

4. ஒரு மணித்தியாலம் எத்தனை நாழிகை கொண்டது?
ஒரு மணித்தியாலம் $2\frac{1}{2}$ நாழிகை கொண்டது.

5, 4 மணி 32 நிமிடத்தை நாழிகை விநாடியில் கூறுக?
11 நாழிகை 20 விநாடி.

6. P. M. மணி என்பது என்ன?
மத்தியானம் 12 மணி தொடக்கம் இரவு 12 மணி வரை உள்ள காலம் P. M. மணி எனப்படும்.

7. A. M. மணி என்பது என்ன?
இரவு 12 மணி தொடக்கம் மத்தியானம் 12 மணி வரை உள்ள காலம் A. M. மணி எனப்படும்.

8. நாள்களை எந்த இருவகையாக நோக்க வேண்டும்?
ஆங்கில நாள், தமிழ் நாள் என்ற இருவகையில் நோக்க வேண்டும்.

9. ஆங்கில நாள் என்ருல் என்ன?
ஒரு நடு இரவு 12 மணி தொடக்கம் அடுத்த நடு இரவு 12 மணி வரை உள்ள 24 மணித்தியாலங்கள் ஆங்கில நாள் எனப்படும்.

10. தமிழ் நாள் என்ருல் என்ன?
ஒரு சூரிய உதயம் தொடக்கம் அடுத்த சூரிய உதயம் வரையுள்ள 60 நாழிகை தமிழ் நாள் எனப்படும்.

11. ஒரு வாரத்தின் 3 ஆம், 7ஆம் நாள்கள் எவை?
3 ஆம், நாள் செவ்வாய், 7 ஆம் நாள் சனி.



12. ஆங்கில மாதங்களில் 2ஆம், 8ஆம் மாதங்கள் எவை?
2ஆம் மாதம் பெப்ருவரி, 8ஆம் மாதம் ஒகஸ்ற்

13. தமிழ் மாதங்களில் 4ஆம் 9ஆம் மாதங்கள் எவை?
4ஆம் மாதம் ஆடி, 9 ஆம் மாதம் மார்கழி.

14. அயனம் எத்தனை வகைப்படும்?
உத்தராயணம்,தட்சணுயனம் என இருவகைப்படும்.

15. தமிழ் வருடங்களின் பெயர்கள் எத்தனை? 48 ஆவது வருடத்தின் பெயர் என்ன?
தமிழ் வருடப் பெயர்கள் அறுபது.
48 ஆவது வருடம் ஆனந்த வருடம்.

16. விடகம்பம் பிரீதி என்று செல்லும் காலப் பகுப்புக்களாகிய யோகங்கள் எத்தனை?
யோகங்கள் 27.

17. கரணங்களின் பிரிவு எத்தனை?
காரணங்களின் பிரிவு பதினென்று

18. நட்சேத்திரங்களின் தொகை எவ்வளவு? இரண்டாவது நட்சேத்திரப் பெயர் என்ன?
நட்சேத்திரத் தொகை 27. இரண்டாவது நட்சேத்திரப் பெயர் பரணி.

19. ஆண் நட்சேத்திரங்கள் எத்தனை? பெண் நட்சேத்திரங்கள் எத்தனை?
ஆண் நட்சேத்திரங்கள் 8. பெண் நட்சேத்திரங்கள் 16

20. அலி நட்சேத்திரங்களின் பெயர்களைக் கூறுக·
மிருகசீரிடம், மூலம், சதயம்

21. இராசிகள் 12 இன் பெயர்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. மேடம் | 2. இடபம் | 3. மிதுனம் |
| 4. கற்கடகம் | 5. சிங்கம் | 6. கன்னி |
| 7. துலாம் | 8. விருச்சிகம் | 9. தனு |
| 10. மகரம் | 11. கும்பம் | 12. மீனம் |

22. விருச்சிகம், கும்பம், கற்கடகம் என்னும் இராசிகளின் உருவங்கள் எவை?
விருச்சிகம் : தேள்
கும்பம் : குடம்
கற்கடகம் : நண்டு

23. கிழக்குத் திசைக்குரிய இராசிகள் எவை?
மேடம், இடபம், மிதுனம்

24. சரராசிகள் நான்கின் பெயர்களை எழுதுக.
மேடம், கற்கடகம், துலாம், மகரம்

25. பெண் இராசிகளின் பெயர்களை எழுதுக.
இடபம், கற்கடகம், கன்னி,
விருச்சிகம், மகரம், மீனம்

26. ஒற்றை இராசிகள் எவை?
மேடம், மிதுனம், சிங்கம்
துலாம், தனு, கும்பம்.

27. யாழ்ப்பாணத்துக்குரிய இராசிமானங்களை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மேடம் | 4.5 | 7. | துலாம் | 5.09 |
| 2. | இடபம் | 5.07 | 8. | விருச்சிகம் | 5.26 |
| 3. | மிதுனம் | 5.27 | 9. | தனு | 5.20 |
| 4. | கற்கடகம் | 5.19 | 10. | மகரம் | 4.51 |
| 5. | சிங்கம் | 5.01 | 11. | கும்பம் | 4.23 |
| 6. | கன்னி | 4.56 | 12. | மீனம் | 4.16 |

28. நவகிரங்களின் பெயர்களை எழுதுக

| | | |
|---|---|---|
| 1. சூரியன் | 2. சந்திரன் | 3. செவ்வாய் |
| 4. புதன் | 5. வியாழன் | 6. வெள்ளி |
| 7. சனி | 8. ராகு | 9. கேது |

29. புதிதாகச் சேர்க்கப்பட்ட கிரகங்கள் மூன்று எழுதுக.
யூரனஸ், நெப்ரியூன், புளூட்டோ

30 நவக்கிரகங்களில் ஆண்கிரகங்கள் எவை?
சூரியன், செவ்வாய், வியாழன்

31 நவக்கிரகங்களில் பெண்கிரகங்கள் எவை?
சந்திரன், சுக்கிரன், ராகு

32. அலிக்கிரகங்கள் எவை?
புதன், சனி, கேது

33. திரிகோண இராசிகள் எவை?
1ஆம், 5ஆம், 9ஆம், இடராசிகள் திரிகோண இராசிகள் எனப்படும்.

34. கேந்திர இராசிகள் எவை?
1ஆம், 4ஆம், 7ஆம், 10ஆம் இட இராசிகள் கேந்திர இராசிகள் எனப்படும்.



35. நவக்கிரகங்கள் ஆட்சி பெறும் இராசிகளை எழுதுக.

| | | |
|---|---|---|
| சூரியன் | : | சிங்கம் |
| சந்திரன் | : | கற்கடகம் |
| செவ்வாய் | : | மேடம், விருச்சிகம் |
| புதன் | : | மிதுனம், கன்னி |
| வியாழன் | : | தனு, மீனம் |
| வெள்ளி | : | இடபம், துலாம் |
| சனி | : | மகரம், கும்பம் |
| ராகு | : | கன்னி |
| கேது | : | மீனம் |

36. நவக்கிரகங்கள் உச்சமடையும். இராசிகளை எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரியன் | : | மேடம் | வெள்ளி | : | மீனம் |
| சந்திரன் | : | இடபம் | சனி | : | துலாம் |
| செவ்வாய் | : | மகரம் | ராகு | : | விருச்சிகம் |
| புதன் | : | கன்னி | கேது | : | விருச்சிகம் |
| வியாழன் | : | கற்கடகம் | | | |

37. நவக்கிரகங்கள் நீசமடையும் இராசிகளை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரியன் | : | துலாம் | வெள்ளி | : | கன்னி |
| சந்திரன் | : | விருச்சிகம் | சனி | : | மேடம் |
| செவ்வாய் | : | கற்கடகம் | ராகு | : | — |
| புதன் | : | மீனம் | கேது | : | — |
| வியாழன் | : | மகரம் | | | |

38. நவக்கிரகங்கள் ஒவ்வொரு இராசியிலும் சஞ்சரிக்கும் கால அளவை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரியன் | : | 1 மாதம் | வெள்ளி | : | கன்னி |
| சந்திரன் | : | $2\frac{1}{4}$ நாள் | சனி | : | $2\frac{1}{2}$ மரதம் |
| செவ்வாய் | : | $1\frac{1}{2}$ மாதம் | ராகு | : | $1\frac{1}{2}$ வருடம் |
| புதன் | : | 1 மாதம் | கேது | : | $1\frac{1}{2}$ வருடம் |
| வியாழன் | : | 1 வருடம் | | | |

39. ஒரு இராசிக்கு எத்தனை நட்சேத்திர காலம் வகுக்கப்பட்டுள்ளது?

ஒரு இராசிக்கு $2\frac{1}{4}$ நட்சேத்திர காலம் வகுக்கப்பட்டுள்ளது.

40. மூலம், பூசம், அவிட்டம், என்னும் நட்சேத்திரங்கள் எந்த எந்த இராசிக்கு உரியன?

| | | |
|---|---|---|
| மூலம் | : | தனுசுக்கு |
| பூசம் | : | கற்கடகத்துக்கு |
| அவிட்டம் | : | மகரத்துக்கு முன்னரை<br>கும்பத்துக்கு பின்னரை |

41. நவக்கிரகங்களுக்குரிய திசா வருடங்களின் அளவு என்ன?

| | |
|---|---|
| சூரிய திசை | 6 வருடம் |
| சந்திரன் திசை | 10 வருடம் |
| செவ்வாய் திசை | 7 வருடம் |
| புதன் | 17 வருடம் |
| வியாழன் | 16 வருடம் |
| வெள்ளி | 20 வருடம் |
| சனி | 19 வவடம் |
| ராகு | 18 வருடம் |
| கேது | 7 வருடம் |

42. பரணி, புனர்பூசம், ரோகிணி என்னும் நட்சேத்திரங் களுக்குரிய மகாதிசைகள் எவை?

| | | |
|---|---|---|
| பரணி | : | வெள்ளிதிசை |
| புனர்பூசம் | : | வியாழதிசை |
| ரோகிணி | : | சந்திரதிசை |

43. மகாதிசைநடக்கும் கிரக ஒழுங்கு முறையை எழுதுக

1. சூரிய திசை 2. சந்திர திசை 3. செவ்வாய் திசை
4. ராகு திசை 5. வியாழ திசை 4. சனி திசை
7. புதன் திசை 8 கேது திசை 9. சுக்கிர திசை

44. திசா புத்திகள் எத்தனை உண்டு?

திசாபுத்திகள் ஒன்பது உண்டு.

45. திசாபுத்திகள் எந்த வரிசைப்படி நடக்கும்?

திசா நாதனுடைய புத்தியே முதலாவதாக நடக்கும். அதன்பின், திசாவருட ஒழுங்குபோல் நடக்கும்.

**உதாரணம் :** புதன் திசையெனில்.

முதல் புதன் புத்தி, அதன் பின் கேது புத்தி, பின் சுக்கிர புத்தி, சூரியபுத்தி, சந்திரபுத்தி, செவ்வாய்புத்தி, ராகுபுத்தி, வியாழபுத்தி, சனிபுத்தி என்று முறையே நடக்கும்.



46. திசாபுத்தியின் கால அளவைக் கணக்கிடுவது எப்படி?

திசா நாதனின் திசாவருடத்தையும், புத்திநாதனின் திசாவருடத்தையும் பெருக்கி 10 ஆல் வகுக்க திசா புத்தியின் கால அளவு மாதத்தில் வரும்

**உதாரணம் :** சூரிய திசை ராகுபுத்தி எவ்வளவு காலம் நடக்கும்?

சூரிய திசை 6 வருடம், ராகுதிசை 18 வருடம்.

$6 \times 18 = 108$

108 ஐ 10ஆல் வகுக்க $= 10\frac{8}{10}$ மாதம்.

ஃ சூரிய திசை ராகுபுத்தி - 10 மாதம் 24 நாள்

47. இலக்கினம் முதலாக 12 இடங்களும் (12 பாவங்களும்), எந்த எந்தக் காரகங்களைக் குறிக்கும்?

இலக்கினம் முதலாக:

1 ஆம் இடம் உடல்
2 ஆம் இடம் வாக்கு
3 ஆம் இடம் சகோதரர்
4 ஆம் இடம் தாய்
5 ஆம் இடம் புத்திரர்
6 ஆம் இடம் சத்துரு
7 ஆம் இடம் களத்திரம்
8 ஆம் இடம் ஆயுள்
9 ஆம் இடம் தந்தை, பிதுர்
10 ஆம் இடம் தொழில்
11 ஆம் இடம் இலாபம்
12 ஆம் இடம் சயனம், செலவு

48. ஒவ்வொரு பாவத்துக்கும் உரிய கிரகங்கள் எவை?

1 ஆம் பாவம் சூரியன்
2 ஆம் பாவம் குரு
3 ஆம் பாவம் செவ்வாய்
4 ஆம் பாவம் சந்திரன், புதன்
5 ஆம் பாவம் குரு
6 ஆம் பாவம் சூரியன், சனி
7 ஆம் பாவம் சுக்கிரன்
8 ஆம் பாவம் சனி
9 ஆம் பாவம் சூரியன், குரு, சனி
10 ஆம் பாவம் சூரியன், புதன், குரு
11 ஆம் பாவம் குரு
12 ஆம் பாவம் சனி

4.9 களத்திரகாரகன், பிதுர்காரகன், புத்திரகாரகன் என்பவர்கள் யாவர்?

களத்திரகாரகன் — சுக்கிரன்
பிதுர்காரகன் — சூரியன் (குரு, சனி)
புத்திரகாரகன் — குரு

50. சூரியன், புதன், சுக்கிரன் என்பவற்றுக்கு மித்திரக் கிரகங்கள் எவை?

சூரியனுக்கு மித்துரு — குரு
புதனுக்கு மித்துரு — சந்திரன், செவ்வாய், குரு, சுக்கிரன், சனி
சுக்கிரனுக்கு மித்துரு — செவ்வாய், புதன், குரு, சனி

51. சந்திரன், வியாழன், சனி என்பனவற்றுக்குச் சத்துருக் கிரகங்கள் எவை?

சந்திரனுக்குச் சத்துரு — சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி
வியாழனுக்குச் சத்துரு — செவ்வாய்
சனிக்குச் சத்துரு — சூரியன், சந்திரன், செவ்வாய்

52. செவ்வாய் குரு, சனி என்பன முழுபலத்துடன் நோக்கும் இடங்கள் எவை?

தாம் தாம் இருக்கும் இடத்திலிருந்து.
செவ்வாய் — 4, 7, 8 ஆம் இடங்கள்.
குரு — 5, 7, 9 ஆம் இடங்கள்,
சனி — 3, 10, ஆம் இடங்கள்

53. கிரகங்களின் மறைவிடங்கள் எவை?

6, 8, 12 ஆம் இடங்கள் மறைவிடங்களாகும்.

54. கிரகங்களின் மூலத்திரிகோண இராசிகள் எவை?

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு | சிங்கம் | 20° |
| சந்திரனுக்கு | இடபம் | 27° |
| செவ்வாய்க்கு | மேடம் | 18° |
| புதனுக்கு | கன்னி | 5° |
| வியாழனுக்கு | தனு | 13° |
| சுக்கிரனுக்கு | துலாம் | 10° |
| சனிக்கு | கும்பம் | 20° |
| ராகு, கேது | கும்பம் | |



55. முக்குணவேளைகள் எவை?

சாத்விகவேளை, இராசதவேளை, தாமசவேளை என்பனவாகும்.

56. அயனங்கள் எத்தனை வகைப்படும்?

1. தைமாத முதல் ஆனி முடியவுள்ள காலம் உத்தராயனம் என்றும்
2. ஆடிமாதமுதல் மார்கழி முடியவுள்ள காலம் தட்சணாயனம் என்றும் இருவகைப்படும்.

57. சந்திர பட்சங்கள் எத்தனை வகைப்படும்?

1. வளர்பிறைக் காலம் சுக்கிர பட்சம் என்றும்
2. தேய்பிறைக் காலம் கிருஷ்ண பட்சம் என்றும் இரு வகைப்படும்.

58. உதய இலக்கினமென்றால் என்ன?

ஒரு சிசு எந்த இராசியில் பிறக்கின்றதோ அந்த இராசி உதய இலக்கினம் எனப்படும்.

59. சந்திர இலக்கினம் என்றால் என்ன?

ஒரு சிசு பிறக்கும் போது எந்த இராசியில் சந்திரன் நின்றதோ அந்த இராசி சந்திர இலக்கினம் அல்லது சந்திர இராசி எனப்படும்.

60. துவாதச பலன் என்றால் என்ன?

உதய இலக்கினம் முதலாகப் பன்னிரண்டு பாவங்களுக்கும் தனித்தனி வகுக்கப்பட்டுள்ள பலன்களாகும்.

## இராசிப் பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மேடம் | Mesha | *Aries* |
| 2. | இடபம் | Vrishabha | *Taurus* |
| 3. | மிதுனம் | Mithuna | *Gemini* |
| 4. | கற்கடகம் | Kataka | *Cancer* |
| 5. | சிங்கம் | Simha | *Leo* |
| 6. | கன்னி | Kanya | *Virgo* |
| 7. | துலாம் | Thula | *Libra* |
| 8. | விருச்சிகம் | Vrischika | *Scorpio* |
| 9. | தனுசு | Dhanus | *Sagittarius* |
| 10. | மகரம் | Mahara | *Capricorn* |
| 11. | கும்பம் | Kumbha | *Aquarius* |
| 12. | மீனம் | Meena | *Pisces* |